# தமிழ் நயம் 2005




## றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம்




1,2,3,4 அறைகளைக்கொண்ட தொடர்மாடி மனைகள்.

- Land Maark Court
  No:33, Rudra Mawatha, Colombo-6.
  (18 Units) Handed Over
- Land Maark Residencies
  No:37, Rudra Mawatha, Colombo-6.
  (21 Units) Handing over on February 2006
- Land Maark Mansion
  No:6, Madangawatte Lane (Off Arethusa Lane), Colombo-6.
  (12 Units) Handing over on February 2006

* On Time
* Quality Works
* Advanced Technology System
* Construction by Professionals and many more features...

**LAND MAARK ENGINEERING (PVT) LTD.**
(BOI Approved Company)
No:33, Rudra Mawatha, Wellawatte, Colombo-06.
Tel: 0773 113316 / 0777 563930 / 2361377
Fax: 4512059 email: info@landmaark.com
Web: www.landmaark.com www.landmaark.org

www.apex.lk



தமிழ்நயம் 2008
வெளியீடு:
றோயல் கல்லூரி
தமிழ் இலக்கிய மன்றம்

*With*
*Best Compliments*
*From*

# car care

**Computerised**

- Wheel Alignment
- Wheel Balancing
- Fixed Cambering
- Tyre Changing
- Head Light Testing
- Shock Testing



**No. 15, Galle Road,**
**Colombo-06**
**Tel: 2586545, Fax: 2555588**

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம்

பெருமையுடன் வழங்கும்

# கலை விழா 2005

| | | |
|---|---|---|
| காலம் | : | வெள்ளிக் கிழமை 09.12.2005 |
| நேரம் | : | பிற்பகல் 4.30 மணி |
| இடம் | : | நவரங்கஹல கல்லூரி மண்டபம் |
| பிரதம விருந்தினர் | : | தை. தனராஜ்<br>(நிபுணத்துவ ஆலோசகர்<br>தொலைக்கல்வி நவீனமாக்கல் செயற்திட்டம்<br>கல்வி அமைச்சு) |
| கௌரவ விருந்தினர் | : | திரு. H.A. உபாலி குணசேகர<br>அதிபர், றோயல் கல்லூரி, கொழும்பு - 7 |

*Royal College*
*Tamil Literary Association*
*Proudly Presents*

# Kalai Vizha 2005

| | | |
|---|---|---|
| Date | : | Friday 09.12.2005 |
| Time | : | 4.31 p.m |
| Venue | : | 'Navarangahala' |
| Chief Guest | : | T. Thanarajah<br>(Consultant Distance Education<br>Ministry of Education) |
| Guest of Honour | : | Mr. H.A. Upali Gunasekara<br>(Principal, Royal College,<br>Colombo - 07) |

With
Best Compliments
From

Commercial Photo & Video Graphic

# Anton



Tel: 0777 251322

0712318400,0777 593224

# சமர்ப்பணம்

பத்திரிகை சுதந்திரம்
பறித்தெடுக்கப்பட்ட...
கலியுகத்தில்,

உலகின் விடிவிற்காய்
உண்மைகள் உரைத்திட்ட
பாவத்தால்...

இரும்புச் சன்னங்களுக்கு
இரையாகி விட்ட
ஊடகவியலாளர் தம்
நெஞ்சத் திறத்துக்கு

இந்நூல் சமர்ப்பணமே...

பா. பார்த்திபன்


வளையாபதி
மணிமேகலை
சிலப்பதிகாரம்

# School of Our Fathers

(Words and Music bylate Maj.H.L.Read, Principal 1921-31)

*Thy spirit first to life a woke,*
*In eightee hundred and thirty, - five,*
*Beneath the sway of Marsh and Booke,*
*Thence forth did Lanka's learning thrive.*

*Refrain:*

*School where our fathers learnt the way before us,*
*Learnt of books and learnt of men through thee we'll do the some,*
*True to our watchword "Disce Aut Discede"*
*We will learn of books and men, and learn to play the game.*

*Within thy shade our fathers trod,*
*The path that leads to man's eastae,*
*They have repaid the debt they owed,*
*They kept the fame inviolate.*

*And we their loyal some now bear*
*The torch, with hearts as sound as oak*
*Our lusty throats now raise a cheer*
*For Hartley, Harward, Marsh and Boake.*

# தமிழ்தாய் வாழ்த்து

நாவன்மை தந்துஎமை - மொழிபயிற்ற
வழிதந்த முத்தமிழ்த்தாயே....
ஐவகை நிலமும் தந்து - அவையொழுக
பல ஒழுக்கமும் தந்து, முத்துமுத்தாய்
வாகைசூடும் முத்தமிழ்த்தாயே....

செந்தமிழை செப்பிச்செப்பி
'சே' என வெறுத்தவர்கள்....
வெட்டவெட்ட சாயாமல் !
எட்டுத்திக்கும் கொடிகட்டி !
விதைத்தாலும் முளைக்கும் வண்ணம்
பாருலகில் பைந்தமிழ் பரப்பி

பாவலர்கள் பாடிவர
காப்பியங்கள் அணிசேர்ந்து
இலக்கணமும், இலக்கியமும்
இயன்றிருந்தும்....
இயப்பியெமை இன்புறவைத்த
இனிய தமிழ்த்தாயே....

வேத்தியர்கள் நாம்கூடி - எம்
வேத்தியத்தாய் நேரெதிரே
மகுடமேற்றுகிறோம் தமிழ் நயமாய்
தவிர்த்து ஓய தவறுகளை.

ஜே.நிரோஜன்

# வதனத்தின் வார்த்தைகள்




வளர்ந்து வரும் தொழில்நுட்பம் - தன்

வலைப் பின்னலுக்குள் பாருலகை

சிறை பிடித்து நிற்கும் நவயுகத்தில்...

விஞ்ஞானத்தின் விந்தைகளால்

விரையும் இன்றைய

வாழ்வியில் கோலங்களுக்குள்...

பண்டைத் தமிழ் நன்றே

பண்பட்டு விளங்க

பாரெங்கும் பரவும் வகை செய்தல் நம்...

தலையாய கடன் என்ற

உயர்வான நோக்கில் வேத்தியர் நாமும்

செய்வோமே இயல் நற்பணி...

பா. பார்த்திபன்

*With*


*Best Compliments*

*From*

# Project Prospects (Pvt) Ltd.

[Duty Free Shop]

Electronic Goods & Jewelers



No.14A, Arrival Terminal,
Bandaranayake International Airport,
Katunayake,
Sri Lanka.
Tel: 00 94 11 4832602
Fax: 00 94 11 4832601

# நிகழ்ச்சி நிரல்

பாடசாலை கீதம்

தமிழ்த்தாய் வாழ்த்து

மங்கள விளக்கேற்றல்

வரவேற்புரை

வரவேற்பு நடனம்

அதிபர் உரை

வரவேற்பு நடனம்

மலர் வெளியீடு

பரிசளிப்பு

பல்லியம்

பிரதம விருந்தினர் உரை

விவாத அணி அறிமுகம்

நடனம்

சிறப்பு விருந்தினர் கௌரவிப்பு

'எரிந்து போன கனவுகள்' – நாடகம்

பரிசளிப்பு

மேலைத்தேய நடனம்

நன்றியுரை

புதுமைத் தாளலயம்

பாடசாலை கீதம்

தேசிய கீதம்

# Programme

School Song
Tamil Thai Vaalthu
Lighting of the Oil Lamp
Welcome Speech
Welcome Dance
Speech by the Principal
Welcome Dance
Release of 'Thamizh Nayam'
Prize - Giving
Palliyam
Speech by the chief Guest
Debating team Introduction
Western Dance
"Erinthu Pona Kanavuhal" Drama
Inter School Prize Giving
Vote of Thanks
'Pudumai Thala Layam'
School Song
National Anthem

# நயத்தோர் நவில்வது

தமிழன்னைக்கு மகுடம் சூட்டும் மகத்தான முயற்சியின் ஓரங்கமாய் இந்நயம் தன்னை இனிதே நயத்து தாயவள் திருவடியில் சமர்ப்பிப்பதை எண்ணி பெருமையும் பெருமகிழ்வும் அடைகிறோம். ஒளிராய் இருந்த ஓரிரு முகங்களிலும் வடுக்களாய் ஆங்காங்கே இருளும் உருவெடுக்க இருளென மறைந்திருந்த முகங்களில் புதிதாய் மலர்ந்த ஒளியின் நிழலில் இரவுகளும் பகலாக அல்லும் பகலும் அயராது உழைத்து இன்று இந்நயத்தினை வெளியிட்டு வெற்றி காண்கிறோம்.

சக வேத்தியர் ஆக்கங்களும்... சகோதர பாடசாலை மாணவர் தம் ஆக்கங்களும் மூத்தோர் சிலர் மனமுவந்து ஈந்த ஆக்கங்களும் அணிகலனாக அவதரித்திருக்கும் 'தமிழ் நயம் 2005' இன் குறைகளை தவிர்த்து நிறைகள் ஏற்குமாறு தங்களை வேண்டி...

தொடரும் எம் தமிழ்ப்பணி என்று பறைசாற்றி விடை பெறுகிறோம்.

இதழாசிரியர்கள்
எம். எஸ். ஏ. எம். சினாஸ் அலீம்
எம். ஐ. எம். இன்பாஸ்

*With*
*Best Compliments*
*From*

# Wijeya Newspapers Ltd.

No.08, Hunupitiya Cross Road,
Colombo-02

Publishers of:

THE SUNDAY TIMES
Daily Mirror
LANKA Woman
விஜய்
Hi!! The Society Magazine
GO GUYS ONLY
it TIMES

# பிரதம அதிதி அவர்களின் வாழ்த்துச் செய்தி

உயரிய மரபுகளைப் பேணி, பல சாதனைகளை நிலைநாட்டி இந்நாட்டின் முதன்மையான கல்வி நிலையங்களிலொன்றாக விளங்கும் தங்களது கல்லூரியில் கடந்த அறுபத்தேழு ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி ஆற்றிவருகின்ற தமிழ் இலக்கிய மன்றத்தின் ஐம்பத்து மூன்றாவது கலைவிழாவில் அதிதியாகக் கலந்துகொள்வதிலும், அவ்விழாவினையொட்டி மீண்டுமொருமுறை மொட்டவிழ்கின்ற இம்மலருக்கு வாழ்த்துறை வழங்குவதிலும் நான் பேருவகை அடைகின்றேன்.

விஞ்ஞானத்தின் வியத்தகு வளர்ச்சியும் அதன் முக்கிய விழாக்களிலொன்றான தகவல் தொடர்பாடல் நுட்பவயலின் பெரும்பாய்ச்சலும் மனித வாழ்வின் ஒவ்வொரு பரிமாணத்தையும் வெகு வேகமாக உருமாற்றியிருக்கின்றன. முழு உலகுமே ஒரு சின்னஞ்சிறு பூகோலக் கிராமமாக சுருங்கிவிட்டது. புதிய நூற்றாண்டு அறிவு மைய, தகவல்யுகமாக மலர்ந்துள்ளது. இணையம் மனித அறிவை தூரதமாக விரிவாக்குவதோடு இன்று நாம் புத்தறிவாக போற்றுவனவற்றை நொடிப்பொழுதில் 'கலாவதி' யாக்கியும் விடுகின்றது. இன்று ஐந்தாண்டுகளுக்கொரு முறை இரு மடங்காக அதிகரிக்கும் மனித அறிவு 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒவ்வொரு எழுபத்து மூன்று நாட்களிலும் இரட்டித்து விடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

ஆனால் இத்தகைய மாபெரும் வளர்ச்சி வேகம் மனிதனின் பண்பாட்டில், வாழ்வு முறைகளில், உறவு நிலைகளில் எத்தகைய உடன்பாடான, போற்றுதற்குரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது? நாடுகளுக்கிடையில், சமூகங்களுக் கிடையில், இனக் குழுமங்களுக்கிடையில் எந்தளவுக்கு பரஸ்பர நம்பிக்கையையும், நேயத்தையும், சகோதர வாஞ்சனையையும் ஊட்டி வளர்த்துள்ளது? எந்தளவுக்கு தேசத்தில் சாந்தியும், சமாதானமும் வேரூன்றியுள்ளன? அறிவை வளர்க்கின்ற கல்வி நிலையங்கள் எந்தளவுக்கு சமூகத் திறன்களை, மானிட பண்பு கூறுகளை வளர்க்கின்றன?

இவ்வினாக்களுக்கான விடைகள் நம்மை மகிழ்ச்சியூட்டப் போவதில்லை. இது கசப்பான உண்மை என்பது எல்லோருக்கும் புரிந்த விடயமாகும். இப்பின்னணியில்தான் தங்களது இலக்கிய விழா முக்கியத்துவம் பெறுகின்றது. கலை இலக்கியங்கள் மனித மனத்தைப் பண்படுத்துகின்றன; மானிட

நேயத்தை வளர்க்கின்றன; மானிடப் பண்பாடுகளை மேம்படுத்துகின்றன. பரீட்சை மையக் கல்வி முறையின் பாரிய அழுத்தங்களுக்கு உட்பட்டுத் தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கும் மாணவ சமூகத்துக்கு கொஞ்சம் ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தருகின்றன. அவர்களிடையே மறைந்து கிடக்கின்ற கலை இலக்கியத் திறன்களை வெளிப்படுத்துவதற்கு ஓர் அரிய வாய்ப்பாகவும் அமைகின்றன. தமது மாணவப் பருவத்தின் நீங்காத நினைவுகளாக அவர்களது உள்ளத்தில் தடம் பதித்து விடுகின்றன. இத்தகைய பெருமைகள் நிறைந்த இலக்கிய விழாவை ஆண்டுதோறும் நீங்கள் உன்னதமாகக் கொண்டாடுவதையிட்டு நான் பெருமையடைகிறேன். இந்த விழாவில் வெற்றிக்காக உழைக்கின்ற அனைவரும் பாராட்டுதலுக்கு உரியவர்கள். இச்சீரிய வழியில் தொடர்ந்து நடந்து தங்களது மன்றமும் கல்லூரியும் இன்னும் உயரிய சாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் ஒளி விளக்காத் திகழ வேண்டும் என நெஞ்சம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

**தை. தனராஜ்,**

நிபுணத்துவ ஆலோசகர்,

தொலைக்கல்வி நவீனமயமாக்கல் செயல்திட்டம்

(கல்வி அமைச்சு)

*With*
*Best Compliments*
*From*

Monara

# MONARA STEEL CENTRE

Importers in General Hardware Merchants
Speciality Lubricants, Maintanance and
Corrosion Protection

- ***Speciality Lubricants***
- ***Safety Boots***
- ***Flat Belts and Industrial Belts***
- ***Speciality Rubber Hoses***

**Importers in General Hardware, Sanitary Ware Marine Hardware, Electric Ware, Engineering Tools, Machineries, Suppliers To Government & Private Sectors.**

OKS
NITTA
mafdel
PIWU
BECHEM

NO. 333 2/18, OLD MOOR STREET,
COLOMBO-12
TEL: 2470738, 2470739
HOTLINE: 2390882
FAX: 2320108
E-mail: monara333@sltnet.lk

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With*
*Best Compliments*
*From*

**METAL MARK AGENCIES & ENTERPRISES**

Indenting Agent For Foreign Steel Manufacturers

Phone: 0777 901016
Fax: 2335627 - Metal Mark
Res: 2385827
E-mail:metelagesvm@yahoo.com

Colombo-12
Sri Lanka

# MESSAGE FROM THE PRINCIPAL

It gives me great pleasure to contribute this message on the occasion of "Kalai Vizha 2005" which is organaized by the Tamil Literary Association, and giving message to the annual publication of "Tamil Nayam".

Tamil Literary Association had organaized these events annualy and I noticed they implemented a very comprehensive and ambitions programme in different occasions at school level. This annual event has always mainained high standards and I hope this year "Kalai Vizha" be yet another great success..

I thank the teacher in-charge and all students who are associated with the Tamil Literary Association. I wish them all the best.

**H.A. UPALI GUNASEKARA**
Principal

*With*

*Best Compliments*

*From*

Metro Residence

# Metro Housing Construction (Pvt) Ltd.

379, 2/2, Galle Road,
Colombo-06

Tel: 2361919, 2361351, 250446, 2362036

What you need is one right move
Get it Right



# MESSAGE FROM THE VICE PRINCIPAL

With great Pleasure I contribute this Message to the Souvenir " TAMIL NAYAM 2005". Which is published to mark of the most important annual function "KALAI VIZHA" Organized by the Tamil Literary Association of Royal College.

The Tamil Literary Association was able to organize this annual event almost every year from its inception. This gives immenge opportunities to the children of Royal College as well as the children of other schools since they have organized in the school as well as inter school competitions in the literature field. My personal belief is that every body shold lear from their early childhood.

Let me take this opportunity to congratulate the Teacher in charge and the students of Tamil Literary Association and also to wish all success in their future endearors.

**U.M.PRASANNA UPASHANTHA**
Vice Principal

*With*

*Best Compliments*

*From*


# JANATHA STEELS


Importers & General Hardware Merchants


**SPECIALIST IN:**


**M.S. Angles, M.S. Plates, B.I. Sheets, S.S. Sheets, Channels & G.I, Pipes, H Beams, Zincoated Sheets, Stainless Steel Items**


- M.S. Channel
- M.S. Sheets And Plate
- M.S. Chequered Plate
- M.S. Coil
- Pvc Sheets
- Round Tubes
- Roofing Felt
- Stainless Steel Sheets
- Stainless Steel Angle
- Stainless Steel Flat Iron
- Stainless Steel Rod
- Stainless Steel Seamless Pipe sch 10&40
- Slotted Angles
- Square Iron
- Tor Steel
- Welded Mesh
- Welding Electrodes
- Zinc Coated Steel Sheets
- Angle Iron - Equal And Unequal
- Aluminium Coils & Sheets
- Aluminium Chequered - Plates
- G.I. Pipes - Light - Medium - Heavy
- B.I. Sheets
- B.S. Shafting
- Carbide - China / S.A
- Cement - Colour
- Flat Iron
- Furniture Tubes
- G.I. Plain Sheet
- Steam Pipes - Light -Medium - Heavy
- Seamless Steel Pipes - Sch 40 & Sch 80
- Showels, Mammoties
- Gate Channels
- G.I. Wire
- H. Iron
- Hoop Iron
- Jumper Steels
- Lip Channel











**Hotline :**

**011-2-421412**

**Hotline - Supplies : 011-534 7341**

Sales : 011-2-321431, 011-2-325807, 011-2-338607
Supplies : 011-5-347341 / Imports : 011-2-454282
Fax : 011-2-345667

20, Quarry Road, Colombo 12.
(Opposite HNB)
E-Mail : Janathas@eureka.lk / info@janathasteels.com
Website : www.janathasteels.com

**PROUD OF OUR PAST - CONFIDENT OF OUR FUTURE**

# பிரதி அதிபரின் ஆசிச்செய்தி...

அறுபதாண்டுகளுக்கு மேலாக றோயல் கல்லூரித்தமிழ் இலக்கிய மன்றம் தனது பணியை செவ்வனே ஆற்றிவருவது பெருமை தரும் விடயமாகும்.

கல்லூரி என்பது வெறும்கட்டிடமும் கரும்பலகையும் வெண்கட்டியும் போன்ற சடப்பொருள்களின் வதிவிடமல்ல. மாறாக உயிருள்ள மாணவர்கள் ஆசிரியர்களால் இயக்கப்படும் உன்னத நிறுவனம். அந்த நிறுவனத்தில் மனிதப் பண்புகளை அல்லது மானிட விழுமியங்களை தலைநிமிர வைக்கும் பொறுப்பு சங்கங்களையும் கழகங்களையும் சார்ந்ததாகும். அத்தகைய புனித பணியை தடையில்லாது 60 ஆண்டுகளுக்குமேல் செய்து சாதனை புரிந்த புளகாங்கிதத்துடன் உங்கள் மன்றம்தொடர்வது பாராட்டத்தக்கது.

கண்ணியம் மிக்க தேசியத் தலைவர்களையும் வாண்மையாளர்களையும் கலைஞர்களையும் பண்புடையோரையும் உங்களின் அர்ப்பணிப்பான பங்களிப்பால் ஆக்கித்தந்ததுடன் அப்பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளீர்கள். உங்கள் எல்லோரது எண்ணமும் ஒரு விடயத்தில் குவிய வேண்டும் என்பது எனது வேணவா. அது எமது கல்லூரி தலைநிமிர்ந்து நின்றால் நாம் அதன் நிழலில் என்றும் பசுமையுடன் பிரகாசிப்போம் என்பதாகும்.

ஒவ்வொருவரும் உங்கள் அழப்பரிய ஆற்றலை வெளிப்படுத்துங்கள் உங்களை சமூகம் அடையாளங்காணும் நீங்கள் தான் நாளை எம் கல்லூரியால் தலை நிமிர்ந்து நிற்பவர்கள்.


2005ம் ஆண்டு அர்சுனா/பார்த்திபனை தலையாயக் கொண்ட செயற்குழுவின் பணிக்கு எனது வாழ்த்துக்கள் இறையாசி உங்களுடன் இருக்கும்.

நன்றி.

அன்புள்ள

**தி.மா. கணபதிப்பிள்ளை**


SAINT ANDREW AND
JUDE TRAVELS
Airline Ticketing
Visa Formalities
Package Tours
Pilgrimage
Vehicle Hire
Hotel Reservations World Wide
For Competitive, Reliable And
Courteous Service
SAINT ANDREW AND
JUDE TRAVELS
43, KINROSS AVENUE, BAMBALAPITIYA, COLOMBO-4. SRI LANKA
TEL: 011- 2585508 FAX: 011-4512280
E-mail: saintandrew@sltnet.lk
(Facing, Marine Drive, Opposite Marry Brown Restaurant)


Communication builds understanding
Sri Lanka Telecom
www.slt.lk

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With*
*Best Compliments*
*From*

# Shaadow Line

Whole Sale & Retail Ready Made Garment

VELONA SUPER MARKET,
112/5, KEYZER STREET, COLOMBO-11,
SRI LANKA.
PHONE: 2345488, 2472017

# தமிழ் துறைப் பொறுப்பாசிரியரின் ஆசிச்செய்தி...

தமிழ் இலக்கிய மன்றத்தின் தமிழ் நயம் மலருக்கு வாழ்த்துச்செய்தி அளிப்பதில் பெருமை அடைகிறேன். இக்கல்லூரியின் முதல் தரமன்றங்களில் ஒன்றான இலக்கியமன்றம் நன்நிலை தாழாது தொடர்ந்து அப்பணியை ஆற்றிவரும் செயல் பாராட்டுக்குரியது.

கல்லூரி மன்றங்களும் கழகங்களும் மாணவர்களின் பண்புசார்ந்த விருத்திக்கு ஊக்கம் தரவேண்டும். மாணவர்களிடம் காணப்படும் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணரச் செய்து அவர்களைச் சமூகத்தில் ஆளுமையுள்ள பிரஜைகளாக நடமாடும் ஆற்றலைக் கொடுக்க வேண்டும். இதன் பின்னணியில் தலைமைத்துவம் தீர்மானம் எடுக்கும் பண்பு குழ்நிலைச் செயற்பாடு விட்டுக் கொடுத்தல் போன்ற பிரதான முகாமைத்துவப் பண்புகள் மாணவர்களிடம் வளரும்.

இத்தகைய மாணவர்களின் அயராத பங்களிப்புத் தான் 170 ஆண்களுக்கு மேலாக இக் கல்லூரி புகழ் பூத்து நிற்கிறது. அந்த அசையாத செயலூக்கத்தில் நீங்கள் இணைந்து உங்களுக்கும், உங்கள் பெற்றோருக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்க்கும் போது அதனால் மொத்தப் பாடசலைச் சமூகமும் தலை நிமிர்ந்து நிற்கும்.

கண்ணியமான உங்கள் நடத்தையால் கல்லூரியின் பெறுமானங்களை சிறப்படைய வைக்க வேண்டுகிறேன். உங்கள் பணியால் உங்கள் சிறப்புக்கள் அடையாளப்படுத்தப்படும். நீங்கள் எதிர்காலச் சமூகத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களாக மிளிர்வீர்கள்.

உங்கள் முயற்சிகள் வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

நன்றி.

அன்புடன்

**திருமதி ஆர். பிரேம்நாத்**

With
Best Compliments
From



# SHINGAPOORE JEWELERS

DEALERS IN GENUINE 22CT. GOLD JEWELLERIES

සිංගප්පූර් ජුවලර්ස්

சிங்கப்பூர் ஜுவலர்ஸ்

315, GALLE ROAD, WELLAWATTA,
COLOMBO-06, SRI LANKA.
TEL: 2363158

# பொறுப்பாசிரியரின் ஆசிச் செய்தி

தமிழ் இலக்கிய மன்றத்தினால் நடாத்தப்படும் 'கலைவிழா 2005' இன்போது வெளியிடப்படும் 'தமிழ்நயம்' இதழிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.


எமது தமிழ் இலக்கியமன்றமானது வழமைபோன்று இவ்வருடமும் பாடசாலைகளுக்குள்ளான மற்றும் கொழும்பு மாவட்ட பாடசாலைகளுக்கிடையான தமிழ் திறன்காண் போட்டிகளை சிறப்புடன் நடாத்தி வெற்றி கண்டுள்ளது. மேலும் அதில் வெற்றி பெற்றவர்களை கௌரவித்து பிரபல்யமான கலைஞர்களாக உருவாகியுள்ளார்கள். எதிர்காலத்திலும் இவ்வாறான சிறந்த கலைஞர்களை தமிழ் இலக்கிய மன்றமானது வெளிக்காட்ட வேண்டும் என்பதே எனது அவா.

'கலைவிழா 2005' சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு நல்கும் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் எமது மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. ரா. இராஜசூரியர்,**
பொறுப்பாசிரியர்,
தமிழ் இலக்கிய மன்றம்

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With*
*Best Compliments*
*From*



# SINDHU MALA
## JEWELLERY

100, SEA STREET, COLOMBO-11.
Tel: 2332669, 2325287
Mobile: 0722 240 975
077302092

E-mail: kumar81961@hotmail.com

# SINHALA LITERARY ASSOCIATION

It is with much pleasure that I contribute this message of felicitation to the Souvenir published to mark the annual "KALAI VIZHA 2005"

The rich culture of Sri Lanka is made up of the cultures and traditions of the sinhalese and Tamil people.

The Tamil Literary Association of Royal College annually holds KALAI VIZHA a festival which marks a special place in the school calander.


The society joining hands with other Literary oriented societies such as English Literary Association and Sinhala Literary Assocoation inspires the Liferal and cultural talents of our young stars.

I hope the goodwork would continue in the future as well. My blessings towards the success of this attempt.

Good Luck


**I.S. MADUGODA**
Teacher in charge

*With*
*Best Compliments*
*From*



# SERENDIB SANITATION

SOLE AGENT:
MILIM DOLPHIN FAUCET WHOLESALE DEALERS,
DISTRIBUTOR IN SANITORY WARES TILE & HARDWARE



176, Bandaranayake mawatha,
Colombo-12
Tel: 4734784, 2382144.
Fax: 2337052

E-mail: mhrplumb@sltnet.lk,
eastlankaplumb@yahoo.com

website: www.serendibsanition.com

# றோயல் கல்லூரி

## தமிழ் மன்றம்

## செயற்குழு - 2005

**தலைவர்**

திரு. H.A. உபாலி குணசேகர

**பொறுப்பாசிரியர்**

திரு. R. ராஜசூரியர்

**உப பொறுப்பாசிரியர்கள்**

திருமதி. R. பிரேம்நாத் திரு. A. சரவணன்

திருமதி. L. பிரபாகரன் திருமதி. S. கோபால கிருஷ்ணன்

திருமதி. T. உதயகுமார்

**மன்றத் தலைவர்**

S. அர்ஜுனா ஜெயகுமரன்

**செயலாளர்**

B. பார்த்திபன்

**உப செயலாளர்**

N. ரமுணாகர்

**இணை பொருளாளர்கள்**

J. நிரோஜன்

S. திபேந்திரன்

**இதழாசிரியர்கள்**

M.S.A.M. சினாஸ் அலீம் M.I.M. இன்பாஸ்

**செயற்குழு உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| A.I. காதர் | K. அபிலாஷ் | B. கிரிதரன் |
| Y. லஹாரின்யன் | B. அரவிந்த் | M.N. ரஸா |
| M.A.M. இம்ரான் | P.பிரதீபன் | N. ஹிஷாம் |
| மோதீஸ் | மால்மருகன் | L. ரொஹான் |
| நிரோஷன் | வசந்தன் | ஜஸின்தன் |
| அரபாத் | ரயீஸ் | |

*With*

*Best Compliments*

*From*

# ZIYAM SANTHOSH

# 2J

# வேத்தியர் நாமும்...

ஒரு கனவுலக வாழ்க்கையின் கடைசி நாளுக்கு 09-12-2005 என திகதியிடப்பட்டிருக்கிறது.

170 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாறும், பாரம்பரியமும் கொண்ட உன்னதமான பாடசாலையில் 67 வருடமாக தமிழ் போற்றும் உயர்தர மன்றத்தின் 53ஆம் ஆண்டு நிகழ்வு வழமைபோல புதிய மெருகுடன் மேடையேறியுள்ளது.

எமது கல்லூரியின், தமிழ் இலக்கிய மன்றத்தின் 2005/2006 செயற்குழு சாவால்கள் நிறைந்த ஒரு பருவகாலத்தில் நிறைந்த கனாக்களுடன் கலைவிழா 2005 வைபவத்தை உத்தம மட்ட உழைப்பினூடே மேடையேற்றுகிறோம்.


இப்பருவகாலத்துக்கான எமது செயற்பாடுகளாக பாடசாலை களுக்கிடையான தமிழ் திறன்காண் போட்டிகளையும், 1 தொடக்கம் 12 ஆந் தரங்கள் வரையான பாடசாலைக்குள்ளான தமிழ் திறன்காண் போட்டிகளையும் நடாத்தி நிறைவு கண்டுள்ளோம்.

இரண்டு மாதகால அனுபவத்தில் மனிதர்களிடத்தில் அனுபவங்களைப் பெற்றிருக்கின்றோம், மனிதர்களைக் கற்றிருக்கின்றோம், சிறு குழந்தை சொல்லும் கருத்துக்களைக் கூட சீர்தூக்கிப் பார்க்கும் சிரத்தைப் பெற்றிருக்கின்றோம்.

இன்னல்கள் பலவரினும், இடையறாது இன்பத்தமிழ் வளர்க்கும் அரும்பணியால் இழந்தவை மறந்து சவால்களை வென்று சாதனைகளை சன்மானமாய் பெறும் பொழுதினில் நிறைவாய் உணர்கிறோம்....

வேத்தியர் நாமும் தமிழ் வேந்தர்களாய்....

**ச.அர்ஜுனா ஜெயகுமரன்**
மன்றத்தலைவர்
தமிழ் இலக்கிய மன்றம்.


தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்
HILL TEX
34, New Bazaar Street,
Nuwara-Elia,
Tel: 052 2223208

# செயலாளரின் சிந்தையிலிருந்து...


சவால்களே சன்மானமாக்கப்பட்ட நிலையில் கூட உடன் இருந்த உடன் பிறவா உறவுகளின் அயரா உழைப்பில் வியர்வைத் துளிகளுடன் ஓரிரு கண்ணீர்த் துளிகளும் சங்கமமாகி தரையில் சிந்த...! பல்லாண்டுக் கனவாம் கலைவிழா தன்னை நனவாக்கி இன்று நிறைவு காண்கிறோம். பைந்தமிழ் பாரெங்கும் பரவும் வகை செய்யும் முயற்சியில் இன்று தமிழ்த் தாய்க்கு முடிசூட்டும் இன் தருணம் இதை உடன் நின்று உழைத்த உயர் உள்ளங்களுக்கு நன்றிகள் உரைத்திடப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

இளைய சமுதாயத்தினரிடையே தமிழ்ப்பற்று மேலோங்கச் செய்யும் வகையில் திறன்காண் போட்டிகளையும், கலை நிகழ்வுகளையும் நடாத்தி இன்று 'கலை விழா 2005' என்ற உச்சக்கட்டத்தை அடைந்துள்ளோம். தடையையும் துரும்பாக்கி வெற்றிநடை போடுகிறோம் நாளையும் நமதே என்று.

"கால ஓட்டத்தில்... கணனியுகத்தில் எம் இனிய தமிழ் மொழி மறக்கடிக்கப் படாது இவ்வுலகில் இனிதே பண்பட்டு விளங்க வழி செய்வோம்" என்ற தொனிப் பொருளில் இயங்கி வரும் எமது மன்றம் தொடர்ந்தும் தன் பணியை முன்னெடுத்துச் செல்ல மூத்தோர் தங்கள் மேலான ஒத்துழைப்பையும் எல்லாம் வல்ல இறைவன் அவன் அருளையும் வேண்டி விடைபெறுகிறேன்.

"தனியனாய் வாழ்ந்தாலும்
தமிழனாய் வாழ்ந்திடு"


பா. பார்த்திபன்
செயலாளர்
தமிழ் இலக்கிய மன்றம்



# Temple of Fine Arts International

*" Follow any Path,*
*religion or doctrine,*
*but believe in it sincerely,*
*because the sincerity of your belive*
*will illuminate and guide you*
*to the ultimate common goal*
*-GOD."*

Swami Shantanand Saraswathi



## Temple of Fine Arts International Dance and Music Classes

Renowned and acclaimed in Malaysia, Aingapore, Australia New York and India Now Conducts classes for eagar and talented students in Sri lanka.

Our eminent gurus will guide you in Bharathantyam (Indian dancing), Kandyan dancing, Kathakali dancing, Hindustani music, Karnatic music, Tabla, Mirdangam, Veena and Violin.

Join the Temple of Fine Arts to gain perfect balance of mind and body and to capture a fine art as a medium of spiritual growth.

*For further information call*

**Temple of Fine Arts International**
33,Deal Place A, Colombo 3.Phone: 2696092, 0773 178301

*Sponsored by*

VASHICARA ADVERTISING

# ROYAL COLLEGE TAMIL LITERARY ASSOCIATION

## ROYAL COLLEGE TAMIL STAFFS

1. Mr.R.Rajasooriyar
2. Mr.M.Kanapathipillai
3. Mrs.L.Pirabaharan
4. Mrs.S.Gopalakrishnan
5. Mrs.S.Y.Munaz
6. Miss.S.Kathirgamathamby
7. Mrs.R.Premnath
8. Mrs.L.Mahalrajhan
9. Mrs.V.Balendran
10. Mr.S.Kirubaharan
11. Mr.B.Shanmugarajah
12. Mrs.L.Thavakumar
13. Mr.K.Nandakumar
14. Mrs.Misriya Nizar
15. Mr.V.Selvaranjan
16. Mr.S.Balendran
17. Mrs.J.Sudakar
18. Mrs.R.Loganathan
19. Mrs.V.Elayathambi
20. Mr.S.Sivakumar
21. Mr.R.M.Hayees
22. Mrs.S.Kajendran
23. Mr.A.Sarawanan
24. Mrs.S.Thevamalani
25. Mrs.S.Selvadas
26. Mrs.Ismiya Ansari
27. Mrs.S.A.Latheef
28. Mrs.T.Udayakumar
29. Mr.S.R.Jeyakumar
30. Mr.K.Sri Ragavwarajan
31. Mr.Bala Kirubaharan
32. Mr.C.Nadesan
33. Miss.Ann Subo Alfred
34. Mr.V.Shantha Kumar
35. Mrs.K.Pathmanaban
36. Mr.Vparameswaran
37. Mrs.V.Sarvanantha
38. Mr.S.K.Sothilingam
39. Miss.A.Selvaratnam
40. Mrs.M.S.M.Colin
41. Mr.S.Manoharan
42. Mrs.U.Jeyarathnam
43. Mr.K.Srikantha.




**GNANAM IMPORTS (PVT) LTD.**
No.79, 5th Cross Street, Colombo-11, Sri Lanka.
Tel : 2449255 Fax : 2393339 E-mail : gipl@panlanka.net

# OFFICE BEARERS



Seated (L-R): Mrs. L.Prabaharan, Mrs. R.Premnath, Mr. Rauff, S.Arjuna Jeyakumar (Chairman), Mr. H.A.U.Gunasekara (Principal), B.Parththipan (Secretary) , Mr. R.Rajasooriyar (Teacher in-charge), Mr. M.Kanapathipillai (Deputy Principal), Mr. A.Saravanan
Standing (L-R): Arun Priyanthan, M.A.M.Imran, S.Suhothayan, J.Nirojan (Joint Treasurer), A.G.Y. Arafath, S.Dhibendran (Joint Treasurer), M.Mufassir, A.I.Cader, K.Rohan, Janagan, M.S.A.M.Shinas Aleem (Editor), M.I.M.Infas (Editor), S.Veeshmen, Sanjay Ramanan.

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

I WISH
ROYAL COLLEGE
TAMIL LITERARY ASSOCIATION

# *R. MALMARUGAN*
# *BIOLOGY*
# *Advanced Level 2007*

# ORGANIZING COMMITTEE



Seated (L-R): J.Nirojan (Joint Treasurer), S.Arjuna Jeyakumaran (Chairman), B.Parththipan (Secretary), S.Dhibendran (Joint Treasurer).
Standing (L-R): M.A.M. Imran Shanfari, S.Veeshman, M.I.M.Infas (Editor), M.S.A.M.Shinas Aleem (Editor), M.Mothees, B.Aravinth, Arun Piriyanthan, Vasanthan, M.Hisham, Pradeepan, A,G.Y. Arafath, Niroshan, M.Mufassir, A.I.Cader, K.Rohan, Jasindan, Sanjay Ramanan, M.Mathurangan, Malmarugan, Janagan.

ஆரம்பக்கல்வி அளித்து,

அறிவை அணிவித்து,

வேத்தியர் சிங்கமாக்கிய - என்

அக்கரைப்பற்று ஆண்கள்

வித்தியாலயத்திற்கு - என்

நன்றிகளை சமர்ப்பித்து - அதன்

சார்பிலும் - என் வேத்தியர் கல்லூரி

தமிழ் இலக்கிய மன்றத்திற்கு

மனமார்ந்த வாழ்த்துக்கள்!

**N. HIZAM MUHAMMED**

**12 MATHS**

# கற்றல் -கற்பித்தல் பின்னணியில் சைவ உளவியல் சிந்தனை

கல்வியை வழங்குவதன் மூலம் சமுகத்துக்குப் பொருத்தமான பிரஜைகளை உருவாக்குவதோடு, தான் சார்ந்திருக்கின்ற பண்பாட்டு, கலாசார விழுமியங்களைப் பேணுவதற்கான வழிவகைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முறைசார் கல்வி அமைப்பில் பிள்ளையொன்று கல்வியைப் பெறுவதால், பிள்ளையின் அறிகை ஆட்சி, எழுச்சி சார் ஆட்சி, உள இயக்கத்திறன் ஆட்சியைப் பெற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அறிகை ஆட்சி என்பதால், பிள்ளையொன்று தனது வாழ்நாளைக்கொண்டு நடத்துவதற்கான அறிக்கையைப் பெற்றிருக்க வேண்டுமென்பது கட்டாய தேவையாகக் கொள்ளப்படுகின்றது. எழுச்சிசார் ஆட்சி என்பது பிள்ளையொன்று, எத்தகைய உளப்பாங்குகளைப் பெற்று, சமுக இயக்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டுமென்பது இதன்பாற் கருதப்படும். உள இயக்கத்திறன் ஆட்சி என்பது, பிள்ளையொன்றின் வாழ்வுக்குத் தேவையான உடல்சார் திறன்களைப் பெற்றிருத்தலைக் கருத்தில் கொண்டு வழங்கப்படுவதாகும்.

## சமயக் கல்வி என்பது என்ன?

மனித வாழ்வில் சிறப்பும், செழிப்பும் நம்பிக்கையிலேயே கட்டியெழுப்பப் படுக்கிறது. சமயக் கல்வியை வழங்குவதன் வாயிலாக எதிர்பார்க்கப்படுகின்ற முக்கிய நோக்கம், வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்துவதுதான். எப்பொழுது நாங்கள் நம்மீதான நம்பிக்கையை இழக்கின்றோமோ, அப்போது நாங்கள் எங்களின் தனித்துவத்தை இழந்துவிடுகின்றோம். ஒவ்வொரு மனிதனினதும் தனித்துவத்தைப் பேணிக் காப்பதற்காக காப்பகமாக விளங்குவது சமயமாகும். எனவே, பாடசாலையில் வழங்கப்படும் சமயக் கல்வி வாழ்க்கை மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப ஆவன செய்ய வேண்டும். மனித முயற்சியின் வெற்றி என்பது மனிதனிடமுள்ள உள்ளார்ந்த ஆற்றலில் தங்கியுள்ளது. உள்ளார்ந்த ஆற்றலை வெளிக் கொணர்வதற்கு பல்வகைப்பட்ட அகப்புறக் காரணிகள் கருவியாக உள்ளன. அகக் காரணிகளை இனங்கண்டு, உரியவாறு பயன்படுத்துவதால் உள்ளார்ந்த ஆற்றல் வெளிக் கொணரப்பட்டு வாழ்வு வளம் பெற வாய்ப்புண்டாகும்.

## நடத்தையை உருவாக்குவது எது?

நடத்தை உருவாக்கமென்பது, முன்னர் குறிப்பிட்டது போன்று, அகப் புறக் காரணிகளின் தாக்கத்தினால் ஏற்படக்கூடியது. குழந்தையொன்று பிறந்தது முதல், பாடசாலைக்குச்செல்லும் வரையிலான காலத்தை விட்டுச் சூழலின் தாக்கம் பிள்ளையின் நடத்தையில் தாக்கத்தை விளைவிக்கின்றது. வீட்டுச் சூழலானது சமயம் சார்ந்ததாக இருக்கும் போது, பிள்ளையின் நடத்தையில் சமய எண்ணக் கருக்கள் ஆதிக்கம் விளைவிக்கின்றது. சைவச் சூழலில் வளரும் பிள்ளையொன்று கடவுளை வணங்கவும், தீபம் ஏற்றவும், விபூதி பூசவும் கற்றுக்கொள்ளுகின்றது. சரி, பிழை நோக்கி எதையும் செய்யவில்லை. வளர்த்த குடும்ப அங்கத்துவர்களின் நடத்தைக் கோலத்தைப் பின்பற்றித் தானும் செய்யத்தொடங்குகின்றது. எம்மில் பெரும்பாலானோர் அவ்வாறே சமயம் சார் நடத்தையைப் பெற்றக்கொண்டனர்.

புறம் சார்ந்த நடத்தைக் கோலங்களால் பிள்ளை சமூகம் சார் நடத்தைக் கோலத்தைப் பெற்றக் கொள்ளுகின்றது. பெரியோரை மதித்தல், மற்றருக்கு உதவுதல், வீட்டுக்கு வருவோரை உபசரித்தல், வார்த்தைப் பிரயோகங்கள் ஆகியவை வீட்டுச் சூழலில் நடக்கும் செயன்முறையால் பிள்ளை பெற்றுக் கொள்கின்றது. இவ்வாறு புறச்சூழலால் பெற்றுக்கொண்ட அதிகமான விடயங்களை அதிகமாக வாழ்க்கையில் நடத்தைக் கோலமாக உருப் பெறுகின்றது. இந்நிலை தொடர்ந்து நிகழும் போது கலாசாரமாக பரிணமிக்கின்றது.

## அறிகையும் சமயமும்

சமகால உளவியலில் கற்றல் என்பது அறிகையின் பாற்பட்டது என்பது ஒரு சாராரின் கருத்தாகும். கற்றல் என்பது நடத்தையால் வெளிக்காட்டப்படும் கோலம் மட்டுமல்ல. அதற்கப்பாலும் கற்றல் நிகழ்கின்றது. கற்றலில் ஒரு பகுதி நடத்தையாகக் காட்டப்பட்டாலும் நடத்தையால் வெளிப்படுத்த முடியாத விடயங்களை நாம் தொடர்ந்தும் கற்றுக் கொண்டிருக்கின்றோம். அத்தகைய கற்கையானது அறிகைப் புலத்தில் நிகழ்கின்றது.

சமயத்தில் கூறப்படும் விடயங்கள் பலவற்றை உடனடியாகப் பார்க்கக்கூடிய நடத்தையிலும் பார்க்க அறிகைப் புலத்தில் பதித்தலே அதிகம் நடை பெறுகின்றது. சமயம் என்பது கருத்தியல் சார்பானது. அகத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுகின்றது. கருத்து நிலைச் சிந்தனை காட்சி நிலையில் வழிபாடாக இயற்றப்படுகின்றது. கருத்து நிலையில் அவற்றை ஏற்றுக் கொள்ளாத நிலையில் காட்சிநிலையில் அவை பரிணமிக்காது. இன்று பலரும்

கூறும் விமர்சனங்களில் ஒன்று கிரிகைகள், சடங்குகளுக்கான அர்த்தம் பலருக்குத் தெரியாது. இதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம். முதலாவது காரணம் கருத்து நிலையில், அவை தொடர்பான பின்னணி இல்லாமை. இரண்டாவது நிலையில் கிரிகைகள், சடங்குகள் கலாசாரத் தன்மை பெறும் போது அவை வாழ்வின் ஓரம்சமாகி, அதற்கான அடிப்படைகளை அறியவேண்டும் என்ற நிலை உருவாவதில்லை. இன்றைய கிரிகைகளும், சடங்குகளும் கலாசாரத்தின் ஓரம்சமாகி விட்டன. அவை கலாசாரத்தின் ஓரம்சமாக இருத்தலே அவற்றின் நீண்டதொரு வாழ்வுக்கான காரணமாகும்.

சைவ சமயத்தில் சரிகை, கிரிகை, யோகம், ஞானம் என நான்கு முறையில் செயலாற்றும் தன்மையைக் குறிப்பாக வாழ்வியலில் ஆற்றும் தொண்டுகளை விளக்க, ஞானம், உயர்நிலைச் சிந்தனையை விளக்கின்றது.

ஞானம் என்பது அறிகையின் பாற்பட்டது. மனித சமுகத்தின் அளப்பரிய சொத்தாக விளங்கும் அறிவானது, அறிகையில் வைப்பிடப்பட்டு உலகத்தை உணருவதற்கும், அறிவதற்குமான ஊடகமாக விளங்குகின்றது. சைவ சமயத்தில் அறிவின் முக்கியத்துவம், ஞானநிலை எய்துவதற்கு அப்பால் உலகியல் சார் விடயங்களை அறிவதற்கும் அடிப்படை என்பது குறிப்பிட வேண்டியதாகும். அறிவு பற்றிய சிந்தனை சைவர்களுக்கு அடிப்படையானது. இறைவன் அறிவு மயமானவன் என்ற கருத்துக் கவனத்தில் கொள்ளப்படுவதோடு, இறைவன் அறிவாகி உலகோடு இயைந்து நிற்கின்றான் என்பதுவும் நினைவில் கொள்ள வேண்டியதாகும்.

இன்றைய யுகம் அறிவின் பாற்பட்டதாகும். அறிவே ஒருவரின் சொத்து. அறிவைத் தேடுவது அவற்றை உரியவாறு பயன்படுத்தி மேன்மை அடைவதும், சைவர்களின் அடிப்படைப் பணியாகும். அறிவைத் தேடுதல் என்பது ஒரு தொடர்நிலைக் கருமத் தொடராகும். அறிவானது ஒரு நிலையில் திரித்து நிற்பதில்லை. அறிவு ஒரு நிலையில் தரித்து நிற்குமாயின், இன்றைய உலகம் இவ்வளவுக்கு முன்னேறி இருக்காது. சைவர்களைப் பொறுத்தவரை அறிவுத் தேட்டமென்பது தொடர்நிலைக் கருமத் தொடராகும். அதனைத் தலைமுறை தலைமுறையாக முன்னெடுத்துச செல்லலே, சைவர்களின் வாழ்வில் முன்னேற்றத்துக்கு முக்கியமாகும்.

சைவ சித்தாந்தக் கோட்பாடுகளில், முப்பொருள்கள் பற்றிப் பேசப்படுகின்றது. இவற்றில் இறைவன், உயிர், உலகம் ஆகியன அநாதியானவை. இறைவன், உயிர் ஆகியன அறிவுப் பொருள்கள். இறைவன் அறிவு மயமானவன். எங்கும் நிறைந்திருப்பவன் எனவும் கொள்ளப்படுகின்றது.

அறிவு மயமானவன், அறிவாகி எங்கும் நிறைந்திருப்பதால் அவனை அறிதல் என்பது இயற்கையை அறிதல் என்பதாகும். இயற்கையை அறிதலின் வழியே, இன்றைய விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றதாகும்.

மனித முன்னேற்றத்துக்கு வழிகாட்டியாக இருப்பது ஆய்வு முறையாகும். மனிதனை சிந்திக்கத் தூண்டுவது அறிவாகும். ஆய்வின் மூலமே அறிவைத்தேடி முடியும். இந்த நிலையில் எங்கும் பரந்து அறிவாகி இருக்கும் இறைவனைத் தேடுதல் என்பதுவும் ஆய்வுக்கு உட்பட்டதே. இறைவனைத் தேடும் வழியில், விஞ்ஞானம் சாதனைகளைப் புரிகின்றதெனலாம்.

## எழுச்சியும் சமயமும்

முறைசார் கல்வி முறைமையில் பிள்ளைகளிடம் வளர்க்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற இன்னோர் அம்சம் அவர்களின் எழுச்சிசார் ஆட்சியை வளர்ப்பதாகும். இதனை மனப்பாங்கு வளர்ச்சி எனவும் குறிப்பிடுவர். அவ்வாறு அறிகையானது அகம் சார்ந்த நிலைப்பாடாகக் கொள்ளப்படுகின்றதோ, அதே போன்றே எழுச்சியும் அகம் சார்ந்த செயற்பாடாகவே உள்ளது.

சைவ இலக்கியங்களில் கையாளப்படும் உள்ளம், நினைப்பு, மனம், சிந்தனை ஆகியவற்றின் செயற்பாட்டின் வெளிப்பாடே மனப்பாங்காகும். பிள்ளையொன்று எவ்வாறு மனப்பாங்கைப் பெற்றுக் கொள்ளுகின்றது என்பது முக்கியமாகும்.

தான் வாழும் சூழலில் நடைபெறும் நிகழ்வுகளின் கூட்டுமொத்தமான செயற்பாடே மனப்பாங்காகும். சைவ சமயத்தைத் தழுவும் பிள்ளைகள், வாழ்வியல் தொடர்பான விடயங்களை சூழலில் வழியாகப் பெற்றுக் கொள்ளுகின்றது. சூழல் என்னும் போது, புறச் சூழலில் இருந்து பெறும் விடயங்கள் அகச்சூழாலில் மனங் கொள்ளப்பட்டு வாழ்வியல் நிலைகளில் பிரயோகிக்கப்படுகின்றது. சைவச் சூழலில் வாழும் பிள்ளைகள் வாழ்வியலில் நேர்முகச் சிந்தனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. அவற்றை உரியவாறு பெறுவதற்கான வாய்ப்புக்களை வழங்குவது முக்கியமாகும். "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்திலே" போன்றை இவ்வுலக வாழ்வின் முக்கியத்தை நேர்முகமாகச் சிந்திக்க வைப்பனவாகும்.

மனிதர்கள் இயற்கையின் வனப்பில் மனத்தைப் பறிகொடுப்பதுண்டு. இதற்குச் சைவர்கள் விதிவிலக்கானவர்கள் அல்லர். தேவாரங்களில்

காணப்படும் இயற்கையின் எழில் பேசும் பாடல்களை பாடுவதால் மன மகிழ்வுண்டு. அவ்வாறே இசையால் மயங்காதோர் யாருமில்லை என்பர். சைவ இலக்கியப் பாடல்கள் இசையோடு இசைக்கத்தக்கவை. இசையோடு இசைப்பதால் மனமகழிவெய்துவதற்கு வாய்ப்புண்டு. சமநிலை ஆளுமையை விருத்தி செய்வதில், மனப்பாங்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. சைவம் கூறும் விடயங்கள் சமநிலை ஆளுமையை வளர்ப்பதற்குப் பொருத்தமானது என்பதுவும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

## சைவமும் சமூக உளவியலும்

சைவகர்கள் மத்தியில், சமூக ஊடாட்டம் முக்கியம் பெறுகின்றது. கிராமிய வாழ்க்கை முறையில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள் சமயம் தொடர்பாக, அவை நோக்கப்பட்டாலும், அவை யாவும் சமூக ஊடாட்டம் கொண்டவை என்பது முக்கியமாகும். குறிப்பாகப் பிறப்பிலிருந்து, இறப்பு வரையிலான சகல நடவடிக்கைகளும் சமயம் சார்பான சாயங்கள் பூசப்பட்டாலும் அவையாவும் சமூக ஊடாட்டம் தொடர்பானவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சமூக ஊடகத்ததின் ஊடாக, வாழ்வியலானது நெறிப்படுத்தப்படுகின்றது. விட்டுக்கொடுத்தல், இணைந்து வேலை செய்தல், சமூக இயக்கங்களில் பங்கு கொள்ளல் ஆகிய சமூகத்திறன்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

மனித வாழ்வில் பிரதிபலன் கருதாது, சமூக சேவைகள் பல நிலைகளில் மேற் கொள்ளப்படுகின்றன. இத்தகைய செயற்பாடுகளால், பெறப்படும் மன நிறைவுகள் வாழ்க்கையில் திருப்தியை உருவாக்குகின்றன. இச்சேவைகளின் ஆரம்பம் கோவில்களிலேயே கற்றுக் கொள்ளப்படுகின்றன. அவை தொடர்ந்து வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வளர்த்துக் கொள்ளப்படுகின்றது.

## முடிவுரை

உலகத்தில் தோன்றிய சமயங்கள் யாவும் மனித வாழ்வின் முன்னேற்றத்துக்கு வழிகாட்டியாக அமைந்தாலும், சைவத்தின் அடிப்படைச் சிந்தனையால் அறிகைப் புலத்தில் உருவாகும் மாற்றத்தால் சைவர்களில் நடத்தை மாற்றத்தை உருவாக்குகின்றது. இங்கு நடத்தை மாற்ற உருவாக்கமென்பது, புதியன செய்யவும், உள்ளதை உள்ளவாறு புரிந்து கொள்ளலுக்கும், சமூகத்துடன் தந்து உறவாடி வாழவும் வகை செய்யலாம்.

**உலகநாதர் நவரத்தினம்,**
**பணிப்பாளர் தமிழ்த்துறை.**

# 1st Choice

***Wholesale Dealers in Readymade Garments***
***Swimwear & Garment Display Articles***

**104-A, Keyzer Street,**
**Colombo-11.** **Tel : 2430517**
**Sri Lanka.** **Tel / Fax : 2343653**



# மாணவர்களுக்கோர் மடல்....!



அன்புள்ள மாணவர்களே,
அன்பு (உ) ள்ள மாணவரே,

நீங்கள்
மேதைகள் ஆவதற்கு
நாங்கள்
பாதைகள் காட்ட வந்தோம்

நீங்கள் பட்டங்கள்
சூடிக்கொண்டால்தான்
நாங்கள்
மகிழ்ச்சி வானில்
பட்டம் விட முடியும்

நீங்கள்
சேறுகள் பூசிக்கொண்டால்
அழுக்காகிப்போவது
நாங்கள் அல்லவா

நீங்கள்
அறிஞர்களாய்
மகுடம் சூடிக்கொண்டால்
மகிழப்போவது
உங்கள்
பெற்றோர் மாத்திரமல்ல...
உங்களை
மாணவர்களாய்
பெற்றோராகிய
நாங்களும்தான்

எங்கள்
உழைப்பின் போது
சில வேளை
களைப்பு வரலாம்
அதை
களிப்பாய் மாற்ற வேண்டியது
உங்கள் கடமை அல்லவா

நீங்கள்
படிக்கப் படிக்கத்தானே
நாங்கள்
வெற்றிப்படிகளிலே
ஏறி நிற்போம்

எங்கள் புழுக்கம் தீர
நீங்கள்
சாமரம் வீச நினைத்தால்
ஒழுக்கம்
உங்களோடு
சேர்ந்து வரட்டும்

மாணவர்களே,
நீங்கள்
எங்கள் மனங்களில்
என்றுமே
தங்கங்களாய்
தங்குங்கள்

நம்பிக்கைகளுடனும்
பிரார்த்தனைகளுடனும்,

உங்கள் அன்பு ஆசிரியர்.
ரஷீத் எம். ஹாயிஸ்

*With*
*Best Compliments*
*From*

# V.K. VASUDEVEN
## RATHNAPURA

# "கட்டுரை எழுதும் கலையை வளர்ப்போம்"

உரை நடை வளர்ச்சியுடன் எழுச்சி பெற்ற கலையுருவங்களிலே கட்டுரை எழுதுதல் தனிச்சிறப்பும் பெறுகின்றது. எடுத்துக்கொண்ட விடயப் பொருளை ஒழுங்காகவும், தெளிவாகவும், பொருள்படவும், கோர்வையாகச் சொல்வதே கட்டுரையின் இயல்பாகும். தர்க்கித்தலின் அடிப்படையே கட்டுரையின் உயர்நிலையாக அமையும்.

கட்டுரையிலே பொதுவாக முகவுரை, உடல், முடிவுரை என்ற முற்பகுதிகளைக் கொண்டிருக்கும். வேண்டாதவாறு முகவுரையை நீளமாக்குதலும் தேவையான உள்ளீட்டினை சுருக்குலும் முடிவுரைகளை பெருப்பித்து கூறுவதும், கட்டுரையின் இரசனையை குறைப்பதுடன் ஒரு வேண்டத்தகாத விகாரத் தோற்றத்தினையும் ஏற்படுத்தி விடும்.

கட்டுரைத் தலைப்பை கொடுத்தவுடன் எழுத ஆரம்பிப்பது எவ்வாறு எனத் தெரியாமல் மணிக் கணக்காக நேரத்தினை விரயம் செய்பவர்களும் உளர். தரப்பட்ட தலைப்பை மனதில் உருப்போட்டு பாருங்கள். பொருளோடு ஒட்டிய விடயங்களை கற்பனைக்கு கொண்டு வாருங்கள். கட்டுரையை எழுதத் தொடங்குங்கள். அதற்கான வழி வகைகள் சிலவற்றை நோக்குவோம்.

1. கொடுக்கப்பட்ட தலைப்பின் பொருளை விளக்குவதுடன் ஆரம்பிக்கலாம். உதாரணமாக "விஞ்ஞானத்தின் பயன்கள்" எனும் பொருள் பற்றி கட்டுரை வரைய வேண்டுமானால் விஞ்ஞானம் என்றால் என்ன? என்பது பற்றி விளக்கத்துடன் கட்டுரையை ஆரம்பிக்கலாம்.

2. குறிப்பிட்ட வரைவிலக்கணத்தை கொடுப்பதன் மூலமும் கட்டுரைகளை எழுதத் தொடங்கலாம்.

3. நிகழ்ச்சிகளைப் பற்றிக் கட்டுரை எழுதத் தொடங்கும் போது அச் சம்பவங்களின் பின்னணியினைச் சுருக்கமாக விளக்குவதோடு தொடங்கலாம். எடுத்துக் காட்டாக பெருந்தோட்ட மக்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சியொன்றினை எழுதும்போது - அந்நியர் நாட்டைக் கைப்பற்றியதை பெருந்தோட்டங்கள் திறக்கப்பட்டமை, அடையாள அட்டைகளின் பயனும் தேவையும் தொடர்பான விபரங்களுடன், கட்டுரை எழுத தொடங்கலாம். அதேபோல் வரலாற்றுக் கட்டுரையினை எழுதத் தொடங்கும் போது வரலாற்று பின்னணியுடன் ஆரம்பிக்கலாம்.

4. கட்டுரைகள் எல்லாவற்றுக்கும் முகவுரை இருக்க வேண்டுமென்ற கட்டாயமல்ல. வருணனைக் கட்டுரைகள் முகவுரையின்றியே ஆரம்பிக்கலாம். கடற்கரைக் காட்சியொன்றினைக் குணிக்கும்படி கேட்டால் பிரதேசத்திற்கு ஏன் போனோம்? எப்போது போனோம் எப்படி போனோம்? என்பவனவற்றை விளக்க வேண்டியதில்லை.

கட்டுரையின் உள்ளீடு அதன் உயிர் போன்றது. எழுதப்படும் பொருள்பற்றிய அறிவும் தெளிவும் எழுதுவோருக்கு இருத்தல் வேண்டும். இதற்கு வாசிப்பு துணை செய்யும். நூல்களும், சஞ்சிகைகளும் இதற்கு உறுதுணை செய்யும் கருவூலங்களாகும். எண்ணங்களை மனத்திலே நிரைப்படுத்திய பின்னர் எழுத ஆரம்பிக்கலாம். அல்லது ஓடு தாளில் விடயங்களை ஒழுங்குறக் குறித்துக் கொண்ட பின்னர் எழுதத் தொடங்கலாம். இவ்வாறு நிரற்படுத்தும் போது தொடர்புகுன்றிய விடயங்களை நீக்கிவிடலாம்.

பந்தியமைப்பானது கட்டுரை உருவாக்கத்தில் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. ஒரு இயந்திரத்தின் துணை உறுப்புக்களைப் போன்று கட்டுரையின் பந்திகளும் முழுக்கட்டுரையின் வளர்ச்சிக்குத் தம் பங்களிப்பைச் செலுத்தி நிற்கின்றன. பந்திகள் தனிக்கருத்தையோ, துணைக் கருத்தையோ, தாங்கி நிற்கின்றன. தொடர்புபட்டு நின்று கருத்தினை வளர்த்தல், பொருளைத் தெளிவாக்குதல், படிப்பதற்கு வசதியான முறையிலே தனிக் கூறாக நிற்றல் என்பன பந்திகளின் நன்மையாகும்.

கட்டுரையின் முடிவுரையில் கூறப்பட்ட கட்டுரை விடயங்களை தொடுத்துக் கூறலாம். அல்லது குறித்த கட்டுரை பொருள் பற்றி எழுதுவோனின் கருத்தைக் கூறி முடிக்கலாம். அல்லது கருத்தினை பற்றி வாசிப்பவர்களே முடிவு எடுக்கக் கூடியவைகளில் கட்டுரையினை நிறைவு செய்யலாம். நியாயமான ஒரு கொள்கையினை வாழ்த்துதலுடன் நிறைவு படுத்தலாம்.

கட்டுரைவகைகள்:-

(1) வரலாற்றுக் கட்டுரை -
(2) கற்பனைக் கட்டுரை -
(3) சிந்தனைக் கட்டுரை -
(4) விளக்கக் கட்டுரை -

என கட்டுரைகளை வகைப்படுத்தி நோக்கலாம். எவ்வாறாயினும் தமிழைப் பயில்வோர், தமிழ் விமர்சனங்கள் தமிழ் விற்பன்னர்கள் என பலதுறைகளில் எதிர்காலத்தில் பரிணமிக்கப் போகிறவர்கள் தங்களை வெளிக்காட்டிக் கொள்ள கட்டுரையே மிகச் சிறந்த சாதனமாக இருப்பதால் இன்றே நல்ல கட்டுரைகளை படைக்க தம்மை வளப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

கு. ஸ்ரீராகவராஜன்
ஆசிரியர்
றோயல் கல்லூரி.

# அழிந்தாவது காப்போம் தமிழ் மொழியை

ஒளி செல்ல ஊடகம் தேவையில்லை! - தமிழ்
மொழி செல்ல பாதையும் தேவையில்லை!

தஞ்சாவூர் புகழ் பெற்றது தமிழ் நாட்டு பொன்னால் - தமிழ்
மொழியோ புகழ் பெற்றது தாய் நாட்டு மண்ணால்

காலத்தால் அழியாததும் தமிழ்மொழியே! - அந்தக்
காலத்தை வென்றதும் தமிழ்மொழியே!

இலக்கணமுள்ளதுவும் தமிழ்மொழியே! - சிறந்த
இலக்கியம் படைப்பதுவும் தமிழ்மொழியே!

பிறந்ததும் கேட்டது தமிழ்மொழியே! - நான்
இறந்தாலும் கேட்க வேண்டும் தமிழ்மொழியே!

ஒலியின் அலையும் தமிழ்மொழியே! - உலகில்
அலையும் ஒலியும் தமிழ்மொழியே!

எழுத்தறிவித்தது தமிழ்மொழியே! - பலர்
இறப்பறிவித்ததும் தமிழ்மொழியே!

கல்லறையின் கற்களும் தமிழ்மொழியே! - அன்புக்
காதலின் சொற்களும் தமிழ்மொழியே!

ஆட்சி கிடைத்தது தமிழ்மொழியால்! - அவர்
மாற்ற நினைக்கிறார் தமிழ்மொழியை! - அன்பு

அன்னையின் தாலாட்டும் தமிழ்மொழியே! - உந்தன்
பிள்ளையின் தாலாட்டும் தமிழ்மொழியே!

வெட்ட வெட்ட தளைத்ததுவும் தமிழ்மொழியே! - பலர்
வெட்டி இட்ட உதிரமும் தமிழ்மொழியே!

இலக்கணம் வகுத்தது தான் தமிழ்மொழி! வீண்
தலைக்கணம் பிடித்தது அல்ல தமிழ்மொழி!

காலத்தை கரைத்ததும் தமிழ்மொழியே! - அந்தக்
காலத்தில் கரைந்ததுவும் தமிழ்மொழியே!

முளைத்ததும் புதைத்தனர் தமிழ்மொழியை! - பலர்
புதைத்தபின் முளைத்தது தமிழ்மொழயே!

அன்னையின் சிரிப்பும் தமிழ்மொழியே! - கனவுக்
கன்னியின் சிரிப்பும் தமிழ்மொழியே! - பலர்

அழிக்க நினைக்கிறார் தமிழ்மொழியை - நாம்
அழிந்தாவது காப்போம் தமிழ்மொழியை

நாம் அழிந்தாவது காப்போம் தமிழ்மொழியை...

- தமிழன் -

"பாரெங்கும் பரவட்டும் பைந்தமிழ்"


**இ.அர்ச்சுனன்**
**10R**

SJ

*M. Muthuraman*
**PROPRIETOR**

**Santhi Jewellery**

**Gold Smith Tools & Gem Jewellery, 24ct Fine Gold**



சாந்தி ஜுவலரி ශාන්ති ජුවලරි

171/9, SEA STREET, COLOMBO-11,
SRI LANKA.

Tel: 332778
0777-186925

# பாரதியார்

சேற்றில் மத்தியில் செந்தாமரை மலர்ந்தது போன்று பாரத பூமியிலே எட்டய புரத்திலே பாரதியார் பிறந்தார். அவர் சிறுவயதிலே அன்னையை இழந்து பின்பு தந்தையின் அரவணைப்பிலும் அவரது பாசத்திலும் வளர்ந்த பாரதியார் காலப் போக்கில் கல்விகள் பல பயின்று வந்தார். இன்னும் ஓய்வு நேரங்களில் இயற்கை நிறைந்த காட்சிகளைக் காணப் பல இடங்களுக்குச் சென்று அவர் இயற்கை வனப்பைக் கண்டவுடன் உறங்கிக் கிடந்த கவிதா சக்தியைத் தட்டியெழுப்பி உயிர் ஊட்டினர்.

பாலகனான சுப்ரமணியன் பாடத் தொடங்கினான். இனிய கவிமணிகள் இவரின் இதயப் புதையில் இருந்து வெளிவந்தன. செந்தமிழிலே சிறந்த ஆர்வங்கள் சிதறத் தொடங்கின. இதற்கிடையில் சுப்பிரமணியன் என்னும் பெயர் சுப்ரமணிய பாரதியார் என்னும் பட்டப் பெயருடன் உருப்பெற்றது. நாட்போக்கில் அவரது சிறுவயது காலத்தை இன்னும் ஞாபகமூட்டிக் கொண்டிருப்பது போன்ற 'ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' எனும் பாட்டு சிறுவர் மத்தியில் தெவிட்டாத கனியாக அமைந்து விட்டது.

பாரதியார் பலரால் போற்றப்பட்டவர். ப்ல பாராட்டுப் பெற்றுக் காலப் போக்கில் தான் தனக்கென்று ஒரு இல்லத்தரசியையும் தேடிக் கொண்டார். அவர் பெயர் செல்லம்மாள் ஆகும். திருமணத்தின் பின்பு பத்திரிகை ஆசிரியராகவும் கவிஞர் ஆகவும் சுதந்திரப் போராட்டத் தலைவராகவும் இருந்த பாரதியார் விதியின் விளைவால் கடைசியில் வறுமையில் வாடினார். வீதி வழியே திரிந்தார்.

இவர் பாடிய பாடல்களை பாரத தேசம், புதுமைப் பெண், தமிழ்த்தாய் தமிழ், மூன்று காதல், வெண்ணிலாவே போன்ற பாடல்களைப் பாடியுள்ளார். அவர் பெண்களின் விடுதலைக்காக மிகவும் பாடுபட்டனர். இவர் தேசத்திலுள்ள பற்றின் காரணமாக அவர் பல கவிதையில் தேசத்தை வைத்து எழுதியுள்ளார்.


இவர் 1921.09.11 அன்றுதான் அற்புதக் கொண்ட யானை ஒன்றால் தூக்கி எறியப்பட்டு மரணத்திரையுள் மறைந்தார். தமிழன்னை தன் தவப் புதல்வனை இழந்தாள். ஆனால் எட்டயபுரத்தில் எழுப்பப்பட்ட பாரதி மணி மண்டபம் அவரது நினைவுச் சின்னமாக நிமிர்ந்து நிற்கின்றது. தமிழ் வாழும் வரை பாரதியும் வாழ்வார். பாரதி வாழ்க. பாரதியின் தீஞ்சுவைக் காவியங்கள் வாழ்க.

**கே.எம்.ரிஷாத்**
8Q

Sing Tel

Mobile Phone Accessories
Electronic Goods & Computer Accessories

107 D. Galle Road,
Wellawatha, Colombo-06.
Tel: 2504022
Fax: 4713448



E-mail: luckystar@sltnet.lk

ASIANS TRADERS

*Wholesale Dealers in Baby Underwears,*
*Textile & Readymade Garments*

65A, Keyzer Street, Colombo 11
Tel. 2341559 Fax. 2391015
Srilanka

# தமிழ்மொழியின் தனிச் சிறப்பு

உலகிலே வாழும் மாந்தர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள உதவுவது அவர்களின் மொழியே. இம்மொழிகளுள் காலத்தால் பழமை வாய்ந்த மொழிகள் உள. இலக்கியத்தால் பெருமை வாய்ந்த மொழிகள் உள. இவ்வாறு காலத்தால் பழமை வாய்ந்ததும் இலக்கியத்தால் பெருமை வாய்ந்ததுமான மொழியில் தமிழ் மொழியும் ஒன்று.

தமிழுக்கு 'இனிமை' என்றும் கூறுவர். செவிக்கு இனிமைதரும் இடத்தில் தமிழ் நிற்கிறது. இக்காலங்களிலே கல்லூரிகளிலே மாணவர் இயல், இசை, நாடகம் என்னும் தமிழ் கலை நிகழ்ச்சியை நடாத்தி மக்களை மகிழ்வுறச் செய்கின்றனர். 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்று சிலர் மேடையேறி உடைக்கின்றனர். பாரதியார் தமிழ் இனிமையைப் போற்றி

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியுள்ளார்.

| 2ம் இடம் | யாழினி ஜோதிலிங்கம் | கொழும்பு நல்லாயன் கண்ணியர் மடம் | கொழும்பு |
| 3ம் இடம் | தர்ஷிகா பர்னாந்து | கொழும்பு நல்லாயன் கண்ணியர் மடம் | கொழும்பு |
| 3ம் இடம் | சி. செந்தூர் | கொழும்பு புனித அந்தோனியார் ஆ. ம. வி | கொழும்பு |

# உயிர்களிடத்தில் அன்பு செய்

தற்காலத்தில் விஞ்ஞானம் வளர்ந்திருப்பது போல உயிர்களை கொடுமை செய்வதிலும் இவ் உலகம் முன்நிலையில் இருக்கின்றது. ஒரு மனிதன் தன் இனத்தை கூட வஞ்சிப்பதில் தனி இன்பம் பெறுகின்றான். இதில் இருந்து ஐந்தறிவு உயிர்கள் தப்பிக்கவில்லை. அவைகளையும் தனது ஆசைகளை நிறைவேற்ற பயன்படுத்துகின்றான், எம்மைப் போன்ற ஆறறிவு மனிதன். இது ஆதிகாலத்தில் மனிதன் தனது இனத்தை சேர்ந்தவர்களுடன் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தான். அவன் மிருகங்களை தனது வயிற்றுக்காக மட்டும் கொண்டு வந்தான். காலம் மாற காட்டில் இருந்தவன் கிராமங்களைத் தனது வசிப்பிடம் ஆக்கினான். அப்போது மனிதன் தனக்குள் ஏற்படுத்திய மன உறுதி "என்னால் எதுவும் செய்ய முடியும்" என்பதாகும்.

பின் உயிர்களை தனது உணவுத் தேவை, உடைத் தேவைக்காக கொண்டு வந்தான். இந்தக் காலமும் கடந்து செல்ல, அவன் தான் செய்ய வேண்டிய வேலைகளையாவது அவன் சுமக்க வேண்டிய பாரத்தை மிருகங்கள் அமைப்பதற்கு அவற்றை அடித்து, சூடுவைத்து துன்பறுத்தினான். அன்று கூட அவன் தனது இனத்தைச் சேர்ந்தவர்களை கொடுமைப்படுத்தவில்லை. சில காலம் செல்ல மனிதனுக்கு முக்கியமான மூன்று ஆசைகள் தோன்றின. அவை பணத்தின் மீதும் பொன்னின் மீதும் ஆசை. மற்றையது பெண் மேல் எழுந்த ஆசை மூன்றாவது மண் மீது ஏற்பட்ட விபரித ஆசை. இவற்றை நிறை வேற்ற இவன் சுயநலத்துடன் தன் இனத்தைச் சேர்ந்தவர்களையும் ஐந்தறிவு உயிர்களையும் வஞ்சனை செய்தான்.

நிலத்தின் மீது உள்ள தனது ஆசையை நிறைவேற்ற காடுகளை அழித்து இயற்கையையும் பல அறிய உயிரினங்களையம் அழித்தும், தனது வசதிக்காக தனது இனத்தைச் சேர்ந்தவர்களை அவன் செய்யும் வேலைகளை பிற மனிதர்களின் ஏழைத்தன்மையைப் பயன்படுத்தி மனிதன் கண்டறிந்த பணத்தை கொடுத்து செய்வித்தான். இதனை செய்தால் தான் என்னை பணக்காரன் என்று ஊர் மக்கள் கூறுவார் என்று பலர் எண்ணுகின்றனர். ஆனால் சிலர் வேலைக்கு மனிதனை வைத்துக் கொண்டு அவனின் முக்கியத் தேவைகளை பூர்த்தி செய்ய இடமளிக்கவில்லை. இதன் மூலம் பல ஏழை மனிதர்கள் தமது வறுமை காரணமாக உயிர் விடுகின்றனர். இதனை அனைத்து சமயங்களும் போதிக்கின்றனர்.

உயிர்கொடுமை என்றால் என்ன உடனல் உறுப்புக்களைப் பாதிப்பதும் உடலை வறுத்துவதும் மட்டும் அல்ல. ஒரு உயிரின் உணர்வுகளை பாதிப்பது உடலை வறுத்துவதை பல மடங்கு வேதனையானது. இதனை தற்போது உள்ள மனிதர்கள் அறிவதில்லை. ஒரு நபரை அவனது நண்பன் அந் நபரின் உணர்வுகளை பாதிப்பது மிகவும் கொடுமையானது. உயிர் வதை என்றதை எவரும் எவருக்கும் செய்வத பாவம் என்று காந்தி, திருவள்ளுவர், பாரதியார் என பல மகான்கள் உலகிற்கு அறிவுரை கூறியுள்ளனர். தற் காலத்தில் மத குருமார்களும், ஆண்மீக வாதிகளும் இதையே அனைவருக்கும் கூறுகின்றனர்.

எனவே தற்போதுள்ள இளைஞர் சமுதாமே நீங்களும் உங்களைத் தொடர்ந்து வரும் இளைஞர் சமுதாயங்களுக்கும் உயிர் வதை செய்வது பாவம் என்று உயிர்கள் மேல் அன்பு செய்வதையும் அனைவருக்கும் பரவ வேண்டும். இதன் மூலம் எம் உலகம் நன்மை அடைந்து இறைவன் உலகத்தைப் படைத்ததன் காரணத்தை விளக்க வேண்டும்.

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்காண்போட்டிகளில்
கீழ்ப்பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With Best Compliments From*

# U.L.HAMEED

QUANTITY SURVEYOR,
AKKARAIPATTU

*With Best Compliments From*

# JOAN ARC (PVT) LTD

## Sole Agent For

**SANYO**

Electrical & Electronic Household Appliances

No. 48 1/1, Dickmans Road,
Bambalapitiya, Colombo-05
Tel: 011 2552351
Fax: 011 2556262
E-mail: janarc@mail.ewisl.net

# தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் தமிழ் மொழியில் அதன் வகிபகமும்

உலகமயமாக்கலின் பாரிய தாக்கத்தின் விளைவே, இன்றைய உலகம் ஒரு கிராமமாக சுருங்க ஆரம்பித்துள்ளது. கலாசாரத்தின் மின்னல் வேகத்திற் கிணங்க மனிதனும் சரிசமனாக போட்டியிட்டு தன்னை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்கின்றான் எனில் அது மிகையாகாது.

"யாமறிந்த மொழிகளுள் தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்பது புதுக்கவியின் கூற்று. அவ்வாறான எம் இனிய தாய் மொழியாம் தமிழ் மொழியை திக்கெட்டும் பரவச் செய்ய இன்றைய கால கட்டத்தில் உறுதுணையாக இருப்பது தகவல் தொழில்நுட்பமும் அதனோடு இணைந்த பலதரப்பட்ட வளர்ச்சிப் படிகளுமேயாகும்.

தரவுத் தொடர்பாடலும், கணனித் தொடர்பாடலும் இணைந்ததே தகவல் தொழில்நுட்பமாகும். ஆதிகால மக்கள் தமக்கிடையே தகவல்களை பரிமாறிக் கொள்ள குறித்த சில பறவைகளையே பயன்படுத்தி வளர்த்து வந்தனர். ஆனால் இன்று அந்நிலைமாறி நினைத்த கணத்தில் இருந்த இடத்திலிருந்து தகவல்களை மிகவும் துரிதமாக பரிமாறிக்கொள்ள வினைத்திறன் மிக்க தொழில்நுட்ப சாதனங்கள் எம் மத்தியில் உள்ளன. பின்னர், மக்களின் நடத்தைக் கோலங்கள் மாற்றமடைய புதிய கண்டு பிடிப்புகளில் ஈடுபடலாயினர். இக் கண்டுபிடிப்புகளின் விளைவாகவே அச்சு இயந்திரங்கள், தொலைபேசிகள், தொலை நகல் போன்ற தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள் எம் மத்தியில் அறிமுகமாகின. இக் கண்டு பிடிப்பாளர்களை நாம் பாராட்டியே ஆக வேண்டும். ஏனெனில் ஓலைச்சுவடிகள், கல்வெட்டுக்கள், என மந்த கதியில் வளர்க்கப்பட்ட எம் தமிழ் மொழி இன்று பார் போற்றும் மொழியாகத் திகழ்கின்றது.

ஆரம்பத்தில் வாழ்ந்த எம் தமிழறிஞர்கள் தமிழ் மொழியை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு மிகுந்த சிரமப்பட்டனர். தத்தமது எழுத்தாக்கங்களை பாதுகாப்பதற்கும், மொழியை வளர்க்கும் முகமாக சொற் பொழிவுகள், பேச்சுக்கள் நிகழ்த்துவதற்கும் போதிய வசதிகள் காணப்படவில்லை. அச்சு இயந்திர கண்டுபிடிப்பால் புத்தகவடிவில் தம் ஆக்கங்களை வெளியிடத் துவங்கினர். தகவல் தொழில்நுட்ப புரட்சியின் விளைவாக வானொலிகள், தொலைக்காட்சிகள் என்பன பாவனைக்கு வந்தமை தமிழ் மொழியை வளர்க்கும் பணியில் ஈடுபட்டோருக்கு கும்பிட போன தெய்வம் குறுக்கே வந்தது போல ஆயிற்று. தமிழ் வானொலிச் சேவைகள், தொலைக்காட்சி அலைவரிசைகள், தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என இன்பத் தமிழ் இனிமை பெற்றது. உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இடம்பெயர்ந்து வாழும் தமிழ்பேசும் மக்களின் நன்மை கருதி பல வானொலிச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு செவ்வனே செயற்பட்டு வருகின்றன. அவுஸ்திரேலியாவின்

இன்பத் தமிழ் வானொலி, கனடாவின் கீதவாணி, லண்டனின் பி.பி.சி (BBC) தமிழோசை, நியூசிலாந்தின் வெரித்தாஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில் நம் தமிழ் காற்றை சுவாசிக்கும் வாய்ப்பை தகவல் தொழில்நுட்பம் நல்கியுள்ளது. இது தவிர இலங்கையிலும், இலங்கை வானொலி வர்த்தக சேவை தென்றல் அலைவரிசை, சூரியன் எப்.எம். சக்தி, எப்.எம். போன்ற அரச மற்றும் தனியார் வானொலி நிலையங்கள் தமிழை செய்மதிகள் மூலமாக தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் பார்த்து இரசிப்பதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது.

பல்வேறுபட்ட தடைக்கற்களையும் தாண்டி அவற்றை வெற்றிக்கான படிக்கற்க ளாக கொண்டு வளரும் எம் தாய் மொழியாம் தமிழுக்கு மகுடம் சூடும் வகையில் தகவல் தொழில்நுட்பத்திற்கு ஒரு வரப்பரசாதமாக அமைந்த "சார்ள்ஸ் பப்பேஜ்" (Charls Bebbage) இன் கைவண்ணத்தில் உருவான "கணனி இயந்திரம்" அமைந்திற்று.

மிகவும் நுண்ணிய பாகமான "சிலிக்கோன் சிப்" (Silicon Chip) இன் உதவியுடன் வடிவமைக்கப்பட்ட கணனியின் கண்டு பிடிப்பானது இன்று முழு உலகையே தன் பிடியில் வைத்திருக்கும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது என்பது கண்கூடு. தமிழ் மொழியை வளர்க்கும் முகமாக சிரமப்பட்டோர் மும்முரமாக கணணியின் உதவியுடன் தமிழ் மொழியை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியீட்டிக் கொண்டிருக்கின்றனர். முற்று முழுதாக ஆங்கில மொழியில் கையாளப்படுவதே கணணியாகும். இதனால் ஆங்கிலக் கல்வியறிவில் போதிய தேர்ச்சியற்ற எம் தமிழ் மொழி மூல மாணவர்கள் கணனிக் கல்வியை கற்பதற்கான வாய்ப்பை தவறவிடலாயினர். இது மட்டுமன்றி கணனியை இயக்குவதற்கான தரவுகளை திரட்டல், அவற்றை கணனியின் உள்ளீடுகளாக பயன்படுத்தல் போன்ற ஏனைய கருமங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆனால், இன்று அத்தடையினையும் தாண்டி தமிழில் கணனியை இயக்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளமை எமக்கான அறிவு விருத்திக்கான வழிகாட்டியாகும். தமிழெழுத்துக்களில் அமைந்த விசைப்பலகையின் அறிமுகம், தமிழிலான கணனி மென்பொருட்களின் அறிமுகமும் சந்தையில் அதிக கேள்வியை ஏற்படுத்தத் துவங்கின. தமிழ் வளர்த்த அறிஞர்களான பாரதியார், கம்பர், திருவள்ளுவர், போன்ற மேலும் பலரின் சரிதைகள், கவிதைகள், நாவல்கள் ஏனைய ஆக்கங்களானவை அடர் தகடுகளில் (CD) வெளிவந்துள்ளன. இதுதவிர சரித்திர கதைகள், சிறுவர்களுக்கான பாடல்கள் போன்றனவும் இவ்வாறு வெளிவரத் தொடங்கியுள்ளமையும் தமிழ் மொழிக்கான வரப்பிரசாதங்களாகும்.

அமெரிக்க பாதுகாப்புப் படையினர் தமக்கிடையேயான இரகசியங்களை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு துரிதமாக அனுப்புவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கணனிகளை ஒன்றோடொன்று இணைத்து தகவல்களை பரிமாறலாயினர். இவ்வாறான கணனிகளின் தொடர்பே கணனி வலையமைப்பு அல்லது இணையம் என வழக்கில் உள்ளது. 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும்' என்பது போல கணனி பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வலைப் பின்னல்களினூடாக உலகளாவிய நிகழ்வுகளையும தகவல்களையும் பெற்றுக் கொள்ளல். நேரடியாக அவற்றைக் காணக்கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகின்றது. தமக்கான பிரத்தியேக 'வெப் தளங்கள்' (Web Sites) உருவாக்கப்பட்டு தரவுகள் உடனுக்குடன் வழங்கப்படுவதன் மூலம் அவற்றை ஏனையோர் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புள்ளது. எல்லாவற்றையும் பதம் பார்த்த எம் தாய் மொழிக்கு இது மட்டுமென்ன விதிவிலக்கா? இணையத்திலும், தன் கைவரிசையை காட்டத் தொடங்கினாள் தமிழன்னை.

தமிழர்களின் சரிதைகள், ஆக்கங்கள், கட்டுரைகள் போன்றனவும் தமிழ் கலைக் களஞ்சியங்கள். தமிழ் அகராதி, தமிழ் எழுத்துக்களின் வரலாறும் அவை தோன்றிய விதங்களும் தமிழ்சொல் அகராதிகள் என்பனவும் திருக்குறள், பிற மொழிபெயர்ப்புக்களுடனும் தமிழ் மொழிசார்ந்த பொது அறிவு விடயங்களை உள்ளடக்கிய வெப்தளங்கள் செயற்பட்டு வருகின்றமை. தமிழ் மொழியில் தம் உயர்கல்வியைத் தொடரும் மாணவர்களின் தேவைகளை பாரியளவில் பூர்த்தி செய்கின்றமையை குறித்து நிற்கிறது எனவும் கூறலாம். இது மட்டுமன்றி இன்று வரை தமிழ் கலைக்களஞ்சியத்தில் 2000 றக்கும் மேற்பட்ட தமிழ் சொற்கள் இடம்பெற்றுள்ளமை தமிழ் மொழியின் வளர்ச்சி வேகத்தை படம் பிடித்துக் காட்டுகின்றது. வானொலிச் சேவைகள், தமிழ் பத்திரிகைகளான வீரகேசரி, தினக்குரல் போன்றனவும், தொலைக்காட்சி நிலையங்களும் தமக்கான பிரத்தியேக வெப்தளங்களை இயக்கி வருகின்றன.

கல்தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய தமிழ் மொழி இன்று இணையம் வரை பரந்து இன்பத் தமிழ் காற்று வீசத் தொடங்கியுள்ளமை. எமக்கு பெருமிதத்தை தந்திருப்பினும் புதுக்கவியின் கூற்றுக்கிணங்க தமிழ் மொழிக்கு இணை தமிழ் மொழியே என ஏனையோர் அதனை வணக்கம் செய்தல் வேண்டும். பார் போற்றும் மொழியாக தமிழை உயர்த்துவது எம் கடமையே என்ற நினைவுடன் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் தாய் மொழியையும் வளம் பெறச் செய்வோம்.

வாழ்க தமிழ் மொழி: வளர்க அதன் பணி

**பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன்காண் போட்டிகளில் மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை**


*With Best Compliments From*

# M.I.M.RAFEEK

All Island Justice of Peace

NO. 17, EAST ROAD, AKKARAIPATTU - 01.
Tel : 067 2277427
Mobile: 0777 679675

*With Best Compliments From*



# RR Travels & Tours (Pvt) Ltd.

*YOU MEAN THE WORLD TO US. WE BRING THE WORLD TO YOU*

55F, 1/2, Manning Place,
Colombo-06
Tel : 0112362370, 2364045, 2364046
Fax: 011 2361223

Web: rrtravels.com E-mail: info@rrtravels.com

# தமிழ் சினிமாவும் தமிழர் கலாச்சாரமும்

அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் சுடர்விடும் காலமான இக்காலத்தில் மனிதனின் அறியாமை நீங்கி அறிவு சுடரெரிக்கிறது. அவ்வகையில் மானிட பழங்கால கலாசாரங்கள் திரிபு அடைந்து உருவானதே நமது கலை. அவ்வாறான பல கலைகள் சேர்ந்து உருவானதே இச்சினிமாத் துறை. நடனம், நாடகம், பாட்டு என்று பல அம்சங்களை உள்ளடக்கியதே சினிமா. பொழுது போக்கிற்காகவும் உற்சாகத்திற்காகவும் புராண கதைகளை மக்களுக்கு உணர்த்த என்ற பல வகையில் தெருநாடகமாக அறிமுகம் செய்யப்பட்டதுவே இக்கலை, பின் நமது விஞ்ஞான முன்னேற்றத்தால் தெருக்கூத்து என்ற பெயர் அழிந்து சினிமா என்ற ஒரு துறை உருவாகியது.

ஆரம்ப காலத்தில் தமிழ் புராண கதைகளையும் தமிழ் இலக்கியங் களையும் வைத்து மக்களுக்கு உதவும் வகையில் தமிழ் கலாசாரங்களையும் பேனும் வகையில் அறிமுகமாகிய இச்சினிமாத் துறை. பின் நம் நாட்டு மக்களின் வெளிநாட்டு மோகம் காரணமாக தமிழ் சற்றே விலகி தமிழ் கலாசாரமற்ற சினிமா துறையாக மாறியது. ஆபாச உடைகளையும், அலகங்காரமுள்ள மேனியுமாக நடிகைகள் சினிமாத்துறையில் வலம் வந்தனர். இளைய சமுதாயத்திற்கேற்ற வகையில் சினிமாத்துறை மாறியது. தமிழைவிட ஆங்கிலத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. தமிழர்களின் கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை விட்டு விலகி ஆங்கில பாணியாக மாறியது இச்சினிமாத்துறை. தமிழ் கலாசாரத்தை உணர்த்தும் வகையில் ஆரம்ப காலத்தில் அமைந்த கதைகள் மறைந்தன. அவ்வாறான கதைகளுக்கு இடம் அற்றுப் போனது. இளம் சந்ததியினரின் நாட்டமும் ஆங்கிலப்பாணியான கதைகளின் மீதே இருந்ததே தவிர தமிழ் கலாசாரத்தை யாரும் மீள தூசுதட்டுவோம் என நினைக்கவில்லை.

"கேடு வரும் பின்னே
மதி கெட்டு வரும் முன்னே"

என்பதைப்போல நமது சினிமாத்துறையின் கண்மூடித்தனமான வளர்ச்சி அமைந்தது. ஆரம்பத்தில் சமூகத்தையும், சமூக பாரம்பரியத்தையும் தமிழ் கலாசாரத்தையும் ஊக்குவிக்கும் வகையில் அமைந்த சினிமாத்துறை பின் காலப்போக்கில் பாலியல் உணர்ச்சிகளை ஊக்குவிக்கும் மையமாக மாறியது. இது தமிழர் கலாசாரத்தை வெகுவாக பாதித்தது. கவர்ச்சியான நடனமும், இரட்டை அர்த்த வசனங்களும் பார்ப்பவர்களை முகம் சுழிக்கச் செய்யும் கதையம்சங்களும் சினிமாத்துறையில் நாளுக்கு நாள் அதிகரிக்க தொடங்கின. ஒவ்வொரு திரைப்படத்திற்கும் ஒரு பாடலாவது ஆபாசப் பாடலாக அமைய வேண்டும் என்பது அப்படத்தின் தயாரிப்பாளரின் திட்டமாக இருந்தது. இதன் காரணமாக இன்றைய சினிமா உலகில் ஆபாச நடிகைகள் என பலர் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர். கவர்ச்சியாட்டங்களும், டப்பாங்குத்து பாடல்கள் என இப்புதிய பாடல்களை இளைஞர் ரசித்தனர். இதன் காரணமாக அன்றைய தமிழ் கலாச்சாரங்களை உணர்த்தும் வகையில் அமைந்த பாடல்கள் உயிரிழந்து போயின.

"ஆற்றிலே இட்ட பொருள்
குளத்திலே வந்தது போல்"

தமிழ் காலாசாரங்களையும், புராதன கதைகளையும் வைத்து ஆரம்பமான இச்சினிமாத்துறை இன்று நவநாகரிகம், வெளிநாட்டுமோகம், ஆங்கில மயம் போன்றவற்றின் காரணமாக "குத்துயிரும் குறையுயிருமாக" சீர்குலைந்து நிற்கிறது. தமிழர் கலாசார ரீதியான படங்கள் பாடல்கள் என்பன "சிறகொடிந்த பறவை போல்" ஆயின. தமிழ்ப் புவலர்களின் கருத்தும் உயிரிழந்து போயின. உதாரணமாக நமது கவிப்புலவர் சுப்பிரமணிய பாரதியாரை எடுத்துக்கொள்வோம். பாரதி தமிழுக்காக பாடுபட்டவர் தமிழ் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்றும் எண்ணியவர். அவரின் கருத்தை நன்கு அறிந்த நானம் அவரின் கவிதைகளுக்கு கொடுக்க வேண்டிய மதிப்பே வேறு. இன்றைய சினிமாத்துறையில் கவிகளில் இரட்டை அர்த்த மொழிகளை சேர்த்து அதை டப்பாங்குத்து பாடல்களாக மாற்றி அன்றைய தமிழ் காலாசாரங்களை உணர்த்தும் வகையில் அமைந்த பாடல்கள் உயிரிழந்து போயின.

'இவ்வையகம் அழிந்தாலும் அழியாத புலவர் அவர்' அவரின் கவிகளுக்கு ஏற்பட்ட நிலையை பார்த்தீர்களா? இது சினிமாவினால் தமிழரின் கலாசாரத்திற்கு ஏற்பட்ட ஊறு அல்லவா? இந்நிலை மேலும் தொடர்ந்தால் நமது தமிழ் சினிமாவில் முற்று முழுதாக ஆங்கில கலாசாரம் தொற்றிக் கொள்ளும் நிலை வந்துவிடும்.

இவ்வாறான நிலையை தவிர்ப்பதற்கு அக்காலத்தை போல் இக்காலத்திலும் தமிழை ஊக்குவிப்பதற்கு தமிழ்ப்பெரியார்கள் தோன்ற வேண்டும். தமிழ்ப் புலவர்கள் மலர வேண்டும். அதற்கு நமது இளைய சமுதாயத்தின் ஒத்துழைப்பும், பெற்றோரின் ஒத்துழைப்பும் அவசியம். இளஞ் சந்ததியினரை பெற்றோர் ஆங்கில பாடசாலைகளுக்கு அனுப்புவதால் அப்பிள்ளை ஆரம்பக காலத்திலிருந்தே ஆங்கிலத்திற்கு பழக்கமாகிவிடும். தமிழ், தமிழர் கலாசாரம் என்பவை நமது இளஞ்சந்ததியினரிடையே சுடர் விட வேண்டுமானால் அதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பும் ஊக்குவிப்பும் அவசியம். அடுத்ததாக நாம் வாழும் சூழல் ஆங்கிலமயமாக காணப்பட்டால் பிள்ளையும் அதற்கேற்ப வாழப் பழகிவிடும். ஆகவே நமது தமிழ் சினிமாவும் தமிழர் கலாசாரமும் அனலிட்ட மெழுகு போல திண்டாட வேண்டிய நிலை ஏற்படும். பெற்றோர்களே, பிள்ளைகளின் அதாவது இளஞ்சந்ததியினரின் வளர்ச்சியும், அதன் பாதையும் உங்கள் வழிகாட்டலிலேயே உள்ளது என்பதை மறந்து விடாதீர்கள். முன்னைய காலத்தில் நகமும் தசையும் போல் அமைந்த தமிழ் சினிமாவும், தமிழர் கலாச்சாமும் உடைந்து போக, அழிந்த போக காரணம் நாங்களே அதை மீண்டும் கட்டியெழுப்புவது எந்தவொரு தமிழ் மகனினதும் தலையாய கடமையாகும். நாமே புறந்தள்ளிய நமது தமிழர் கலாச்சாரத்தையும் மீண்டும் கட்டியெழுப்புவோம். தமிழ்சினிமாவையும், தமிழர் கலாசாரத்தையும் ஒன்றிணைப்போம்.

"இஸ்லாம் எங்கள் வழி
தமிழ் எங்கள் மொழி"

என்று கூறும் இஸ்லாம் இலக்கியங்கள் பால் ஒன்றிணைவோம். தமிழ் கலாச்சாரத்தை மீண்டும் கொணர்வோம். தமிழ் சினிமா எங்கள் விழியாயின் தமிழர் கலாசாரம் எங்களது பார்வை எனக் கூறுவோம். தமிழர் என தலை நிமிர்ந்து நிற்போம். தமிழ் கலாசாரம் அவசியம் என கூறுவோம். விழிலிருந்து பார்வையில்லையேல் பயனில்லை. ஆகவே தமிழ் சினிமாவில் தமிழர் கலாசாரம் இல்லையேல் அதுவும் எவ்விதத்திலும் எமக்கு பயனளிக்காது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் கண்மூடித்தனமாக நாம் பயனிக்கும் பாதையை மாற்றி மீண்டும் தமிழர் கலாசாரத்தை கட்டியெழுப்புவோம். விஞ்ஞான வளர்ச்சியுடன் புராணக் கதைகளை தொடுத்தோமானால் எவ்வளவு சிறப்பாக ஒழுங்குறும், என்பதை சற்று சிந்தித்து பாருங்கள்!

கனவுலகில் உல்லாசமாக பயணிக்கும் நாம் இன்று நமது தமிழர் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையிலும் முயற்சிகளை மேற்கொள்வது அவசியம். அன்று காந்தியின் முயற்சியே சுதந்திரத்தை பெற்றுதந்தது. அவ்வாறு நம் ஒவ்வொருவரின் முயற்சியும் வீண்போகாது.

"முயற்சியுடையார்
இகழ்ச்சியடையார்"

என்பதற்கிணங்க நம்மவரின் முயற்சியே நாளைய வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதை அறிந்து வெற்றிப் பாதையில், வெற்றி நோக்குடன் செயற்படு வோமானால் நிச்சயமாக வெற்றி நமக்கே. தமிழ் சினிமாவையும், தமிழர் கலாசாரத்தையும் சேர்க்க இளஞ்சந்ததியினரான நாம் முயற்சிப்போம். எல்லை மீறிப் போகும் எமது தமிழ் சினிமாவை நல்வழிப்படுத்துவோம். விஞ்ஞான தொழில்நுட்பம் நிறைந்த இக்காலத்தில் மீண்டும் தமிழ் கலாசாரத்தை கட்டியெழுப்புவோம். அக்காலத்தை போல முதற் சங்கம். இடைச்சங்கம், கடைச்சங்கம் என தமிழ் சங்கங்களை உருவாக்கி தமிழுக்காக பாடுபடுவோம். தமிழ் மக்களே திரண்டு வாருங்கள் தமிழ் கலாசாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம்.

தமிழ் சினிமாவையும், தமிழர் கலாசாரத்தையும் மீள கட்டியெழுப்பும் தன்மை தமிழராகிய நம்மவர்க்கே உண்டு என்பதை அறிந்து செயற்படுவோம். தமிழை கட்யெழுப்பினோமானால் நாம் வாழ்ந்ததிற்கே அர்த்தமாக அது அமையும். ஆகவே உள அர்ப்பணிப்புடன் தமிழர்களின் கலாசாரத்தை கட்டியெழுப்புவோம்.

**பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்திறன்காண் போட்டிகளில் மத்திய பிரிவில் 1ம் இடம்பெற்ற கட்டுரை**

*With Best Compliments From*

# S.S. DISTRIBUTOR

**Dealers in**
All kinds of Bicycle, Tricycles,
Spare parts, DSI, Lotus Tyre and Tube, Harmony soap,
Gatsby Hair cream and Hardware items

**Sole Agent for**
Radiant Marketing (Pvt.) Ltd,
Samsun Rubber Industries (Pvt.) Ltd. and
Raleigh Bicycle.

MAIN STREET, AKKARAIPATTU
Tel: 067 2278326, 0777 664869. Fax: 067 2279222.
E-main: ss_distributor@yahoo.com

*With Best Compliments From*

# Leather House (Pte) Limited

**DEALERS IN SHOE MATERIALS, REXINE & RUBBER GOODS ETC.**

Office:
137, Prince Street,
Colombo-11
Tel:2421338, 4717588
Fax:4717587.

# கண்ணீர் தேசம்

காலத்தின் கோலத்திலே - நாம்
காணுமிந்த புவிதனிலே
உள்ளத்தில் அன்பில்லை - இன்று
உயிர்வாழும் மானிடரில்...
சுய நலத்தை காத்திடவே
பிறருயிரை குடிக்கும் மக்கள்
எப்போது திருந்திடுமோ?
அன்று மீளும் இந்த 'கண்ணீர் தேசம்'...

மனதுக்குள்ளே சில பாகுபாடு,
மனித இனத்துக்குள்ளே பல வேறுபாடு
என்றெல்லாம் வாழ்ந்தாலே - இன்று
உன்னில்லம் உனக்கில்லை
என்னவெல்லாம் சொன்னாலும்
ஏனென்று கேட்டாலும்
எப்போது தீரும் இந்த வேஷம்
அப்போதே மாறுமிந்த 'கண்ணீர் தேசம்'...

யுத்தத்தின் சத்தத்தாலே
சிதைவுற்ற கிராமங்களும்
இரத்தத்தினாறு காண
துடிக்கும் சில இளைஞர்களும்
உள்ளத்தில் கருணை வந்து
உண்மையாய் மாற்றம் பெற்று
எப்போது சீர் பெறுமோ?
அப்போது மாறுமிந்த 'கண்ணீர் தேசம்'...

கருவினிலே எமை சுமந்து,
கண்மணியாய் காத்து வந்து,
தன்னையே தான் மறந்து
என்னையே வாழவைத்தயென் தாயும்
இன்று எங்கேயோ வாழ்கின்றாள்
என்னைக் காண துடிக்கின்றாள்
இந்நிலையும் மாற்றம் பெற்றால் மாறிவிடும் இக் 'கண்ணீர் தேசம்'...

இயற்கையின் சீற்றத்தாலே,
அலைக்களிக்கப்பட்ட மக்களினமும்,
அமைதியிழந்த குடும்பங்களும்,
அச்சத்தால் அடியொழிந்து,
அகதிகளாய் மாறினரே,
உண்பதற்கு உணவில்லை,
இருப்பதற்கோ இடமில்லை
இந்நிலையும் மாற்றம் பெற்றால்
மாறிவிடும் இக் 'கண்ணீர் தேசம்'...

சிறுவயதிலே நூலெடுத்து,
பள்ளியறையிலே காலம் கழித்து,
பயின்று வந்த மாணவர்களாய்
இன்று வளர்ந்து விட்ட இளைஞர்களாய்
வேலைத் தேடித் திரிகின்றனரே - இந்த
விரட்டியடிக்கும் சமுதாயத்தில்,
இத்துன்பம் மாறிட்டாலே,
விழித்திடுமே இக் 'கண்ணீர் தேசம்'...

உடல் நலத்தில் ஊனமுற்று,
உள் மனதிலே காயமுற்ற
உன்னில்லம் நாடிவரும்
உருகுலைந்த அன்பர்களும்
பசியென்று வரும் போது
பாரபட்சம் பார்க்காமல்
ருசியான உணவினையே அள்ளியள்ளி வழங்கினாலே
புத்தாக பிறந்திடுமே இக் 'கண்ணீர் தேசம்'...

புதியதொரு மனமாற்றமாய்,
புத்துணர்வு பெற்றவர்களாய்,
புரிந்துணர்வு நிறைந்தவர்களாய்
புதிய மனம் திறந்தவர்களாய்
மக்களுக்கு உதவிடலே
அரசாங்கம் முடிவெடுத்தால்
என்றோ மாறும் 'கண்ணீர் தேசம்'
இன்றே மாறும் 'அன்பின் தேசமாய்...'

இனிமையான காலங்களாய்
பசுமையான நினைவுகளாய்
மாறவேண்டும் இந்த கண்ணீர் தேசம்
மாற்றுவோம் இது 'எங்கள் தேசம்'...

இன்றே மாறும் 'அன்பின் தேசமாய்...'

இனிமையான காலங்களாய்
பசுமையான நினைவுகளாய்
மாறவேண்டும் இந்த கண்ணீர் தேசம்
மாற்றுவோம் இது 'எங்கள் தேசம்'...

**பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்காண்போட்டிகளில்**
**கீழ்ப்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை**

# மண்ணுக்காய் மரிப்போம்!

தொலமியின் தொல்பொருள் ஆய்வில்கூட
தொலைந்து போகாத இலங்கை மண்ணை
இனம் என்னும் 'வைனும்'
மதம் என்னும் 'மதுவும்' அருந்தி
ஏனம்மா... இந்த மானிடம் தொலைக்கப் பார்க்கிறது.

சுய நலத்தின் சுருட்டு முடிச்சுக்குள்
முடங்கி கொண்டு 'தான்' எனும்
அகம்பாவத்துடனும் 'தனக்கு' எனும் இருமாப்புடன்
அலைகிறதே இந்த மனித இனம்!
பாவம்...
தான் வாழ்ந்த இயல்பு வாழ்க்கையின்
இதிகாசத்தை இன்னும் உணரவில்லை போலும்!

தாயானவள் சுமந்தாள் ஈன்றாள்,
அவளது பாரம் அன்றோடு குறைந்தது
அன்று தொடக்கம் உன் அழுகுரல் கேட்டதும்
உன்னை அனைத்துத்தாங்கியதே இந்த இலங்கை மண்
அது அன்றுனை ஏற்க மறுத்தால்
நீ பிறந்ததற்கான உயிர்ச்சுவட்டுச் சான்றுகள் கூட உலகில்
இஞ்சியிருக்காது!

ஐயோ...
சொந்த பூமியை, சொக்கித்துக் கூற வேண்டிய
சொர்க்க பூமியை - இன்று
சொல்லக் கூட உச்சரிக்கத்தயங்குகிறதே எம்
சமூகம்...
இலங்கையின் மதிப்பு என்னவென்பது அவர்கள்
அறிவுக்கு இன்றும் எட்டவில்லை!

குட்டித் திவம்மாஇது!
யுத்த குழிக்குள் தள்ளிவிட்டீர்களே!
மலரத் துடிக்கும் மொட்டை
பெற்றோலிட்டுக் கொழுத்துவது
போலல்லவா இருக்கிறது உங்கள் ஈனச்செயல்

போராடிப் போராடி சுதந்திரம் பெற்ற
நாட்டில் இன்று போராட்டங்களுக்கே
அதிக சுதந்திரம்!
கண்டதற்கெல்லாம் 'கத்தி'

கொண்டதற்கெல்லாம் 'கொலை'
தாயின் மார்பகங்கள் அறுக்கப்பட்டதைக்
கண்டு பயந்தோடிய குழந்தை
தன் தந்தையின் தலையில் பட்டு
விழுந்தவேளை, தன்னை தாங்குவது
போல வந்த கை, வெட்டப்பட்ட தன் அண்ணன் கை!
இவையே! கோரயுத்தமும், ஈனத்தனமான
இனப்போராட்டங்களும் உங்களுக்கு ஈட்டித்தந்தது!

வீரம், வெற்றி, உண்மை, நேர்மை
அனைத்தும் இலங்கையின் மூலதனம்
இலங்கிலாந்தில் முதலிடுவதா?
இல்லை மூலதனமும் எங்களது
முதலீடும் எங்களது! ஆஹா...
கொஞ்சம் பொறுங்கள்,
உருவாகப் போகிறார்கள் மண்ணை காக்க
ஆயிரம் மகாத்மாக்கள்,
கண்ணீர் துடைக்க பலநூறு தெரேசாக்கள்...

யுத்தத்தால் செத்தது பாதிபோக
மீதியை தேர்தல் வந்து தேய்த்தழிக்கிறது!
வல்லரசுகளே வருடம் ஐந்து கடந்தே
எதிர்நோக்கும் தேர்தலை .
சில்லறை நாடான எம் நாட்டிற்கு
இருவருடமொரு தேர்தல் தேவைதான?

ஒருதட்டில் சோறுண்ட கபிலவும், கமாலும், கபீரும்
இன்று ஆளுக்கொரு கட்சியாய்
ஆங்காங்கே அலைகிறார்கள் கையில் கத்தியுடன்
அழகிய முத்தம்மா நம் தீவு
அநியாயமாய் அழகிறதே!

மனிதா!
நீ தடம்பதித்த மண் தன்னை
காப்பாற்றுமாறு தத்தளித்துக் கேட்கிறது!
உன் காலைக் கூட தன் தலையில் தாங்கிய
தாய் நாடடா இது - நீயோ கரம்
நீட்டத்தயங்குகிறாயே!

சோதரா, நீ அறியாது கழித்த
அந்த நாட்களை அடியோடு மறந்திடு!
என்னோடு கொஞ்சம் புறப்படு புதிய
பாதை நோக்கிய ஓர் புனிதப் பயணத்தில்!
காலச் சக்கரம் சுழன்று கொண்டே இருப்பது

நீ உணர்ந்து கொண்டே இருப்பதற்காக அல்ல
நேரங்கள் உன்னை உயிர்ப்பிக்கும் விதைகள்
கற்பனைகள் வெறும் காகிதப் பூக்கள்
செயல்கள் என்ற கிளைகளை உருவாக்குங்கள்
வல்லரசுகளுக்கும் சவால் விட இனித் தயாராகுங்கள்!

நம் நாட்டுத் தேனீருக்கு இணையான தேயிலை
எங்கும் இல்லை!
நம் சொத்தான இரத்தினக்கல்லை கொஞ்சம்
இரவல் வாங்குகிறது இங்கிலாந்து!
இதுதான் சந்தர்ப்பம், துணிந்தெழு!
காகிதக்கப்பலைக்கூட கடலில் செழுத்துவோம் என்று
கனடாவுக்கு சவால் விடு!


சுப்ரபாதமும், அதானும் கலந்தொலித்து
காதுக்கு இனிமை தருகிறது!
மல்லிகையும், மெனிக்கேயும்
ஓடி விளையாடுகிறார்கள், ஒருபக்கம்
பொலிஸ் அதிகாரிகளுக்கு வேலை இல்லை
அங்கு முரண்பாடுகள் சம்பந்மான முறைப்பாடுகளில்லை!
ஆஹா...
நான் கனவு காண்கிறேன், நனவாக்கலாம்
கொஞ்சம் விழித்தெழுங்கள்...

சந்திர மண்டலத்தில் நம் தேசியக் கொடி நடுவோம்,
மரணித்திருந்த மனித நேயத்தை
மெல்ல வளர்ப்போம்,
காற்றுக்கு வடி கட்டுவோம்,
கடலுக்கும் அணைகட்டுவோம்,
புறப்படுவோம், முடியாதென்பது முட்டாளின்
அகராதியில்...
வாருங்கள் வீர புத்திரர்களே இறுதியாக
உடலை மண்ணுக்காய் மரிப்போம்!

**பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்திறன்காண் போட்டிகளில் மத்திய பிரிவில் 1ம் இடம்பெற்ற கவிதை**

*With Best Compliments From*

# BROADWAY MOTORS



Authorized Dealer for
STAFFORD MOTOR CO.LTD.
For
HERO HONDA

MAIN STREET, AKKARAIPATTU
Tel: 067 2277404

*With Best Compliments From*

# ASEAN FINE ART ENTERTAINMENT (PVT)LTD.

PRODUCING TELE DRAMA AND FILMS

55,1/3, Manning Place,
Colombo-06
Tel:2361001, 2361205
Fax:2361204.

Hot:0777 739185

Wed:aseanfineart.com
E-mail: asean_fineart@yahoo.com

# சுனாமி தந்த சோகச்சுவடுகள்

வீடிழந்தோம்! நாடிழந்தோம்
நான்கின மக்கள் இழந்தோம்
சுனாமி என்னும் இயற்கையினால்
இன்னும் பல இழந்தோம்.

சொல்லித் தவிர்த்த சோதனைகள்
சொல்ல முடியாத வேதனைகள்
வந்ததோ சில நிமிடம்
அள்ளிச்சென்றதோ பல்லாயிரக்கணக்கான உயிர்கள்

சினங்கொண்ட அலைகளே
வெறிகொண்டு பாய்ந்ததேன்,
இன்னல்கள் பல இருந்தும்
உன்னை நம்புகின்றான் மீனவன்.

ஏன் இந்த கோபம்
இத்தோடு முடியட்டும் உந்தன் சாபம்
எம் அன்னை இலங்கையவள்
கரையோரம் அனைத்தும் அழித்து விட்டாயே

குழந்தையின் அழுகைக் குரலைக் கேட்டோம்
அன்னையின் தவிப்பைக் கண்டோம்
ஏன் இந்த சீற்றம்
ஒழியட்டும் உன்னுடைய பதற்றம்

உன்னுடை சீற்றத்தினால் எம்நாடுமல்ல
எமது அயல்நாடும் அழிந்தது
ஒளியுடன் வாழ்ந்த மக்களை
இருளென்னும் இருட்டறையில் தள்ளி விட்டாயே

தொலைக்காட்சி சத்தம் கேட்கும் வீட்டில்
எல்லோருடைய அழுகைச் சத்தம் கேட்கின்றது
கனவோடு இருந்த மக்கள்
நனவாகும் ஏக்கத்தில் தவிக்கின்றனர்

நீ செய்த நன்மைகளுள்
எம்நாட்டில் ஒற்றுமையை வளர்த்து விட்டாய்
உன் அழகினை ரசிக்க வந்தவர்களுக்கு
நீ அனைவரையும் ருசித்து விட்டாயே

உன் கடலலைகளை பார்க்க வந்தவர்களுக்கு
நீ சுடலையை காட்டிவிட்டாயே
செழிப்பான பயிர்கள் அனைத்தும் நாசம்
இறந்த உயிர்கள் அனைத்தும் மோசம்

செந்தழிப்பாக இருந்த நம் தேசம்
பாசமின்றி அழுகின்றது
யேசு பிறந்த நாளை சந்தோஷத்துடன் கழித்த மக்கள்
அடுத்த நாளே பதறி ஓடினர்

சிக்கல்கள் பல இருப்பினும்
சோகங்கள் சொல்ல இருப்பினும்
துணையின்றி அழுதனர்
சுனாமியில் அகப்பட்டவர்கள்

இரக்கம் போன்று வேஷத்தைக் காட்டி
அனைவரையும் மோஷத்துக்கு
அள்ளிச் சென்றாயே
இயற்கையினால் ஏற்பட்ட சோகத்தை
யாரிடமும் சொல்லாமல்
பொத்தி பொத்தி வைத்து
அழுதனர் மனம் என்னும் ஆலயத்தினால்

உன்னுடன் வேஷங்கள் இத்தோடு
ஒழியட்டும்
கவலைகள் இருப்பினும் உனை நம்பிய
எம் மக்களை
இனி ஏமாற்றாதே

யுத்தம் என்னும் வலியுடன் இருந்த
மக்களுக்கு
சுனாமி என்னும் அழிவைக் கொடுத்தாய்
போதும் நமது வேதனை
இனி தொடங்கட்டும் பல சாதனைகள்

ஏற்றிய தீபங்கள் அணையலாம்
செதுக்கிய சிற்பம் மறையலாம்
வரைந்த ஓவியம் அழியலாம்
ஆனால் சுனாமியின் வேதனையை மட்டும் மறக்க முடியாது

அடிப்படை வசதியின்றி
ஆடை, வீடு என பல இன்றி
நமக்கிடையில் இருந்த ஒற்றுமையை
ஒரு நொடியில் பறித்து விட்டியே
செந்தழிப்பாக இருந்த நம்நாடு
செந்நீராக மிதக்கிறது.
உன் அழகையும் உயர்வையும் கண்ட
மக்கள் உன்னுடன் நெருங்கி பழகினர்
நீ அனைவரையும் நெருங்கி விட்டாயே

சாதி, மத, பேதமின்றி
அள்ளிச் சென்றாய் சுனாமியே
அது தான் உன்னுடைய
ஒரு சிறப்பு
உன் வேஷங்கள் போதும்
இனி உன் பாசத்தை மக்களுக்கு காட்டு

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன்காண்
போட்டிகளில்
கீழ்ப்பிரிவில் முதலாமிடம்பெற்ற கவிதை

*With Best Compliments From*




**COLONIAL HARDWARE STORES**

Importers, Distributors & General Hardware Merchants

427, OLD MOOR STREET, COLOMBO-12, SRI LANKA
TEL:2431950, 2435414, 2347981-83-89
Fax: 2334090, 2387526
E-mail: colonial@slt.lk / info@colonialhw.com
Web.www.colonialhw.com

*With Best Compliments From*

**MR.M.M.RIZLIN**

AKKARAIPATTU

# மேற்கில் ஓர் உதயம்

மாலைப் பொழுது சூரியன் அஸ்தமித்து வெகுநேரம் ஆனது அறிந்தும் சிவா இன்னும் யோசனையை விட்டு அலகவில்லை. இரவு இரவாக கண் விழித்து யோசனை செய்ததன் காரணமாகவே அவனின் கண்கள் சிவந்திருந்தன. ஜன்னல் வழி தெரிந்த சூரியனின் தோற்றம் உனக்கு இன்னும்மொரு அரக்கனான நாள் காத்திருக்கின்றது என பயமுறுத்தின. காலதேவன் தன் கடமையை சரியாக தான் செய்திருக்கின்றான். ஆம் சிவாவின் தென்றல் போன்ற வாழ்வு புயலாக வீசி சீர்கொட்டு போனது இன்றோடு 5வது வருடம். இந்த 5 வருடங்களும் அவனுக்கு பைத்தியமாகதான் தோன்றுது. இன்று அவன் அப்பாவின் 5வது ஆண்டு நிறைவு நாளும் அவனின் தங்கையின் 5வது நிறைவு நாள். ஒரு வீட்டில் இரண்டு ஜீவன்களை கொனா செய்த பாவி எங்கு இருப்பான்? எப்படி இருப்பான்? என்று மனத்தில் தோன்றியது. ஆயினும் வலுக்கட்டாயமாக அந்த அரக்கனின் நினைவுகளை உதறி தள்ளிவிட்டு அதன் காரியங்களை செய்வதற்காக எழுந்து சென்றான்.

சிவாவின் குடும்பம் மிகவும் சிறியது அன்புக்கு அம்மா அறிவுக்கு அப்பா எனவும் ஆசை தங்கை தன் பாசமலர் போன்ற அழகுக்கு சிரிக்கும் தேவதையான கீதா. சீதா போன்ற தான் சிவாவின் தங்கை கற்புக்கரசி அது தான் போலும் தன் மனத்தில் நினைத்தவன் கிடைக்கவில்லை என தெரிந்ததும் தற்கொலைக்கு துணிந்துவிட்டாள்.

அவள் துணிச்சல்காரி ஆயினும் அவன் அண்ணனுக்குப் பல வேதனைகளை கொடுத்துவிட்டு அல்லவா சென்று விட்டாள். தன் மகள் உயர் துறந்ததை அறிந்த தந்தை மாரடைப்பால் செத்து இறந்து விட்டார். இத்தனை சோகங்களுக்கு மத்தியிலும் சிவா இந்த 5 வருடங்களை உயிர் அற்ற பிணமாக கழித்து விட்டான். சிவா குளித்துவிட்டு வந்ததும் தாய் தந்த காபியை குடித்து விட்டு தன் தந்தையின் தங்கையின் படத்திற்கு பூவைத்து சிறிது நேரம் கண்களை மூடியபடி இருந்தான். இதனை பார்த்துக் கொண்டிருந்த சிவாவின் தாயாரின் கண்கள் கலங்கின. இவ்வாறு சிவா கண்கள் மூடியபடி இருப்பதை பார்த்த அவனுடைய செல்போன் பொறுக்க முடியாமல் சிவா சிணுங்கியது தனது கையடக்க தொலைபேசிக்கு உயிர் உயிர்கொடுத்தான் “ஹலோ” என்றான். மறுமுனையில் யாரிடமோ ஒரு சில வார்த்தைகளை கதைத்துக்கொண்டிருக்கும் போது அவனுடைய முகம் வியர்த்து ஓடியது. கண்கள் சிவந்தது. கைகள் நடுங்கியவாறு கையடக்கத் தொலைபேசியை அணைத்து விட்டு கதிரையில் வந்து அமர்ந்தான். சிவாவின் தாயாருக்கு என்ன இங்கு நடக்கின்றது என புரியவில்லை. அவன் அருகில் சென்று “சிவா என்ன நடந்தப்பா” என பதற்றத்துடன் வினாவினார். உடனே சிவா “அம்மா! நான் யாரை வாழுகின்ற இந்த நாட்களில் பார்க்கக்கூடாது என்று நினைத்தேனோ அவனை இன்று பார்க்கும் படி அழைப்பு வந்திருக்கின்றது. என் தங்கையின் வாழ்க்கையை குழிதோன்டி புதைத்த என் உயிர்தோழனும் என் தந்தையை கொன்ற யமனையும் பார்க்கும் படி அழைப்பு வந்திருக்கின்றது. அவன் இன்று உயிருக்காக போராடுகின்றானாம். என்னை அவசரமாக இன்று பார்க்க வேண்டுமாம் எனக்கு வேதனை தாங்கமுடியவில்லை. நான் அந்த பாவியை பார்க்கமாட்டேன் அம்மா! பார்க்கமாட்டேன்” என கதறியவாறு தாயின் மடியில் தலை சாய்த்தான்.

ம்.. அவனுடைய தாய்க்கு விஷயம் விளங்கி விட்டது. உடனே சிவாவின் தலையை தூக்கி "சிவா..., அவனுக்கு இப்ப என்னவாம்..." என வினாவியதும் சிவா கூறினான். "அம்மா அவனுக்கு இன்று ஒரு விபத்தாம். அதில் உயிர் இன்னும் சில மணிநேரத்தால் போய்விடுமாம் இதனால 'மலர் மருத்துவமனை'யில் தொலைபேசி வந்திருக்கின்றது. அம்மா என்னை மிகமிக அவசரமாக பார்க்க வேண்டுமாம்" என கண்ணீரை துடைத்து கொண்டு சொல்லிமுடித்தான்.

"சிவா தவறு செய்வது மனித இயல்பு... ஆனால் அதை மன்னிக்கின்றது தெய்வ தன்மை. சிவா நீ கட்டாயம் அவனை போய் பார்க்க வேண்டும். எந்த மனிதனும் உயிர்போகும் போது தான் தன் தவறை உணர்கின்றான். நீபோய் அவனை பார் இப்பதான் அவனின் உயிர் தத்தளிக்கமால் போகும்" என்றார். "அம்மா மேற்கில் ஓர் உதயம் நடந்தாலும் நான் அவனைப் பார்க்க மாட்டேன்! அம்மா"

'சிவா ப்ளீஸ் சொன்னால் கேட்கனும். அவன் எவ்வளவு பாவியாக இருந்தாலும் அவன் உன் உயிர்தோழன் முதலில் நட்புக்கு மதிப்புகொடு பின்பு உன் வைராக்கியத்தை வைத்துக்கொள். சிவா நீ நிச்சயம் போகனும் அப்பதான் உன் தங்கையின் தந்தையின் ஆத்மா சாந்தியடையும். இன்று அவையண்ட 5வது ஆண்டு நிறைவு. இன்று ஒரு நல்லகாரியம் செய்ததாக நினைத்துக் கொள்... ம்... கெதியாக ரெடியாக நாலும் இதே வந்துவிடுகின்றேன் என தன் அறைக்குள் சென்று மறைந்து விட்டாள்.

சிவாவின் கைகள் காரை தன் பாட்டிலே ஓட்டிச் சென்றது. அவன் மன அலைகள் தன் உயிர் தோழனும் தன் தங்கையின் யமனான சுரேஷ்சை சுற்றி சுற்றியே வந்தது...!

5 வருடங்களுக்கு முன்... அழகாக பூத்த ரோஜா பூவை போன்று சீதாவும் சிவாவும் கோயிலுக்கு சென்ற போது தான் தன் உயிர்தோழன் சுரேஷ்சை கண்டான் சிவா.

டோ சுரோஷ் எங்க இங்க, உனக்கு தான் சுவாமி கும்பிடுகின்ற பழக்கமே இல்லையே...!

டோ சுரேஷ் எங்க இங்க, உனக்கு தான் சுவாமி கும்பிடுகின்ற பழக்கமே இல்லையே...

டோ நான் எங்க சுவாமி கும்பி வந்தநான். நான் இங்க தேவதைகள் தரிசனம் தருகின்றது என கேள்விப்பட்டேன். அதுதான் பார்க்கவந்தேன் என சீதாவை பார்த்து கண்சிமிட்டினான். "டோய் அது என் தங்கச்சி நினைவு இருக்கட்டும்" என குறும்பாக சிரித்து கொண்டே மூவரும் சுவாமியை தரிசனம் செய்து விட்டு சிவாவின் வீட்டை அடைந்தனர். சுரேஷ் தாய் தந்தை அற்ற அநாதை. பாடசாலையில் விடுதியில் இருந்து படித்தவன். அப்போது தான் சிவா, சுரேஷ் நட்பு மலர்ந்தது. இன்று அது கிளைவிட்டு பரப்பும் ஒரு மரமாக தளர்த்து இருக்கின்றது. அத்தோடு அந்த ஒரு மாதத்தால் சுரேஷ் சிவாவின் உறவும் ஆக போகின்றான். ஆம் அதுதான் சீதாவை சுரேஷ் திருமணம்

செய்து கொள்ள போகின்றான். நாட்கள் கடந்தன. திருமணத்திற்கு இன்னும் இருப்பது ஒரு கிழமை மட்டுமே. சிவா திருமண வேலை அனைத்தும் தானே தலையில் போட்டு செய்து கொண்டிருந்தான்.

பத்திரிகையை அனைத்து உறவுக்கும் கொடுத்து விட்டாயிற்று. பாக்கி திருமணம் மட்டுமே என நிம்மதி மூச்சு விட்டு கொண்டிருக்கின்றான். திருமண வேலைக்காக சுரேஷ் சென்னை சென்று இருந்தான். திருமணத்திற்கு ஒரு நாள் இருந்தது. சிவாவுக்கு பதற்றம் அதிகரித்து கல்யாண மாப்பிள்ளை இன்னும் வரவில்லையே, திருமண நாளும் வந்தது. சொந்தம் பந்தம் சென்று மண்டமம் களைக்கட்டியது. சீதா அலங்கரிக்கப்பட்டாள். சிவாவுக்கு பதற்றம் அதிகரித்தது. கையடக்க தொலையில் சுரேசை தொடர்கொண்ட போதும் சுரேஷிடம் கதைக்க முடியவில்லை.

முகூர்த்த நேரம் நெருங்கியது. மண்டபத்தில் சிறு சலசலப்பு. சிவாவின் தந்தைக்கு பதற்றம் அதிகரித்தது. சிவாவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. நாளிகைகள் நடந்தன. சுரேஷ் வந்து சேரவில்லை. சொந்தக்காரர் எல்லாம் ஏதோ கதைத்துக் கொண்டு கலைந்து சென்று விட்டனர். நாளிகைகள் கடந்து நாட்களாக மாறியது.

ஆனால் சிவாவின் குடும்பத்தால் மட்டுமே நம்பிக்கை நீடித்து இருந்தது. ஒரு கிழமைக்கு பின்பு தான் விஷயம்ட தெரிந்தது. சுரேஷ் வேறு ஒரு திருமணம் செய்துவிட்டான் என்பது இதனை கேட்ட சீதா தற்கொலையும் செய்து விட்டாள். அவள் தந்தை மாரடைப்பால் இறந்துவிட்டார். இன்று அந்த சுரேஷ் உயிருக்காக போராடுகின்றான்...

மலர் வைத்தியசாலையை அடைந்தான். சிவாவும் அவன் தாயும் அவர்கள் பிரிவுக்கள்சென்றபோது அங்கு சுரேஷ் உயிருக்கு போராடுகின்றான். அவன் அருகில் அவன் மனைவி ப்ரியா ஒரு குழந்தையை கையில் வைத்துக் கொண்டு அழுதபடி இருந்தாள். சிவா மெல்ல நடந்து சென்று சுரேஷின் அருகில் இருந்தான். சுரேஷ் மெதுவாக கண்விழித்து பார்த்தான். அவன் கண்கள் சூரியனைக் கண்ட மலர்கள் போல பிரகாசமானது. பின்பு சிவாவின் கைகளை தொட்டு சிவா என்னை மன்னித்து விடு சிவா! உனக்கும் உன தங்கைக்கும் நான் செய்த பாவத்தை மன்னித்து நீ என் மனைவியை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். சிவா! ஏற்றுக்கொள்ள வேண்டும். சிவா என்னை மன்னித்து விடு ப்ளீஸ்! என்றான். பின்பு அவன் கைகள் தானாக கீழே விழுந்தன. ப்ரியா கதறி அழுதாள். ஆம் சுரேஷ் இறந்து விட்டான்.

சிவா சுரேஷின் இறுதி கிரியைகளை முடித்துவிட்டு வீடு திரும்ப ஆயத்தமானான்.! தாய் வீடு திரும்பும் நாளும் வந்தது. சுரேஷ் இருந்த வீட்டை பூட்டிக்கொண்டு ப்ரியா தன் கைக்குழந்தையை தூக்கிக்கொண்டு சிவாவுடன் நடந்தாள். சூரியன் அன்று நிச்சயமாக மேற்கில்தான் உதிர்ந்திருக்கவேண்டும்.

**பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்திறன்காண் போட்டிகளில்**
**மத்திய பிரிவில் 1ம் இடம்பெற்ற சிறுகதை**

*With Best Compliments From*

# VAN FOR HIRE

(A/C, Non A/C)




**Instant Services
to Airport**

Colombo to Jaffna
(Two way)
for any other occasions)

Contact In Colombo
**40, SWARNA ROAD, COLOMBO-06.**
**TEL: 0112586721, 2594360 MOBILE: 0777316 452**


*With Best Compliments From*



VKS


# VKS HARDWARE

Dealers in, PVC Pipes, Hot Water Fittings &
Paint, Building Materials, Electrical Goods, Bolt &
Nuts



77A, MANNING PLACE,
COLOMBO-06
Tel: 4527573
Mobile: 0777 792388, 0777 902703
Fax: 2763743




BLUE & GOLD Creations
Batch of 2005 A/L
பெருமையுடன் வழங்கும்
புதுமைத் தாளலயம்

# STUDY ABROAD

LONDON , CANADA , AUSTRALIA, MALAYSIA,

- Minimum qualification G.C.E.(O/L)
- Course fee Payable in Installment
- All field of studies available

Jan/Feb 2006



**All Payments After Visa**

We Are Providing Financial Supporting Services

**AIIT** 527,Galle Road Wellawatte

AMERICAN INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

TEL : 011- 4514297 / 011-2361956 HOT LINE : 0714195364

புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன

**MS Office**

**Internet & E-mail**

- Introduction
- Downloading
- Online entertainment
- Chatting
- Free e-mail sending & receiving

24 Hrs online - ADSL

**COMPUTER HARDWARE ENGINEERING WITH NETWORKING**

- Diploma in Computer Studies
- Diploma in Web Designing
- Diploma in Desktop Publishing

*Diploma in* **Graphics**

- Corel Draw
- Adobe Photoshop
- Adobe Pagemaker
- Scanning

*Diploma in* **Multimedia**

- Digital Audio Editing
- Digital Audio Editing
- 3D Studio Max 5

**AUTO CAD 2004 2D & 3D**

**COMPUTERIZED ACCOUNTING**

ACCPAC QUICK BOOKS PRO. MYOB

**AIIT**

527, Galle Road, Wellawatte,
(Opp.Vivekananda Road)
☎ 4514297 Fax 2361956

AMERICAN INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

# நாளை நமதே

விரைந்திடு நண்பா...
வியத்தகு விந்தைகளையும்,
மேன்மைமிகு சிந்தையையும்,
புலப்படுத்தும் நேரத்தை நீ உணர்ந்தால்...
அதுவே உனது வழிகாட்டி!

விரைந்திடு நண்பா...
உனது இலக்கை நீ தூரநோக்குடன் பார்!
அதில் தடைகளும் உண்டு:
சுவாரஸ்யமும் உண்டு:
அதில் உன் வெற்றியை நீ காண்போம்

விரைந்திடு நண்பா...
கவிதைகளும் பொய்யாகிப் போகும்,
ஆனால்...
உன் முயற்சி பொய்யானது!
எங்கு உழைப்பு இருந்தால்,
அதில் உன்னை நீ காண்பாய்!

விரைந்திடு நண்பா...
உன் பயணத்தில் தடைகள் எதுவும் இல்லை
இதுவரை ... ஆனால்...
தடைகளே இல்லை இனியும் என்பது,
கேணித் தவளையின் மூடச் சிந்தனைக்குச் சமம்!

விரைந்திடு நண்பா...
வீண்சிந்தனையை தூர வீசியெறி
அதுவே உன் வெற்றியின் முதல் எதிரி!
நப்பிக்கையுடன் உறவாடு,
அதுவே உன் வெற்றியின் முதல் நண்பன்!

விரைந்திடு நண்பா...
காலத்தின் கட்டளையின்படி நடந்து
முயற்சியின் உச்ச கட்டம் எதுவே!
அதுவே வெற்றி! அதாவது
அதுவே நாளை!
நாளையை நமதாக்குவோம்!

சுமையா கரீம்
கொ.முஸ்லிம் மகளிர் கல்லூரி
கொழும்பு - 4

# பெண் விடுதலை வீரன் பாரதி

அந்தியிலே பூப்பதெல்லாம் பூவா?
ஆழியிலே கிடைப்பதெல்லாம் அழகுமுத்தா?
சந்தையிலே விற்பதெல்லாம் தேனைப் போலத்
தனியினிப்பைத் தருகின்ற சரக்கா? இல்லை
சந்தியிலே தவித்தமிழ்க் கவியை நாட்டில்
சரஞ்சரமாய்த் தொடுத்திங்கே தமிழைக்காத்த
செந்தமிழன் பாரதியைப் போல் அவனியில்
தேனமுதப் பாவலன் யார்? அவனைவிட்டால்

சொக்கி அவன் பாட்டாலே துடித்தெழுந்து
சூரர்கள் தோன்றியதாய் வரலாறுண்டு
முக்கனியின் சாற்றோடு சோதனை சேர்த்து
மோகப் பூங்கவி தந்தான் புரட்சித்தீயைக்
கக்கியவன் அவனேதான் புதுமைப் பாதை
காட்டியவன் பாரதிதான் வெள்ளையர்க்குக்
கொக்கி அவன் என்பேன் நான் தேனைச்சிந்தும்
கோமளப்பூங் கவிவடித்த கொள்கை வேந்தன்

கொடி வைத்த கையறுந்து வீழ்ந்திட்டாலும்
கொள்கையது வீழாது வீரமென்னும்
செடி வைத்துக் கவிநீரால் மரமாய் ஆகச்
செய்தானே சிந்துகவி வளர்த்த தந்தை
நொடிப்பொழுதில் ஞானப்பசி தீர்க்கும்
நெகிழ்ந்து கவியெழுதப் பாரதி போல் யார்?
வெடிவைத்துப்பாடி வந்த வித்தைக்காரன்
வேந்துகவி பாரதிபோல் வேறிங்கு யார்?

சித்தத்தில் இனிக்கின்ற கவிதை தன்னைச்
செவியினிக்கத் தந்த மகன் புகழைச் சொன்னோம்
மொத்தத்தில் அவன் நல்ல புரட்சிக்காரன்
மோகனப்பூங் கவிமகனைப் புவியோர் போற்றும்
வித்தகனைக் கவிக்குயிலைப் பகையை நன்றாய்
வேரறுக்க வந்தவனைத் தமிழை நாளும்
முத்தமிட்ட பூமகனை என்றும் எங்கள்
மூச்சடங்கிப் போனாலும் இதயம் பாடும்.

**P.சுசந்தன்**
**8R**



# ஓர் ஓசை கேட்கிறது.

எங்கள் தேச எல்லையில் - ஓர்
ஓசை கேட்கிறது
எங்கள் இளமைகள்
விடிவுக் கதவுகளைத் தட்டிட

எங்கள் தேச எல்லையில் - ஓர்
ஓசை கேட்கிறது
எங்கள் வாசலில்
சிவந்த கோலமாய்ச்
சிந்திய நீர்
விடிவின் நிலவாய்
வாழ்த்துக்கள் சொல்ல
எங்கள் தேச எல்லையில்
ஓர் ஓசை கேட்கிறது.

மூலதன எலிகள் - நசுங்கி
முணங்கிட - எங்கள்
ஆலைகள் உழைப்புத்
தேனீக்களுக்கு
உரிமையாகிட
எங்கள் தேச எல்லையில்
ஓர் ஓசை கேட்கிறது.

எங்கள் புனித மண்ணில்
புதிய உதயங்கள்
தவழ்ந்து வந்திட எங்கள்
பனை ஓங்கி வளர்ந்தது
போல் - எங்கள்
கண்ணீர்க்கதை யோங்கி
வளர்ந்தது போதுமென்று
எங்கள் தேச எல்லையில்
ஓர் ஓசை கேட்கிறது.

ஏய் குடா நாடே
நீ கர்ப்பத்தில்
சர்ப்பங்கள் தாங்கியது
போதுமென்று
எங்கள் தேச எல்லையில்
ஓர் ஓசை கேட்கிறது.

எஸ். வினோத் குமார்
8 R

*With Best Compliments From*

**Trophies Sponsored
By
ADVANCE LEVEL 2007**

**P.PRATHEEPAN** (Biology)

**&**

**N.HISHAM MUHAMMATH**
(Combined Mathematics)

*With Best Compliments From*

KAJANAN SELVARAJAH
(Kajanrccb@yahoo.com)
12MST

&

Chinthaka Iraj
12M6

# ஒழுக்கம்

அல்லும் பகலும் நல்ல
ஆர்வத்தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்

பலவும் படித்து நீங்கள்
பட்டம் பெற்ற போதும்
உலகத்தோடும் ஒத்தே
ஒழுகிக் கொள்ள வேண்டும்

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொட்டி எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது


கன்றை நினைத்தே உள்ளம்
கசியும் பசுவை போல
நன்றி புரிந்தோர் தன்மை
நாமும் நினைக்க வேண்டும்.

பருவம் பார்த்து நாங்கள்
பயிரை செய்தல் போலக்
கருமந் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்.

கே.எம்.எம்.டில்ஷாட்
8 R

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With Best Compliments From*



# ARUNA ENTERPRISES (PVT) LTD.

***IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS***

*337, Old Moor Street,*
*Colombo-12,*
*Sri Lanka.*

*Phone: 2440961, 2421950*
*Fax: 2438902*
*Res.:2586902*

*With Best Compliments From*

# V.MANICKAM & BROTHER

34, 4TH CROSS STREET, COLOMBO-11
TEL: 2323408, 2323986

# பாட்டுக்கொருவன்

பாட்டுக்கொருவன் பாரதியும் - இந்தப்
பாரில் பெரிய கவிஞனடா,
பாட்டில் புதுமையைத் தோற்றுவித்து - அதைப்
பாமரரும் விரும்பச் செய்தாடனடா

பெண்கள் பெருமையை போற்றியடா - தன்
பேனா வலிமையை நாட்டிய பின்
பெண்கள் விடுதலை கோரின்ற - அந்தப்
பெற்றியை என்னென்று சொல்வேனடா

வைதீகம் பேசுவோர் தலைகுனிய - மூட
வழக்கத்தைத் தள்ளி மிதிப்போமென்ற,
தெய்வீக மார்க்கவி என்றறிவோம் - எங்கள்
தீந்தமிழ் வாழ்வித்த பாரதியும்

வெட்டுக் கனிகளியே தங்கம் எடுத்து - அவை
மேலைக்கடல் கடந்து வாணிபம் செய்ய
திட்டம் எமக்கமைத்துத் தந்தவனடா - நாம்
செல்வம் பெருக்க வழி சொன்னவனடா

ஆண்டுகள் தோறும் போற்றுகிறோம் - அவன்
ஆக்கங்களை வியந்தோற்றுகிறோம்,
மீண்டுமோர் பாரதி தோன்றவென - அந்த
மெய்ப்பொருளைத் தினம் வேண்டுவமே!

எம். இம்றான் சன்பாரி
12 வர்த்தகப்பிரிவு

# பிரிந்து, இழந்து, அடைந்து, உணர்ந்தேன்

பிரிந்தேன்:

கம்பீரமான அரச மரத்தினை சூழக் கொண்ட
எனது முதல் பாடசாலையினை பிரிந்தேன்...
கண்ணும் இமையும் போல் இருந்த என்னுயிர்
நண்பர்களை பிரிந்தேன்...
கள்நெஞ்சம் அற்ற என் மதிப்புக்குரிய
ஆசிரியர்களை பிரிந்தேன்...
கலைத்தாயின் சேய்களாய் வாழ்ந்த
என் உறவுகளை பிரிந்தேன்...

* * *

இழந்தேன்:

பல டொலர்கள் கொண்டும் வாங்கமுடியாத
சுத்தமான சுவாசக் காற்றை இழந்தேன்...
பலரின் பலவகையான
அன்பையும் இழந்தேன்...
படுக்கையிலும் தூக்கத்தை
இழந்தேன்...
பத்து ரூபாவுக்கு பட்பீடித்து கிறிக்கட் விளையாடிய
நாட்களை இழந்தேன்...

* * *

அடைந்தேன்:

வேத்தியச் சிங்கமெனும்
பெருமையை அடைந்தேன்...
வேறொருவருக்கும் கிடைக்காத அரிய
நண்பர்களை அடைந்தேன்...
வேற்றுமையிலும் ஒற்றுமையாய் இருப்பதற்குப்
பழக்கம் அடைந்தேன்...
வேட்டையாடும் வேடுவனின் மண
தைரியத்தை அடைந்தேன்...

* * *

உணர்ந்தேன்:

பாம்புப் பொந்தினிலும் வாழ்வது எவ்வாறு?
என்பதனை உணர்ந்தேன்...
பதினேழு வயதினிலும் என்னால் முடியும்
என்பதனை உணர்ந்தேன்...
பகைமையினை நெஞ்சில் கொண்டு நண்பன் எனச்
சொல்பவர்களை உணர்ந்தேன்...
பாரினிலே வாழ்வது எழிதல்ல
என்பதனை நன்றாய் உணர்ந்தேன்...

* * *

இதுவரை நான் பிரிந்தவை போதும்
இனியும் வேண்டாம் ஒரு சிறு பிரிவும்...
இதுவரை நான் இழந்தவை போதும்
இனியும் வேண்டாம் ஒரு துளி இழப்பும்...

மு.இ.மு. இன்பாஸ்
வர்த்தகப்பிரிவு 2007

# TROPHIES SPONSORED
# by
# RAUF HAHEEM

*With Best Compliments From*

## RAHEEMA
**HOTEL & STORES (PVT) LTD.**

Dealers in: Groceries, stationery
Cosmetics, Frozen Foods,
Vegetables & Gift Items

No. 44, Thrustan Road,
Colombo-03,
Sri Lanka.
Tel: 2586237,
2575752

*With Best Compliments From*

ENJOY YOUR STAY IN
TRINCOMALEE

At

## MANSION HOTEL

* Rooms with attached & common bath toilets
* All type of meals
* Restaurant with Foreign & local Liquor
* Transport facilities

**No. 23, Main Street,**
**Trincomalee**
**026 2222745**

# காந்தி

கத்தியின்றி இரத்தமின்றிப், புதுமையான
கண்ணிய நல் யுத்தத்தில் வெற்றி பெற்றோன்;
சத்தியத்தின் காவலனாய் நின்று என்றும்
காருண்ய நெறியினிலே புகழே பூத்தோன்.

கையாலே ஆடையது நெய்துடுத்தோன்
காலமெல்லாம் நாட்டுக்காய் உழைத்து நின்றோன்;
'ஐய! இவன் கோவணத்து ஆண்டி' என்று
அருவருப்பாய் வெள்ளையரால் பழிக்கப்பட்டோன்

அகிம்சை என்ற புதிதான ஆயுதத்தை
அகிலத்துக்கே அளித்து வெற்றி கண்டோன்;
அகிம்சை வழிநின்று முழுநாட்டுக்காக
அரியதொரு சுதந்திரத்தை அடையப் பெற்றோன்

"வெள்ளையனே வெளியே" என்று கூறி
வீரமோடு முழக்கமது இட்டுநின்றோன்:
வெள்ளையான வெளியேற்றித் தனது நாட்டு,
வீரமுறு சுதந்திரத்தை வென்றெடுத்தோன்.

இந்துவொரு முஸ்லிம்கள் ஒற்றுமைக்காய்
இன்னுயிரை அர்ப்பணித்த இணையில் வீரர்,
அந்த நல்ல மாமனிதர் வாழ்வொன்றும்
அனைவருமே பின்பற்றி வாழுவோமே.

M.AM. Insaaf Shanfari
4 H

# ஏக்கம்

ராகங்கள் நூறு தரும் வீணை ஒன்று
மேகங்கள் மாறி வரும வானம் ஒன்று
எண்ணங்கள் பலஊறி எழும் இதயம் ஒன்று
உணர்வுகள் மாறிவிடினும் உன் நினைவு ஒன்று


வானம் விரும்பாவிடின் நிலவு தனிமை
புஷ்பம் விரும்பாவிடின் அலை தனிமை
நீ விரும்பாவிடின் தேன் தனிமை
ஆழி விரும்பாவிடின் என்னுலகம் தனிமை

உறவை நம்பவில்லை முறிந்துவிடுமென்று
உயிரை நம்பவில்லை மறித்துவிடுவோனென்று
உலகை நம்பவில்லை (ஏ)மா(ற்)றி விடுமென்று
உன்னை நம்புகின்றேன் உன்பார்வை பொய்க்காதென்று

நீரில் தெரியும் நிலவு காணல்நீர்
இரவில் தோன்றும் களவு கானல்நீர்
என்னை தொடரும் என்நிழலும் காணல்நீர் - என்றும்
உன் நிழலை தொடரும் என் உணர்வே நிஜ (கண்) நீர்

பார்வையினில் நான் மறையினை உரைத்து
வார்த்தையினை வலிய சிறையில் மறித்த - உன்
பாசத்தின் பலமறியும் தேர்வு எழுதிய
பாதைகளின் பரிவு தோய்ந்த ஏக்கம்...

ஏ. அருன் பிரியந்தன்
கணிதப்பிரி 2007


ISHARA TRADERS
438, HAVELOCK ROAD, COLOMBO - 06
TEL : 2580467, 2593302, 2596810, 2597508, 5535992-3, 5544560-6
FAX : 94 11 2502225
E-mail: contact@ishara-traders.com
Baranches
375, Colombo Road, Kurunegala Tel : 037 5260301
726, Colombo Road, Kurana, Negombo Tel : 031 5311777, 031 2224368
260, Katugastota Road, Kandy Tel : 081 5740645, 081 5740646
566, Kandy Road, Peliyagoda Tel : 011 5362626, 011 5330803
447 A, Union Place, Colombo-02 Tel : 011 5365831, 011 2689881
166, Maya Avenue, Colombo -06 Tel : 011 5356040, 011 2588041
219, Niwanthidiya Road, Bokundara, Piliyandala. Tel : 011 5554159, 011 5554160
151, Maya Avenue, Colombo -06 Tel : 011 5369384, 011 5350412

உங்கள் பிரச்சினை

# ஆங்கிலம் பேச முடியவில்லை



என்பதா? கவலையை விடுங்கள்.

யாமிருக்கப் பயம் ஏன்?

## ஆங்கிலக் கற்கைக்காக மட்டும் உருவாக்கப்பட்ட Nalravi English Language Centre

Spoken English கற்கையை துரிதப்படுத்தும் நோக்கோடு அதிபர் முதல் அலுவலக பியோன் வரை எமது கல்வி நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் புதிய மாணவர்கள் சேர்க்கை நடைபெறும் சமயம் தவிர்ந்த எந்தவொரு வேளையிலும் ஆங்கிலத்தில் மட்டுமே பேச வேண்டும் என்ற சட்டத்திட்டத்தின் மூலம் முற்று முழுதான ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிபர் திரு. K.M.N Nalravi யின் தலைமையின் கீழ் விசேடமாக பயிற்சியளிக்கபட்ட அன்பான ஆசிரியர் குழு மூலமாக

கடந்த 14 வருடங்களில் Spoken English கல்வி மூலம் பாடசாலை மாணவர்கள் முதல் இல்லத்தரசிகள், அலுவலக ஊழியர்கள், தொழில் அதிபர்கள் வரை பல ஆயிரக் கணக்கான மாணவர்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டிய எமது கல்வி நிறுவனம் இலங்கையில் வேறு எங்கும் காணப்படாத அதி நவீன கல்வி தொழில்நுட்பங்களுடன் கூடிய குளிரூட்டபட்ட வகுப்பு அறைகளில் நடாத்தப்படும் எமது NALRAVI'S CERTIFICATE IN SPOKEN ENGLISH(NCSE) பாடத்திட்டத்தின் மூலம் தொடர்ந்து உங்கள் வாழ்க்கைக்கும் ஒளியூட்டும்.

குறிப்பு: அதிபர் திரு. **K.M.N. Nalravi** அவர்களின் பதிவு செய்யப்பட்ட குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையை கேட்க அழையுங்கள்

**5559544, 5539544.**



# NALRAVI
## ENGLISH LANGUAGE CENTRE

527, Galle Road, Wellawatta, Colombo - 6.
(Vivekananda Roadக்கு முன்னால்) E-mail: nalravi@bellmail.lk

**எமக்கு இலங்கையில் வேறு எங்கும் கிளைகள் கிடையாது.**

'Nalravi'யின் பெயரை பயன்படுத்தி நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆங்கில வகுப்புக்கள் நடத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

# JUNIOR AND INTERMEDIATE COMMITTEES



*With Best Compliments From*



# S.L.GROCERIES

*Wholesale & Retail Dealers in Grocery Items*

We supply food Items for wedding parties & Other occasions

**No.73, Dean's Road, Maradana, Colombo-10.**
**Tel: 2687998**

*With Best Compliments From*

# M.MUTHIAH PILLAI

**(COIR DEPT.)**

6, SRI KATHIRESAN STREET, COLOMBO-13
TEL: 2320575. H/L: 0777 364361
FAX: 4610176

*With Best Compliments From*

# DR. A. THAVABALASANDRAN

**(SENIOR PHYSICS TUTORIAL STAFF)**

ZEC = KANDY
TMSC = COLOMB-06
BRIL;LIANT = COLOMB-13

*With Best Compliments From*

# L.S.N. ENTERPRISES

## FRESN VEGETABLE ND. GROCERIES

**VAN FOR HIRE**
**TEL: 0777 777423**

384, Galle Road, Colombo-06
Tel: 011 2363978

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With Best Compliments From*

# BRILLIANT INSTITUTE

NO.136, SANGAMITHA MAWATHA, COLOMBO-13

TEL: 011 2347728, 2473792

BRANCH: NO. 150 JAMPETTAH STREET, COLOMBO-13

A/L SCIENCE

CHEMISTRY:
M.R.FAHUMUDEEN

PHYSICS:
A. THAVABALASANDRAN

BIOLOGY
V.UMASHANGAR

COM.MATHS:
S.SIVAKUMAR

A/L COMMERCE

ACCOUNTING
K.KALAICHELVAN

BUS.STUDIES:
A.THESAI

BUS. STASTISTICS:
A. VICKY

LOGIC: A.VICKY

ECONOMICS

**BRILLIANT MAKES BRILLIANTS**

*With Best Compliments From*

K P K

# K.P.K. CHETTIAR PTE Ltd

*General Merchant, Estate Suppliers, Cattle foods and All Kinds of Oil etc.*

No.18
Wolfendhal Street,
Colombo-13

Tel : 011 2447230
011 2433792
Fax : 011 4723439

E-mail: indhu@sltnet.lk

# றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தினால் நடாத்தப்பட்ட பாடசாலைக்கு உள்ளான போட்டிகளின் முடிவுகள்

## கீழ் பிரிவு

### 1J

#### உறுப்பெழுத்து

1ம் இடம் - எம். சீயோன்
2ம் இடம் - எஸ். சனுாஜன்
3 இடம் - எஸ். அபிதாரன்
3ம் இடம் - என். செந்தூரன்

#### சொல்வதெழுதல்

1ம் இடம் - ஜீ. சுலக்ஷனாத்
2ம் இடம் - எம். ஐ. எம். இஸ்யான்
3ம் இடம் - கே. ஜனகன்
3ம் இடம் - எம். எம். ஆதிப் முனாஸ்

### 1H

#### சொல்வதெழுதல்

1ம் இடம் - எம். எஸ். செந்தூரன்
2ம் இடம் - எஸ். அமேஷ்
3ம் இடம் - எம். என். எம். சுலைமான்
3ம் இடம் - எம். ஐ. அஷ்ரப் அலி

#### உறுப்பெழுத்து

1ம் இடம் - ஏ. ஈ. எஸ். சபேஷ்
2ம் இடம் - ஜே. நிதர்ஷன்
3 இடம் - எஸ். நிருஷன்
3ம் இடம் - வி. குகனேஷ்

### 2J

#### வாசிப்பு

1ம் இடம் - கே. திவ்யன்
2ம் இடம் - ரி. மயூரன்
3ம் இடம் - ஆர். கிரிஷேகன்
3ம் இடம் - எஸ். சவிஷ் காந்த்

#### சொல்வதெழுதல்

1ம் இடம் - எஸ். வித்தியாகர்
2ம் இடம் - எச். ஹாலித்
3ம் இடம் - பி. ராகுல்
3ம் இடம் - எஸ். ஸியாம் சந்தோஷ்

#### கட்டுரை

1ம் இடம் - வை. பர்ஸான்
2ம் இடம் - எஸ். ஸியாம் சந்தோஷ்
3ம் இடம் - ஜே. தினுஷன் திவாகர்
3ம் இடம் - ஆர். ரஜீவன்

### 2H

#### வாசிப்பு

1ம் இடம் - என். அப்துல் மலிக்
2ம் இடம் - ரி. தப்ஹீம்
3ம் இடம் - கே. அப்துல் ரஹ்மான்

#### கட்டுரை

1ம் இடம் - வீ. கோகுலன்
2ம் இடம் - எஸ். ஷவினாத்
3ம் இடம் - வி. நலின்
3ம் இடம் - எம். அப்துல் மலிக்

#### சொல்வதெழுதல்

1ம் இடம் - கே. அப்துர்ரஹ்மான்
2ம் இடம் - வி. கோகுல்
3ம் இடம் - வீ. கோகுலன்

*With best Complements from:*



# *The Exotic*

**(Tableware Showroom)**

50 Galle Road, Colombo 6. Tel: 250-8152 Fax: 250-0743

Email: theexotic@hotmail.com

# ரோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தினால் நடாத்தப்பட்ட பாடசாலைக்கு உள்ளான போட்டிகளின் முடிவுகள்

## 4J

### கட்டுரை

1ம் இடம் - என். துவாரகேஷ்
2ம் இடம் - ஜி. ஹரினாத்
3ம் இடம் - எச். இல்ஹாம்
3ம் இடம் - ரி. காந்தருபன்

### கவிதை

1ம் இடம் - வி. துவாரகேஷ்
2ம் இடம் - ஈ. எடிக் ஹரிஷன்
3ம் இடம் - பி. பாலமுரளி
3ம் இடம் - வி. சாருந்தன்

## 4H

### கட்டுரை

1ம் இடம் - பி. ஹிரன்ஜன்
2ம் இடம் - வி. எஸ். துஷ்யந்தன்
3ம் இடம் - ஆர். மிதூரஷின் பாரத்
3ம் இடம் - வி. திவ்யன்

### கவிதை

1ம் இடம் - எல். கீர்த்திகன்
2ம் இடம் - வி. பி. சுஜீவன்
3ம் இடம் - ஜே. கவின்ஹஷ்வந்த்
3ம் இடம் - எம். பவித்ரன்

## 5J

### கட்டுரை வரைதல்

1ம் இடம் - சதானந்தன்
1ம் இடம் - பாலகஜன்
2ம் இடம் - அஹமட் யஹியா அலிமுதீன்
3ம் இடம் - சுரேந்திரன் சைலோலிபவன்

### சொல்வதெழுதல்

1ம் இடம் - அம்பலவானர் செந்தூரன்
1ம் இடம் - யோகேந்திரன் ராதிகேஷ்
3ம் இடம் - கிருஷ்ணகுமார் விவேஷ்

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With Best Compliments From*

# MIM AGENCY & RICE MILL

**CONSUMABLE FOODS WHOLE SALE & RETAIL**

Sole Agent for
-- *LANKA SALT*
-- *MIWON*

**NO. 3-6 POTTUVIL ROAD,
AKKARAIPATTU.**

**Tele: 067 2277365
067 2277027**

# றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தினால் நடாத்தப்பட்ட பாடசாலைக்கு உள்ளான போட்டிகளின் முடிவுகள்

## கீழ் பிரிவு

### கட்டுரை வரைதல்

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | - | எம். நோயல் | 8Q |
| 2ம் இடம் | - | எஸ். ஸ்ரீகுனேஷின் | 7R |
| 3ம் இடம் | - | எஸ். ராகவேந்தன் | 8R |

### கவிதை

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | - | எஸ். எஸ். சத்தியேந்திரன் | 6R |
| 1ம் இடம் | - | பி. சுசாந்தன் | 8R |
| 2ம் இடம் | - | ஜெ. நிஜந்தன் | 8R |
| 3ம் இடம் | - | பி. இந்திரஜித் | 7R |

### சிறுகதை

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | - | நா. சஞ்ஜீவ | 8Q |
| 2ம் இடம் | - | பி. விசாகரசன் | 8R |
| 3ம் இடம் | - | ம. துவாரகன் | 8R |

### பேச்சு

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | - | பீ. அருணோதயன் | 7R |
| 2ம் இடம் | - | பி. அஜன் | 7R |
| 3ம் இடம் | - | ரி. தியாகேசன் | |

## மத்திய பிரிவு

### கட்டுரை வரைதல்

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | - | எஸ். துலக்ஷின் | 9Q |
| 2ம் இடம் | - | சி. மயூரன் | 10Q |
| 3ம் இடம் | - | ஆர். பிரதீபன் | 9Q |

### கவிதை

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | - | இ. அர்ச்சுனர் | 10R |
| 2ம் இடம் | - | ஜெ. அருள் பிரகாஷ் | 10Q |
| 3ம் இடம் | - | உ. சுஜீவ் | 10R |

### சிறுகதை


| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | - | வி. விபுஜிதன் | 9R |
| 2ம் இடம் | - | சு. சுஜன் | 10R |
| 3ம் இடம் | - | வை. கௌதமன் | 9Q |

### பேச்சு

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | - | எஸ். சுஜன் | 10R |
| 2ம் இடம் | - | எஸ். துலக்ஷின் | 9Q |
| 3ம் இடம் | - | ரி. தியாகேசன் | 9Q |

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With Best Compliments From*



# MEDI TOUCH
## PRIVATE LIMITED

No. 58/9. Maligakanda Road, Maradana, Colombo-10.
Tel: 011 4611298

***Specialist Consultation Chambers***

***Medical Laboratory Services***

***X-Ray***

***Dispensary & Surgery***



MEDICAL OFFICER IN CHARGE

**DR. MRS. T. NAZEER**

M.B.B.S. SL., D.F.M. S.L.

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

MAYURAPATHY
WISHES
ROYAL COLLEGE
LITERARY ASSOCIATION
A VERY GRAND

KALAIVIZHA
2005

# றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தினால் நடாத்தப்பட்ட பாடசாலைக்கு உள்ளான போட்டிகளின் முடிவுகள்

## மேற் பிரிவு

### கட்டுரை வரைதல்

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | - | எஸ். வசந்தன | 12M/ST |
| 2ம் இடம் | - | எம். ஐ. எம். இன்பாஸ் | 12Com/T |
| 3ம் இடம் | - | எம். ஏ. எம். இம்ரான் ஷின்பரி | 12Com/T |

### கவிதை

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | - | சு. விசாகன் | 11R |
| 2ம் இடம் | - | ந. ஹிஸாம் முஹம்மத் | 12M/ST |
| 3ம் இடம் | - | என். எம். ரஸா | 12 Com/T |

### சிறுகதை

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | - | ர. மு. ரிப்தி | 12 M/ST |
| 2ம் இடம் | - | சி. அர்ச்சுனா | 11Q |
| 3ம் இடம் | - | என். கு. அசோக்பரன் | 11Q |

### பேச்சு

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | - | கு. அசோக்பரன் | 11Q |
| 2ம் இடம் | - | எம். ஏ. எம். அப்ரான் | |
| 3ம் இடம் | - | சி. ராகுலன் | 11R |
| 3ம் இடம் | - | பிரதீபன் | 12 M/ST |

# தமிழ்மொழியின் சிறப்புக்கள்

தமிழென்பது ஆதி தொட்டு பழகி வரும் ஒரு மொழியாகும். இதைப்பற்றி கூறாத ஞானிகளுமில்லை, புலவர்களுமில்லை. தமிழுக்கு அமுதென்று பேர்: இந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்றும் ஒரு கவிஞர் அழகாக தமிழை வர்ணிக்கின்றார். தமிழென்பது அக்காலத்தில் ஒரு தலைசிறந்த மொழியாக காணப்பட்டது. ஆனால் தற்போதோ வீழ்ச்சியடைந்து வருகிறது. அக்காலத்தில் தமிழ் மொழியை கட்டியெழுப்பியவர்களுமுண்டு. வீழ்ச்சியடையச் செய்தவர்களுமுண்டு. ஆனால் தற்போது வீழ்ச்சியடைய செய்பவர்களே உண்டு. வருங்காலத்தில் நாம் தமிழை ஒரு முக்கிய மொழியாக கட்டியெழுப்ப வேண்டும்.

தமிழ் மொழியில் இலக்கணம், இலக்கியம் என்று இரு பிரிவுகள் உண்டு. இதைத்தான் எமது பாடசலையிலும் கற்பித்துத் தருகின்றனர். தமிழென்பது தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர், பறங்கியர் போன்றவரும் கற்று இதன் சிறப்பை அறியமுடியும்.

நான் முதலாவதாக எடுத்து காட்டப்போகும் விடயம் என்னவென்றால் தமிழ் மொழியின் சிறப்புக்கள் தமிழ் மொழியை கற்கும் போதெல்லாம் ஒரு உணர்ச்சி போன்ற பல திறன்கள் விருத்தியடைகின்றது. பாடசலையில் தமிழ் பாடத்தை உரத்து வாசிக்கும் போது வாசிப்பு திறன் விருத்தி அடைகிறது. ஆசிரியர் கூறும் கதைகளை கேட்கும் போது கேள்விஞானம் ஏற்படுகிறது என்று கூறலாம்.

தமிழில் மூன்று வகைகள் உண்டு. அவையாவன. இயல், இசை, நாடகம். இதில் இயல் என்பது இலக்கியத்தைக் குறிக்கும். இசை என்பது நாம் பாடும் சங்கீதம் என்பதை குறிக்கும், நாடகம் என்பது நாம் நடிக்கும் நாடகத்தை குறிக்கும்.

| | | |
|---|---|---|
| உதாரணம் | இயல் - | இக்கியம் |
| | இசை - | நாட்டார் பாடல் |
| | நாடகம் - | நளதமயந்தி |

ஆனால் இலக்கியங்களை மட்டும் வாழ்க்கையின் கண்ணாடி என போற்றப் படுபவை. ஆனால் இலக்கணம் என்பது பாடசாலையில் மட்டுமல்லாது வேறு இடங்களிலும், வேறு தேசங்களிலும் உண்டு. கல்விக்கழகு கசடறக் கற்றலாகும்.

நாம் பிறந்ததிலிருந்து எமது தாய் தமிழ் மொழியின் சிறப்புக்களை தான் கொடுக்கும் பால்மூலம் வெளிப்படுத்துகின்றாள்.

நாம் வளர்ந்து இளமைக் காலத்திற்கு வரும் போது எமது தந்தை கதைகள், பாடல்மூலம் வெளிப்படுத்துவதுமுண்டு. பாடசலைகளில் ஆசிரியர்கள் தமிழனின் சிறப்பை வெளிப்படுத்துவதுமுண்டு.

நாம் முதிர் பருவத்தையடைந்தவுடன் நாம் எமது பேரன் பேத்தி என்பவர்களுக்கு தமிழின் சிறப்புக்களை எடுத்துக் காட்டுகின்றோம். இதனால் படிக்கும் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியை இலகுவாக கற்றுக்கொள்ளலாம். தமிழ் மொழியை கற்பவர்கள் தமிழர் என்றழைக்கப்படுகின்றனர். இதைத்தான் பாரதியார் தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்று கூறுகின்றார். ஔவையார் போன்ற தமிழ்க்கிழவிகள் தமிழை மிகவும் சிறப்பாக புகழ்ந்துள்ளனர். திருவள்ளுவர் கூட தமிழின் சிறப்பைப்பற்றி தனது திருக்குறளில் ஈரடிகளில் மிக அழகாக விளக்கியுள்ளனர்.

ஆகவே நாமும் தமிழின் சிறப்புக்களை கற்றறிந்து பயன் பெற்று நல்லவாழ்வு வாழ்வோம்.

நன்றி

**கீழ்ப்பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை**

**ம.நொயெல்**

8Q

# மனிதன் மாறிவிட்டான்

மனிதன்! இறைவன் படைத்த இவ்வுலகினை நிரப்பப் பிறந்து, வளர்ந்து கொண்டேயிருப்பவன். மனிதனை, மனிதனாகக் காட்டுவது அவனிடம் இலங்கும் அன்பு, கனிவு போன்ற நற்குணங்களே. அவை இன்று மனிதனிடம் இல்லாமற் போய்விட்டன.

'அரிது, அரிது மானிடனாய்ப் பிறத்தல் அரிது' என்று பாடினார் ஔவையார். ஆனால் 'அரிது, அரிது மானிடனாய் வாழ்தல் அரிது' என்பது தான் இன்றைய மனிதனுக்கு உரைக்கப்பட வேண்டியது. மானிடன், அவனுக்கே உரிய பண்புகளைப் பிரதிபலிப்பவனாக வாழ வேண்டும். ஆனால் இன்றைய மனிதனோ, தன்னுள் அமர்ந்திருக்கும் கடவுளை விரட்டிவிட்டு, எங்கோ, அலைந்து திரிந்து கொண்டிருக்கும் மிருக மனதைத் தன்னுள் வரவழைத்து விட்டான்.

அன்றைய மனிதன் இயற்கையோடு ஒட்டி வாழ்ந்தான். அதனால் அவனிடத்து சத்துவகுணம் மேலோங்கி நின்றது. இறைவன் அருகில், ஏன்! அவனுள்ளிருந்து அவனை வழிநடத்தினார். அதனால் அவனால் இறைவன், இயற்கை, அன்பு, கனிவு, ஞானம் என்பவற்றை உணரமுடிந்தது, அதன்படி ஒழுக முடிந்தது. வரலாறு காணாது அரும் பெரும் இலக்கியங்கள் அவனால் தோற்றுவிக்கப் பட்டன. அவன் மனிதனாகப் பிறந்தான். சான்றோனாக வாழ்ந்தான். தெய்வ நிலையை அடைந்தான். ஆனால் அவன் ஆதிமனிதன். அன்றைய கால மனிதன் இக்குணங்களில், இயல்புகளில் ஒரு அணுவாவையாவது இன்றைய மனிதனின் போய்விட்டான்!

மனிதனின் உடல் மாறவில்லை. அங்கங்கள் மாறவில்லை. ஆனால் மனிதமனம், மனித அறிவு என்பன மாறிவிட்டன. மனித வாழ்வு, தெய்வ வாழ்வாக மாற அவசியமானது எண்ணங்கள், அந்த எண்ணங்கள் மாறிவிட்டன. எண்ணங்களால் ஆற்றப்படும் செயல்கள், கருமங்கள் மாறிவிட்டன. அதனால் அமையும் பலன்களும் மாறிவிட்டன. மொத்தத்தில் மனிதன் மனிதனாக வில்லை, மிருகமாகிக் கொண்டிருக்கிறான்.

இறக்கும் போது எரிவது இந்த சதையால் ஆக்கப்பட்ட உடல். ஆனர் அது மாறவில்லை. எரிக்கப்படாத, நசுக்கப்படாத, ஏன்! தொட முடியாது விளங்கும் எண்ணங்களும், மனமும் மாறிவிட்டன. மானிடப்பிறவியெடுப்பது உலகில் உள்ள நவீன பொருட்களை நுகர்ந்து இன்பம் அனுபவிப்பதற்கில்லை. அறிய இயலாத இறைவனை அறிவதற்கும், மனிதனாக வாழ்ந்து தெய்வநிலை அடைவதற்குமே. முன்னைய

காலங்களில் வாழ்ந்த மனிதன் அதற்கு முயன்றான். வென்றான். ஆனால் நவீனகால மனிதன் இதை உணரவோ, அறியவோ முடியாதவாறு இவ்வுல இன்பங்கள் தடுக்கின்றன. மனிதன் மாறித்தான் போய் விட்டான்.

மாறிய மனிதனால் அறிய இயலாத உண்மைப் பொருளை அறிவது கடினம்தான். ஆனால் இயல்பாகவே தனக்குள் உள்ள நற்குணங்களை அறிவது கூடவா இயலாத காரியம்! அவன் தனக்குள் விளங்கும், தன்னை மனிதன் என இனங்காட்டக்கூடிய நற்குணங்களை ஒழித்து விட்டானா? இல்லை, ஒளித்து விட்டானானோ? இன்றைய மனிதனிடம் தான் மனிதன் என்ற உணர்வே இல்லை. தன்னை மிருகமென இனங்காட்டுகின்றான் இன்றைய மனிதன். அன்றைய மனிதன் தன்னை மனிதன் என்று கூறிக்கொள்வதில் பெருமையடைந்தான். அவ்வாறே வாழ்ந்தான். ஆனால் இன்றைய மானிடன் தான் மனிதன் என்று கூறி பெருமிதமடைகிறான். ஆனால் மிருகமாக வாழ்கிறான். மனிதவாழ்வில், அதாவது அன்றைய காலத்தில் அதிகமாகக் காணப்பட்டது எதுவென நோக்கின் மனித விழுமியங்களைச் சிறப்பாக்கக் கூடியவற்றை ஆக்குவதும், மார்க்கம் சம்பந்தமான விடயங்களை அறியவிழைவதுமே, ஆனால் இன்று இவ்வுலகில் சுமையாக வாழ்ந்து கொண்டிருக்கும் நவீனகால ஆடம்பர மனிதன் மார்க்கம் என்பதை அறியவில்லை. அன்பெனும் அரிய குணத்தைஉணரவில்லை. மானிடவாழ்வு என்று கூறி வாழ்வை அனுபவிப்பதாகக் காட்டினாலும், மறைமுகமாக நரகத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

மனிதன் மனிதனாக இருந்திருப்பின், இன்றைய உலகில் சாந்தமும், அமைதியும் எங்கும் நிறைந்து கிடக்கும். ஆனால் மாற்றம் மனிதகுணத்திலா நடைபெற வேண்டும். ஆண்டவா! மனிதகுல மாற்றம் நிறமாற்ற, மணமற்ற நீரை செந்நிறமாக்கி விட்டது. தோட்டத்தின் சுகந்தத்தை பிணவாடையாக்கி விட்டது. துதிப்பாடல்கள், இசைப்பாடல்கள் கேட்டு சிரித்து மகிழ்ந்த குழந்தையின் காதில் மாறிய மனிதனால் துப்பாக்கி வேட்டுக்கள் விழுந்தன. மனிதகுல மாற்றத்தின் விளைவுகள் கண்ணீரும், பேரிழப்பும்.

மனிதனின் உடல் மாறியிருக்கலாம். அதனால் விளையப்போவது யாதுமில்லை. ஆனால் மாயிய மனித உள்ளங்கள் விதைத்திருப்பது பாவத்தையும் சோகத்தையும் தான்.

ஆதிகால மனிதனிடம் மெய்ஞ்ஞானம் இருந்ததால் அறிவு, எண்ணம் அனைத்தும் அகத்தைப் பற்றியும், பரத்தைப் பற்றியும் அமைந்திருந்தன. ஆனால் இன்றைய மனிதனிடம் விஞ்ஞானம் விந்தை புரிவதால் எண்ணம், கர்மம் அனைத்தும் ஓர் வட்டத்தைச் சுற்றி அமைத்து அன்பு, கனிவு,

கருணை என்பன எங்கோ போய்விட்டன. அவற்றைத் தேடுவதில் ஆர்வமற்ற நவீன மனிதன் ஆக்கத்திறனை அழிவுப் பாதையில் பயன்படுத்துகிறான். அழிவுப் பாதையில் ஆடிப் பாடிச் செல்கிறான்.

மாற்றம் நிகழ்ந்து விட்டது. திருத்த நேரமில்லை. அதற்குள் முற்றும் முடிந்து மனித இனம், மிருக இனமாகி விடும். ஆனால் நிகழ்ந்த மாற்றம் பாரதூரமானது! பல அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. முதலில் மாறிய மனிதன் இன்னுமொரு முறை மிருக வாழ்வை விட்டு மனிதனாக மாறுவான். மாற வேண்டும். உலகம் நிலைக்க வேண்டுமெனில் மனிதன் மாறவேண்டும். மாறிய பின் துதிப் பாடல்களும், இசையுமே குழந்தை காதில் விழும். மனிதன் இப்பொழுது படைப்பவை சாதனையாக மாட்டா. எப்போது நவீனமனிதன் ஒரு தகை சான்ற மனிதனாக மாறுகிறானோ அதுதான் சாதனை. அப்பொழுது தான் மனிதன் வெல்வான். இறைவன் இருக்கிறார். அவர் மாற்றுவார்.

"மாறிய மனிதன் மீண்டும் மாறவேண்டும்,
மனிதனாக வாழ வேண்டும்"


**மத்திய பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை**

**துலக்ஷன்**

9Q

*With Best Compliments From*

Regd. Office:
UG 180/1/123, Peoples Park Complex, Colombo-11
Tel: +94 11 2441944 / 2472171
Fax: +94 11 4715443
Mobile: +94 777 780420
E-mail: sales@gbabamimports.com



# GNANAM IMPORTS (PVT) LTD.

79, 5TH CROSS STREET, COLOMBO-11, SRI LANKA.
Tel: +94 11 2449255 / 2439334
Fax: +94 11 2393339.
E-mail:gipl@panlanka.net.
Website: www.gnanamimports.com

*With Best Compliments From*

# ARUNA ENTERPRISES (PVT) LTD

No. 337, Old Moor Street,
Colombo-12
Tel: 256902, 2440961, 2421950

# தொழல்நுட்ப வளர்ச்சியும் தமிழ்மொழியில் அதன் பாதிப்பும்

நாம் இப்பொழுது 21ம் நூற்றாண்டில் உள்ளோம். தொழில்நுட்பம் தற்போது பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளது. அதன் வளர்ச்சி நாளுக்கு நாள் அல்ல செக்கனிற்கு செக்கன் வளர்ச்சியடைகின்றது.

புதிய கண்டுபிடிப்புக்களும் சாதனைகளும் தொழல் நுட்ப வளர்ச்சிக்கு ஓர் மாபெரும் எடுத்துக்காட்டாகும். மனிதன் பூமியை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த பொழுது ‘அட மனிதா, நமது பூமியை விடவும் பல அரிய பொருட்கள் நம் அண்வெளியில் உள்ளது’ எனக் கூறி அதை நம் கண் முன்னால் கொண்டு வந்ததும் இவ் தொழில்நுட்ப வளர்ச்சியாலே தான் நிகழ்ந்தது. ஆதிகாலத்தல் மனிதன் சூரிய ஒளியைப் பார்த்து நேரம் சொன்னான். ஆனால் தற்போதைய மனிதன் தன் கையை பார்த்தே நேரம் சொல்வான். அது தான் கடிகாரமாகும். ஆதி மனிதன் சூரிய ஒளியுள்ள காலங்களில் மட்டுமே நேரத்தை அறிந்து கொள்வான். மழைகாலத்தில் நேரத்தை அறிவது கடினம். ஆனால் தற்போதைய மனிதனோ வெயிலோ மழையோ எந்நேரத்திலும் நேரம் அறிய வாய்ப்புண்டு.

இவ்வாறே தற்போது மனிதன் இயந்திர மனிதர்களையும் கண்டுபிடித்துள்ளான். அவ்வாறான இயந்திர மனிதர்கள் அனைத்து வேலைகளையும் ஒரு நொடியில் செய்து முடிக்கக்கூடியவர்கள். இவர்கள் வந்துவிட்டால் நம்மை போன்ற மனிதர்களுக்கு வேலையே இல்லாமல் போய்விடும். எல்லா வேலையையும் அவர்களே பார்த்துக் கொள்வார்கள்.

தற்போது சனத்தொகை பெரிதும் வளர்ச்சியடைந்து வருகின்றது. காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றது. வீடுகள் கட்ட இடம் போதாமையாக காணப்படுகின்றது. ஆனால் இன்னும் சில வருடங்களில் எமது பூமிற்கு அண்மையிலுள்ள செவ்வாய் கிரகத்திற்கு மக்களை குடியேற்றப் போகிறார்களாம். தற்போது செவ்வாய் கிரகத்தில் மக்கள் வாழ சாத்தியமுண்டா என்ற சந்தேகத்தை தீர்த்து வைப்பதற்காக விஞ்ஞானிகள் பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இம் முயற்சி மட்டும் வெற்றி பெற்றால் போதும் பூமியில் பாதி சனத்தொகை குறைந்துவிடும். பின் எம் பூமியில் தாராளமாக இட வசதி கிடைக்கும். இன்றைய நிலைமைகளில் இவ்வாறான இரு வெறும் இடம் கிடைத்தால் மக்கள் குடியேறத்தான் மறுப்பார்களா?

இவ்வாறே எமது உலகில் இடம்பெறும் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பற்றி புகழ்ந்து கொண்டே இருக்கலாம். ஆனால் தொழில்நுட்ப வளர்ச்சியினால் பெரும் பாதிப்புகளும் ஏற்படுகின்றது. மக்கள் சோம்பேறிகளாக மாறுகின்றனர். வேலைவாய்பு இன்மை ஏற்படுகிறது. இதிலும் மேலாக எமது கலாச்சாரமும் பண்பாடும் அழிந்த கொண்டே வருகின்றது. உதாரணமாக முன்னைய

காலத்தில் மக்கள் வேஷ்டியையும் சேலைகளையும் உடுத்தினர். தற்போது காற்சட்டைகளும், ஜீன்ஸ், சேர்ட் என்பனவும் வந்து எமது பழைய கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் சீரழிக்கின்றது. முன்னைய காலத்தில் மக்கள் நீண்ட நாட்கள் ஆரோக்கியமாக வாழ்ந்ததன் காரணம் அவர்கள் ஆரோக்கியமான உணவையும் இயற்கையில் கிடைக்கும் பண்டங்களையும் உண்டு வாழ்ந்தமையாலேதான். இன்றோ மக்கள் அவ்வாறான இயற்கையானதும் ஆரோக்கியமானதுமான உணவுப் பொருட்களை விட்டு விட்டு உடனடி உணவுச்சாலைகளிலும் சிற்றுண்டிச்சாலைகளிலும் கிடைக்கும் செயற்கை பொருட்களையே உண்கின்றனர். அதையே அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் இவ் உணவுகளை ஆரம்பித்த ஆங்கிலேயர்களே தற்போது பல புதிய கண்டுபிடிப்புக்களை கண்டு இயற்கையானதும் முன்னோர்கள் உண்ட உணவே ஆரோக்கியமானதும் எனக் கூறுகின்றனர். ஆதலால் வெளிநாட்டவர்கள் இவ் இயற்கை உணவுகளையே உண்ணத் தொடங்கி விட்டனர். ஆனால் நாமோ இன்னும் இச்செயற்கை உணவுப் பண்டங்களையே உண்கின்றோம். இதனால் தான் நாம் நீண்ட காலம் வாழ முடியாதபடி பல புதிய நோய்களுக்கு உள்ளாகி ஆரோக்கியமற்ற வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றோம். இவ்வாறான ஆரோக்கியமற்ற வாழ்க்கைக்கு எது காரணம்? எனச் சிந்தித்தால் அது நிச்சயமாக தொழில்நுட்ப வளர்ச்சியாலேயே தான் இருக்கும்.

இவ்வாறு பல கேடுகளை விளைவித்த இத் தொழில்நுட்ப வளர்ச்சி நம் இனிய தமிழ் மொழியிலும் தன் கைவரிசையை காட்ட மறக்க வில்லை. தமிழ்மொழி இப்போது புதிதாக அறிமுகப்படுத்தப்படம் மொழி அல்ல. தொன்று தொட்டு எம் முன்னோர்களால் அரும்பாடுபட்டு வளர்க்கப்பட்டதே நம் இனிய தமிழ் மொழியாகும்.

எமது தமிழ் மொழியை பற்றி எத்தனை எத்தனையோ கவிஞர்கள் பல இனிய பாடல்களை பாடியுள்ளனர். கவிஞர் கண்ணதாசன் ஒரு தமிழ் திரைப்பட மொன்றில்,

> "தமிழுக்கு அமுதென்று பெயர்
> அத் தமிழ் எங்கள் உயிரினும் மேல்"

என அழகாக தமிழ் மொழியை சிறப்பித்துக் கூறியுள்ளார். மேலும் தமிழ் மொழியில் பல பழைமையான புராணங்களும் இதிகாசங்களும் எழுதப்பட்டுள்ளன. அவற்றினை எல்லாம் வாசிக்கும் பொழுது நம் தமிழின் சிறப்பையும் பெருமையையும் தெரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. என்றென்றும் சிறப்பான மொழி எமது தமிழ் மொழியே. தற்போது அனைத்து பாடசாலைகளிலும் தமிழ்மொழி எனும் பாடம் உள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நம் தமிழ் மொழியை மேலும் வளர்க்க சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.

இன்று தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக தமிழ் மொழியை அழித்துக் கொண்டிருக்கின்றனர். தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக தற்போது பல

நிறுவனங்களில் ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கே வேலையுண்டு என்று அறிவித்துள்ளனர். அறிவித்துக் கொண்டும் இருக்கின்றனர். ஆகவே இதற்காக அனைவரும் ஆங்கிலத்தை கற்கவே முயல்கின்றனரே தவிர நமது தமிழ் மொழியை கற்க விருப்பப்படுவதில்லை. சிறுவயதிலேயே தனியார் பாடசாலைகள் அதாவது இன்டர்நெஷனல் பாடசாலைகளில் சிறுவர்களை சேர்த்துவிடுகின்றனர் இப்பெற்றோர்.

தொழில் நுட்ப வளர்ச்சியில் தற்போது இலத்திரனியல் வலை மின் அஞ்சல் என்பனவும் பெருகிக்கொண்டு வருகிறது. 'கணனி' என்பது தொழில்நுட்ப வளர்ச்சியின் முக்கிய காரணமாக அமைவதுடன் அத் தொழில்நுட்பத்தை வளர்ப்பதும் இக் கணனி எனும் சிறிய பொருளினால் தான். மற்றும் ஆங்கிலத்தை கற்றுக் கொள்வது பெரும் பெருமையாகவும் கெட்டித்தனமாகவும் நினைக்கின்றனர். மடையர்கள் அவ் ஆங்கில மொழியிலும் சிறப்பானதும் நீண்ட கால வரலாற்றையும் கொண்டது தமிழ்மொழி என்பதை அறியவில்லை. தமிழ்மொழி தெரியாததும் பெருமையென்று நினைக்கிறார்கள் சிலர். ஆனால் உண்மை என்னவென்றால் தமிழ் தெரியாமலிருப்பது ஒரு பெரும் அவமானமே தான் தவிர பெருமை இல்லை.

இலத்திரனியல் வலை மற்றும் மின் அஞ்சல் போன்றவற்றினாலேயே சிலர் கடிதங்களை பரிமாறிக் கொள்கின்றனர். இதற்கு காரணம் அவர்கள் தமிழ் மொழயை வெறுப்பதனாலேயும் இலகுவாக வேலையை புரியவுமேயே ஆகும். இக் குற்றத்திற்கு தொழில்நுட்ப வளர்ச்சி தான் உடந்தையாக உள்ளது.

மக்கள் ஆங்கிலக்கல்வியை விரும்புவதும் தமிழ்மொழியை மறப்பதும் பெற்றோர்கள் சிறுவயதிலேயே தம் பிள்ளைகளை ஆங்கிலக் கல்வியை புகுத்த நினைப்பதற்கும் ஒரு காரணம் இருக்கத்தான் செய்யும். அதாவது அவர்களது பிள்ளைகள் வாழ்க்கையில் முன்னேற வேண்டியேதான் ஆகும். இவற்றிற் கெல்லாம் காரணமாக அமைவது இத்தொழில்நுட்ப வளர்ச்சியே தான் ஆகும். தொழில்நுட்ப வளர்ச்சி நமக்கு இன்றயமையாததுதான்.

ஆனால் இத் தொழில்நுட்பத்திற்காக நம் பண்பாட்டையே கலாச்சாரத்தையே எம் தாய் மொழியையோ மறத்தல் மன்னிக்க முடியாத குற்றமாகும். ஆதலால் தொழில்நுட்ப வளர்ச்சியினோடு செல்வதுடன் நம் தமிழ் மொழிக்கும் முக்கியத்துவம் அளித்து வளர்ப்போம் நம் தாய்மொழியாகி தமிழ்மொழயை.

வாழ்க தமிழ்மொழி

**மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை**

**எஸ். வசந்தன்**
**கணிதப்பிரிவு 2007**

*With Best Compliments From*

# ARKAM PHARMACEUTICALS

IMPORTERS, DISTRIBUTOR




12-1/1,
PRINCE OF WALES AVENUE,
COLOMBO-14.
SRI LANKA.

TEL: 2470290, 5344436, 5377746
FAX: 2394540
E-mail: arkem@slrnet.lk.

*With Best Compliments From*

# MATCO ENTERPRISE

GENERAL HARDWARE MERCHANTS & IMPORTERS

No. 195,
MESSENGER STREET,
COLOMBO-12.

Tel: 2448584, 2423292
5377583, 5377584
Mobile: 0714805428-9

E-mail: tbernard@sltnet.lk
matcoeps@sltnet.lk
Fax: 0094-11-2423292

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்



# After A/L Pending Results OR G.C.E(O/L) 3C, 3S தகமையுடன்

## London, Canada, Malasia, Singapur, Australia, New Zealand, Cyprus.

## போன்ற நாடுகளில் உயர்கல்வி

**Courses Available**

- Computing
- Business Management
- Art
- Law
- Urban Planning
- Education & Training
- Business Accounting
- Art & design
- Pharmacy Technician
- Travel & Tourism
- E-Business
- MSc Information Technology
- MSc Business Information system
- MSc (Business Information Technology)
- MSc (Bio Science)
- MSc (Business Administration)
- MSc (Computer Science)
- MSc (Accounting)
- MSc (Engineering)
- MSc (Management)
- MBA
- BA
- Engineering Design - Aerospace, Automotive, Mechanical
- Mechanical Engineering
- Foundation Degree in Aircraft Engineering
- Biological, Chemical & Pharmaceutical Science
- Information Systems, Electronic Commerce.
- Software Engineering

Free Consulting

◉ மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் 9 மாத கால பாடநெறியின் பின் லண்டனில் 3 வருட கால பாடநெறி.

◉ அதுமட்டுமல்லாது Rusian University களில் நீங்கள் M.B.B.S முடிப்பதற்கான முழுவருட அனுமதிக்கட்டணம் 2500$ (1 year)

**எமது நிறுவனத்தில் பதிவு செய்யும் மாணவர்களுக்கு பிரித்தானிய உச்சரிப்பு மூலம் இலவச ஆங்கில வகுப்புகள் நடாத்தப்படும்.**

◉ August, September, January 2006 மாதங்களுக்கான பதிவுகள் இப்போது நடைபெறுகின்றன.

- ✓ Maximum Gurantee for the Visa.
- ✓ Student Loan Facility.
- ✓ Part time job.
- ✓ 1/2 payment Accomadation System.
- ✓ Free English Class.
- ✓ IELTS. Tofel Classes

# SKY LINE TRAVELS & SERVICES

PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS

No. 253- 1/2, Galle Road, Wellawatte, Sri Lanka. Tel: 0115512484, 0115522342

Mobile: 0773175767, Web: galetolanka.com/skyline

*With*
*Best Compliments*
*From*

# SUTHAKAR PRASHANTH

## 4H

# கண் கெட்ட பின்னே

வீசுகின்ற தென்றலிலே வீறாப்பாக விரைந்து நடந்து கொண்டு இருந்தான் அவன். வெள்ளைநிஜ கோட்டும் கழுத்தில் ஸ்டெதஸ் கோப்பும் கையில் அழகான ஒரு கறுப்புப் பெட்டியும் அவன் ஒரு டாக்டர் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டின. ஒரு வித மருந்து வாசனையும் பெற்றோர்களள் அழுகையும் அது ஒரு வைத்தியசாலை என்பதை சொல்லாமல் சொல்லின. வைத்திய சாலைக்கு மேலே "சந்தான பாரதி மெடிகல்ஸ்' என்ற பெயர்ப்பலகை நீண்ட காலம் துடைக்கப்படாமல் அது தொங்குகிறது என்பதை கூறின.

வேக நடையுடன் சென்ற அவனை 'டொக்டர் சந்தான பாரதி' என்ற குரல் நிலத்துடன் உராய்வை ஏற்படுத்தி நிறுத்தி விட்டன. அத்துடன் அது அவனின் வைத்தியசாலைதான் என்பதை எங்களிடமும் அக்குரல் கூறிவிட்டது. சரி நாம் கதைக்குள் வருவோம். அந்தக் குரலுக்குரியவரான ஒரு நர்ஸ் டாக்டர் சந்தான பாதியிடம் தொடர்ந்து இவ்வாறு கூறினார். டாக்டர் அந்த வயதான அம்மா தனது மகனின் ஆபரேஷனுக்கு காசு அடுத்த வாரம்தான் கிடைக்குமாம்' தயவு செய்து ஆபரேஷனை செய்து தரும்படி கெஞ்சுகிறார். தான் உங்களைக் கேட்டுத்தான் சொல்ல முடியும் என்று சொல்லிட்டன் நான் அவருக்கு என்ன சொல்ல?' பதிலுக்கு சந்தான பாரதி "என்ன கேள்வி இது. இது டாக்டர் தொழில் இங்க கரிசனை எல்லாம் பார்க்க முடியாது. காசு வந்தா ஆபரேஷன் இல்லாட்டி இல்லை" என்று கடுமையான குரலில் கூற அந்த நர்ஸ்க்கு ஏன் கேட்டோம் என்ற மாதிரி ஆகிவிட்டது.

மாலைநேரம், சரியாக 6.30 மணி சந்தான பாரதி வீட்டில் வந்து சேர்ந்திருந்தான். அவரின் ஒரு கொடுமை முகத்தை வைத்தியசாலையில் நாம் கண்டது போல இன்னொரு முகமுண்டு. அந்த முகம், முன்னையதை விட கொடியது. ஆம் பெற்றோரை எவ்வாறு மதிக்க வேண்டும் என்பதற்கு இராமனை உதாரணமாக கொள்வது போல பெற்றோரை எவ்வாறு மதிக்க கூடாது என்பதற்கு இவனே உதாரணம். அந்த நேரத்தில் "சந்தானம் அப்பு சந்தானம்' என்று கூப்பிடும் குரல் கேட்டது. சந்தான பாரதியின் தாய் ஒருகையில் தடியுடனும் மற்றக் கையில் ஒரு டீ கப்புடனும் வந்து கொண்டிருந்தார். சந்தானத்துக்கு தந்தை சிறுவயதிலேயே இறந்து விட்டார். தாய் அதிக செல்லம் கொடுத்து வளர்த்ததால் அவன் இருபத்தைந்து வயதிலேயே மதுபானம் போன்ற கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகி விட்டான். அதை மாற்ற அவனின் தாய் கையில் வைத்திருக்கும் ஒரே துருப்புச் சீட்டு. அந்த வீட்டுச் சொத்து, அதை வைத்து அவனை மிரட்ட அவனிடம் வந்த வெளிப்பாடோ கிணறு வெட்ட பூதம் வந்ததற்கு சமன். அன்றிலிருந்து தாயிடம் இருந்த கொஞ்ச நஞ்ச மரியாதையும் இல்லாமல் போய்விட்டது.

'அப்பு ராசா! களைச்சு வந்திருக்க இந்த இஞ்சி பிளேன்டியை குடி. உடம்புக்கு நல்லா இருக்கும்' - தாய் அவன் 'எனக்கு இதெல்லாம் விருப்பமில்லை. எனக்கு கோப்பிதான் விருப்பம். அதவிடு நீ எனக்கு சொத்தை

தருவியா மாட்டியா?' 'அப்பு அதெல்லாம் என்ட கட்டிலுக்கடியில் பததிரமா இருக்குது. நீ உந்த தண்ணி, பண்ணியெல்லாம் விடு நான் சாகிறதுக்குள்ள உனக்கு மாத்திறேன்' 'நீ இப்படியே சொல்லிகிட்டிரு. இதுக்கு நீ செத்தே போயிருக்கலாமே' அப்படி ஒரு கொடூரமான சொல்லை அவனின் தாய் எதிர் பார்க்கவில்லை. ஏற்கனவே மனநோயாளியான அவளுக்கு எதுவோ செய்தது. 'நீ எக்கேடாவது கெட்டுப் போ எனக்கு நெஞ்சு வலிக்கிறது நான் போய்ப் படுக்கப்போறேன்' என்று கூறிவிட்டு உள்ளே சென்றான். 'ஒருத்தருக்கும் இல்லாத நெஞ்சு வலி' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

அவனுக்கு இவ்வளவு நாளும் தெரியாத இரகசியம் தெரிந்துவிட்டது. அது அந்த உயிலிருக்கும் இடம். உடனே பூனை போலச் சென்று தாய் உறங்கிக் கொண்டிருந்த கட்டிலுக்கு அருகே சென்றான். தாய் அப்படி ஒரு நல்ல நித்திரை, குறட்டை கூட விடவில்லை. அவனுக்கு சாதகமாக போய்விட்டது. உடனே மெதுவாக கட்டிலுக்கு அடியில் கையை வைக்க ஒரு கோவை ஒன்று தட்டுப்பட்டது. உடனே அதை எடுத்து வெளியில் வரவேற்பறையில் வைத்து பிரித்தான். பலநாள் துடைக்காத தூசியுடன் அது தட்டுப்படவே அவன் அதை துடைக்க துணி ஒன்று கொண்டு வந்து துடைத்து விட்டு பிளக்க உள்ளே ஒரு கடிதம் இல்லை உயில்.

அதை அவன் பிரித்தான். அவன் அதை, வாசித்தான் திக் என்றது. அதிலிருந்தவை இதோ.

"ராஜ மோகனின் மனைவியான சுப்புலட்சுமி எழுதிக்கொள்வது எனது மகன் சந்தான பாரதியே எனக்குப் பிறகு இந்த சொத்தின் உரிமையாளன். நான் அவன் திருந்தி நல்லவான வேண்டுமென சொத்து அவனுக்கு கிடைக்காது என்பது போல கூறியுள்ளேன். ஆனால் எனது ஒரே அன்பு மகன் சந்தான பாரதிக்கே எனது சொத்து"

இப்படிக்கு
ரா. சுப்புலட்சுமி

அவனுக்குள் அனுகுண்டு போட்டது போல இருந்தது. உடனே சென்று அம்மாவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென விரைந்தான். கட்டிலில் அவர் இன்னமும் நல்ல உறக்கம். கூப்பிட்டான். தட்டிப் பார்த்தான். கடைசியில் நாடி பிடித்து பார்த்தான். அப்போது தான் தெரிந்தது அவனின் தாய் இறைந்து விட்டாள் என்று...

முற்றும்

மத்திய பிரிவில் முதலாமிடம்பெற்ற சிறுகதை

**வி. விபுஜதன்**

# புயலாக மாறிய தென்றல்

காலைக் கதிரவன் கண்விழித்ததும் பத்திரிகையில் 'க்ரைம்' பக்கத்தை பரப்பரப்பாகப் புரட்டுகிறாள். கமலி, அங்கு அந்தச் செய்தியை கண்டவுடன் தனக்குள் சிரித்துக் கொள்கிறான். சாதாரண சிரிப்பு அல்ல அது. ஒரு விபரீதச் சிரிப்பு, ஆம் அவன் பத்திரிகையில் படித்தது ஒரு கொலைச்செய்தி. பெரிதாகச் 'சக்தி' கம்பனி மனேஜர் ஆனந்த் இனந்தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டுள்ளார் என போடப்பட்டிருந்தது.

கமலி, உயர்தர வணிகம் முடித்துவிட்டு குடும்பக் கஷ்டத்தைப் போக்கு வதற்காக வேலை தேடி நகரத்துக்கு வந்த 22 பெண் பார்ப்போரைக் கவரும் அற்புத அழகி என்று கூடச் சொல்லலாம். படிப்பிலும் கெட்டிக்காரி ஆனால் அவளது துரதிஷ்டம் மேலும் கற்க முடியாது வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை

“இது தான் இடம் அடுத்த ஸ்டொப்பால் இறங்குங்கோ” என்ற கன் சக பிரயாணியின் சொல் கேட்டு அவருக்கு நன்றி கூறிவிட்டு இறங்கிக் கொண்டாள் கமலி. “சக்தி” கம்பனி என்ற போர்ட்டினைப் பார்த்து விட்டு உள்ளே நுழைந்தாள். இன்று அவளுக்கு நேர்முகப் பரீட்சை 'சக்தி கம்பனி மெனேஜருக்கு உதவியாளராகவும், சிறு கணக்குகள் பார்ப்பதுமே அவளது வேலை. நேர்முகப் பரீட்சையில் எந்தச் சந்தேகமும் இன்றி அவளே தெரிவாகினாள். 'நாளை முதல் வேலைக்கு வாங்கோ' என்று சொல்லியது நிருவாகம்.

'சக்தி' கம்பனி நகரத்தில் அனைவரும் அறிந்த ஒரு பிரபலமான நிருவனம். எட்டாயிரம் ரூபா சம்பளத்துக்கு கமலி அங்கே வேலைக்குச் சேர்ந்தாள். கமலி மிக மென்மையானவள். மிக அழகாக அனைவருடனும் பழகுவாள். பழகுவதற்கு இனிமையானவளும் கூட அத்துடன் கம்பனி வேலைகளையும் சோம்பளின்றி விரைவாகவும், திருத்தமாகவும் செய்துமுடிப்பாள். அவள் வேலை முடித்தாள் அடுத்தவருக்கும் உதவுவாள். எனவே அவளுடன் அனைவரும் அன்பாகப் பழகினார்கள். ஆனந்தன் அந்தக் கம்பனியின் மெனேஜர். அழகானவன் தான் ஆனால் சபலபுத்தியுடையவன். எனவே இவள் பழகுவதையும், இவளது அழகையும் அவன் வேறு விதமாகவே சிந்தித்தான். நாளுக்கு நாள் அவனது எண்ணங்கள் கெட்டனவாகவே வளரத் தொடங்கின. ஒரு நாள் அவன் கமலியிடம் தவறாகப் பேச நினைக்க அவனை அவள் ஏசி விட்டாள். இதனால் அவள் மேல் அவன் வெறிகொண்டான். அவளை நாசமாக்கும் வழிகளை அவன் கையாளத் தொடங்கினான். கம்பனி உரிமையாளரிடம் அவளைப் பற்றித் தப்பாகச்சொல்லி வெறுப்பேற்றப் பார்ப்பான். என்றாலும் கமலியின் நற்குணம் அவளைக் காத்தது.

'கமலிக்கு போன்' என்ற குரலைக்கேட்டு பக்கத்து வீட்டுக்கு ஓடிச்சென்று போனை எடுத்தாள். ஆனந்தன்தான் கதைத்தான். கம்பனி வேலை ஒன்று இருக்கிறது என்றும் அவசரமாக வருமாறும் கூறிவிட்டு உடனே போனை வைத்துவிட்டான். வெறுப்பாய் இருப்பினும் அவள் வேலை அது என்பதால் அவள் கம்பனிக்குச் சென்றாள்.

அன்று விடுமுறை நாள் என்பதால் யாருமே இருக்கவில்லை. பயத்துடனே உள்ளே நுழைந்தாள் கமலி. அங்கே ஆனந்தன் காத்துக் கொண்டிருந்தான். அடுக்கடுக்காகப் பைல்களை எடுத்துவைத்துக்கொண்டு அவற்றில் ஏதோ கணக்குகளைத் தீர்க்குமாறு கூறினான். கமலி வேலையைத் தொடங்கிய சற்று நேரத்தில் அங்கே இன்னும்இரண்டு பேர் வருகிறார்கள். இருவரும் ஆனந்தனின் நண்பர்கள். ஆனந்தன் தன் எண்ணத்தை நிறைவேற்றத் தொடங்கினான். மூவரும் இணைந்து கமலியையும் அவளது வாழ்வையும் நாசமாக்கினார்கள். கதறுகிறாள் கமலி. பயனில்லை. எண்ணம் நிறைவேறி முடிந்தவுடன் மூவரும் மறைந்து விடுகிறார்கள்.

கமலி இன்று பார்த்தது ஆனந்தனுடைய கொலைச் செய்தியையேதான். கொன்றது வேறு யாருமல்ல அவளேதான். ஏற்கனவே மற்ற இருவரையும் கொன்று பலி தீர்த்துக் கொண்டாள்.

இவ்வாறு கிராமத்திலிருந்து தன் குடும்பக் கஷ்டம்போக்கவந்த மென்மையான அந்தப் பெண்மை இன்று கொடூரமான கொலைகாரியாய் மாற்றப்பட்டாள். தென்றலாய் இருந்த அவள் இன்று ஒரு புயலாய்....

**மேற்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை**

**ர.மு.ரிப்தி**
**உயிரியல் பிரிவு 2007**

*With Best Compliments*

*From*



# FUWARD GEMS & JEWELLERS (PVT) LTD

*22 kt gold jewellers*

**NO. 296/B2, GALLE ROAD, WELLAWATTA, COLOMBO 06, SRI LANKA.**

**TEL: 011 2362124 FAX: 011 2362125 E-mail: fuwardgems@sknet.lk**

*With Best Compliments From*




# RAADO
## Jewellers

(Jewellery & Gold Smith tools)

No.137/13, Sea Street,
Colombo-11.
Tel: 2458153

*With Best Compliments From*



# COLONIAL MOTORS LTD

297, UNION PLACE,
COLOMBO-02, SRI LANKA
TEL: 2323342-4 Fax: 2438424
E-mail: col@eureka.lk

# தமிழர் என்றோர் இனமுண்டு

செந்தமிழின் கோர்வையிலே கோர்த்த மலர்கள்
வெளிநாட்டவர் பார்வையிலே செல்வத் தமிழர்கள்
செண்பக வானிலே சுதந்தரமாய் சிறகடித்தோம்
சிந்திய மழையிலே சிந்தை மகிழக் குளித்தோம்

இத்தனை இன்பத்தை இம்மையுறப் பெற்றோம்
அத்தனை நாளும் அகிலம் போன்று வாழ்ந்தால்
எத்தனை நாழிகை இப்படி வாழ்வீர்கள்? என்று
இடியாய் உரைத்தனர் போர்க் களத்தின் வாயிலிலே

கங்குலின் நடுவினிலே நாற்றிசையும் முழங்க
கணைக் குண்டுகள் பொழிந்தன நெஞ்சினிலே
இரை கண்ட கழுகு போல் பின் வாங்கவில்லை
பிடித்த இரையின் தலையோ தொங்கும் வரை

சத்தத்தின் இடையிலே சரசரக்கும் ஒலிவாங்கி - அதை
யுத்தத்தின்ட மத்தியில் கரகரக்க வைத்தார்கள்
சுத்தத்தின் எல்லையில் முகாம்களையும் அமைத்தனர்
மொத்தத்தில் புட்களை கூட்டினுள் அடக்கவே

சிரமறுத்த பனையாய் சீரழிந்த மனையாய்
சீவனிருக்கும் தமிழனின் செல்வச் செழிப்போ
சீற்றத்தில் சீறிய சுனாமி அலையாய்
சீர் கெட்டுப் போயின போர் வரைக்களத்திலே

தமிழர் என்றோர் இனம் உண்டு - இதை
வேறோர் உணர்ந்திட வழியோ பல உண்டு
கூட்டினுள் வாழும் மனிரெல்லாம்
மகிழ்வாய் கழிக்க வழியும் கண் கொண்டு

**பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் திறன்கள் போட்டியில்**
**கீழ்ப்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை**

With Best Compliments From

YASEEN'S
COMPUTERIZED
GRAPHICS

Tel: 0112345925, 2343279
Fax: 0112422791
E-mail: yaseenscg@sltne.lk

17/4, HULFTSDORF STREET,
COLOMBO-12, SRI LANKA.

SPECIALIST IN BAR CODE HANG TAGS, PRINTED LABLES STICKERS COLOR SEPARATIONS

With Best Compliments From

New
Saravanas
JEWELLERS (PVT) LTD

නිව්
සරවනාස් ජුවලර්ස්

நியு
சரவணாஸ் ஜுவலர்ஸ்

46, SEA STREET, COLOMBO-11
Tel: 2434546

# உலக மெல்லாம் பசுமை வேண்டும்!

உலகமெல்லாம் பசுமை வேண்டும்
உயிர்கள் எல்லாம் வாழவேண்டும்
மரங்கள் எல்லாம் நட வேண்டும்
மலர்கள் எல்லாம் மலர வேண்டும்

மனதுக்கினிய உலகம் வேண்டும்
மனிதர் எல்லாம் வியக்க வேண்டும்
பழைய தெல்லாம் புதிதாக வேண்டும்
பட்டுப்போல் மின்ன வேண்டும்

மேகங்கள் கருக்க வேண்டும்
இடிமின்னல் பாய வேண்டும்
முத்துப்போல் மழைத்துளிகள்
முற்றத்தில் பெய்ய வேண்டும்

மற்றைக்குள் ஒளிந்திருக்கும்
உயிரினங்கள் வெளியில் வர
படபடவென்று சிறகடிக்கும்
பறவைகள் எல்லாம் பறந்துச்செல்ல

படர்ந்து செல்லும் கொடிகலெல்லாம்
சட்டென்று மரத்திலேர
சறுகளில் செய்த கூடு
மீண்டும் உயிர் பெற

பச்சை கிளிகலெல்லாம்
பறந்து வெளியில் வர
சில்லென்று பனிக்காற்றில்
சிட்டுக்குருவிகள் சிறகடிக்க

சிரித்து திரியும் குழந்தை
சிந்தித்து மணம் தளர
சிப்பியிலிருந்து முத்து வர
மீன்கள் எல்லாம் துள்ளிக்குதிக்க

வாகனத்தில் வரும் புகை
குறைவாக வெளியில் வர
அசுத்தமான காற்று எல்லாம்
தூய்மையாக மாறிவிட

துள்ளி எழும்பும் தூசி எல்லாம்
மாயமாய் மறைந்துவிட
மதுபோதை ஒளந்துவிட
மனிதன் மகிழ்ச்சியாய் வாழ்ந்திட

மலர்கள் மலரும் பொழுது
பனித்துளிகள் படர்ந்திட
தென்றல் காற்று வீசிட
பனித்துளிகள் ஓடிட

உலகமெல்லாம் பசுமைபெற
உயிர்கள் எல்லாம் வாழ்ந்திட
செடி கொடிகள் சிரித்திட
ஒளி தரும் சூரியன் வந்தான்

இரவில் பால் போல் சந்திரன்வர
பட்டுப்போல் விண் மீன் குதிக்க
கருவானம் வெளிச்சம்பெற
உலகெங்கும் பசுமை பசுமை பசுமை!

**முதலாமிடம் பெற்ற கவிதை**

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்காண்போட்டிகளில்
கீழ்ப்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை

*With*

*Best Compliments*

*From*

# S.ARUNOTHAYAN

# 7R

*With Best Compliments From*

# Air & Marine Travels & Tours (Pvt) Ltd.

- ✈. Airline Tickets
- ✈. Airports Transfers
- ✈. Special Interest Tours
- ✈. Hotel Reservations
- ✈. Travel Insurance

Nos. 37/3,37/4 & 37/5,
Sir Chittampalam A.Gardiner Mw, Colombo-2
Tel: 2394527/28, 2394641. Fax: 2394527
Hot line: 0777 702066
E-mail: airnmarine@yahoo.com

# தாயகத் தாகம்

தவமிருந்துத் தலைவணங்கி
நாம் வாழ்ந்த நாம் மனந்த
எம்மினத்தின் உதயபூமி!

இது வெறும் கனவு அல்ல
கற்பனை அல்ல - மறத்தமிழர் எமது
காலங்களின் வெறிச் சரித்திரம்!

உடமை கேட்கவில்லை!
சொத்து கேட்கவில்லை!
உயிரைக் கேட்கவில்லை!
கேட்டதெல்லாம் நாம்
தவழ்ந்து வளர்த்த தாயகமே!

எம்மைக் கட்டிக் காத்து ஊட்டி வளர்த்த
எம் தாயகமே! உயிரின் துடிப்பு
நின்றபோதும் அடங்காது எங்கள்
தாயகத் தாகம்!

காலை இளம் வெய்யிலும்
மாலை இளந் தென்றலும்
வசந்த பூக்களின் வாசமும்
முல்லைப் பூக்களின் முறுவலும்
மூடிக் கிடக்கும் எம் பூமி!

வசந்த சோலையில் பனிமுத்துக்களைத்
தேடினோம் - ஆனால் வறண்ட
பாலையில் மணத்தீக்களே
காலில் சுட்டன!

அன்பு உறவுகளும்
ஆசை நினைவுகளும்
புதைக்கப்பட்டு உரமான
காயத்தின் கனவுகளின் எமக்கென்ற
தனித் தாயகத்தில் கனவுகளில்

தனித் தாயகத்தின் கனவுகளில்
கோட்டைக் கட்டிவாழும் உள்ளங்களின்
உரத்த கோஷமிது!

துயரங்களில் ஊற்றெடுத்து
உதிரத்தில் மையெடுத்து -
இதயத்தின் சுவர் எடுத்து
பேரினவாத்தைப் பலிகொடுத்து
நம்மவர் எழுதும் தலையெழுத்து!!!
தாயகத் தாகம் என்ற அழியா இன்னெழுத்து!

உதடுகளின் உச்சரிப்பிலும்
உறவுகளின் நச்சரிப்பிலும்
அழிச்சாட்டியமாய் உருவானதல்ல
எம் தாகம்!

உயிர்களை விலைகொடுத்து
இதய வீணைகளில் சுதிமீட்டி
நரம்புகளில் உரமேற்றி
உதிரத்தில் உதிர்த்துவிட்டு
வெறிகொண்டு மறத்தமிழர் நாம்
செதுக்கியெடுத்த தாகமிது!

உயிர் கொன்று போனாலும்
உலகம் நின்று போனாலும்
உடைந்து போன கிழிஞ்சல்களாய்
எம் உதிரத்தில் ஒட்டி வாழும் தாகம்
மறத்தமிழர் எம் தியாகத்தாகம்

எம் இனத்திற்கு மட்டும்
ஒப்பாரிச் சத்தமாய்க் கேட்கும்
ஒற்றைக் குயிலின் சத்தங்களிலும்
சாபங்களாய் நீண்டு செல்லும்
இரக்கமற்ற இராத்திரிகளிலும்
ஊட்டி வளர்த்த எம் தாகம்
தாயகத் தாகம்

தட்டிப் பறிக்கும் வெட்டிக்
கூட்டம் அல்ல எம்மினம்
தட்டிக் கொடுக்கும் வெற்றிக்
கூட்டம்!

மறத்தமிழர் நாம் என்று
மார்தட்டிக் கொள்கிறோம்!
தனியா எம் தயாகத் தாகத்தோடு

இரவின் இவைகளின் எழுதிய
கவிதைகள் அல்ல இது
காற்றோடு போக!
காற்றிலே வரைந்த காவியம் இது
சிறகு முளைத்துப் பறக்க.
இறந்தபின்னும் இதயம் சிறிதுநேரம்
துடிக்குமாமே! அந்தத் துடிப்பில் கூட
மறத்தமிழர் எம் தாயகத் தாகம்
தறிகெட்டு வாழும்!

மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை

**சு. விசாகன்**
11R

*With Best Compliments From*

# Heramba Travels & Tours (Pvt) Ltd.

Orchard Shopping Complex (Ground Floor)
No. 7-14, Galle Road, Colombo-06.

Tel: 2552066, 2552057
Fax: 2552057
Mobile: 0777348388

*With Best Compliments From*

# JASIJANANTH Travels & Tours

**Travel & Tour World wide**
**Power of the Tour World**

K.Ravi
Branch Office:
No. 107-1/2, Galle Road,
Wellawathe, Colombo-06
Sri Lanka.

Tel: +94 11 250 7205
Fax: +94 11 250 7206
Mobile: +94 77 331 7732
+94 78 521 3337

weltweit spezialangebot / www.jasijananthtravels.com

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

Montereo
ENTERPRISES

# MONTEREO ENTERPRISES

*Dealers in Household Items and Textiles*

*102A. Keyzer Street,*
*Colombo-11*
*E-mail: hazeemhasan@yahoo.com*

*Res : 2674131*
*Office: 2399459*
*Tel/Fax: 2447350*
*Mobile: 0777 276116*

---

# ATHEESWARA

Wholesale Dealers in Textiles & Readymade Garment


112/16, Keyzer Street,
Velona Market,
Colombo-11
Sri Lanka.

Tel: 2345269
HP.: 077310253

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்



*With Best Compliments From*





# JETWAY STATIONERY

* Sole Agent for flamingo
* Importers of office & School Stationery



61, Maliban Street,
Colombo-11

Tel/Fax: 011 2332709
Mobile:0777 745577
E-mail:jetwayst@yahoo.com

*With Best Compliments From*



# Ambiga JEWELLERS

**(COLLECTION OF FINE 22KT JEWELLERY)**
**JEWELLERS & PAWN BROKERS**

No.39/4, Averiwatta, Kattunayake.
Tel: 2255383

# வேண்டியவை (அல்ல)

பாராட்டுகள் பெருமிதப்பட வேண்டிவை அல்ல
பெருமைப் பட வேண்டியவை!
பகிடிகள் நோகடிக்கப்பட வேண்டியவை அல்ல
நகைச்சுவையாக வேண்டியவை!
செய்த உதவிகள் சுட்டிக்காட்டப்பட வேண்டியவை அல்ல
உடன் மறக்கப்பட வேண்டிவை!
செய்நன்றிகள் மறக்கப்பட வேண்டியவை அல்ல
நமது cell களில் ஊற வேண்டியவை!

கிடங்குகள் தோண்டப்படவேண்டியவை அல்ல
மூடப்பட வேண்டியவை!
கலைகள் கலைக்கப்பட வேண்டியவை அல்ல
என்றும் காக்கப்பட வேண்டியவை!
பிழைகள் நியாயப்படுத்தப்பட வேண்டியவை அல்ல
நன்மை பயக்கப் பயன்படுத்தப்பட வேண்டியவை!

நிஜங்கள் நிழல்களாக்கப்பட வேண்டியவை அல்ல
நிலைக்க வேண்டியவை!
உணர்வுகள் மதிக்கப்பட வேண்டியவை அல்ல
தவிர்க்கப்பட வேண்டியவை!
துரோகங்கள் என்றும் மன்னிக்கப்பட வேண்டியவை அல்ல
என்றாவது பழிவாங்கப்பட வேண்டியவை!

வெற்றிகள் பொறாமைப்பட வேண்டியவை அல்ல
பாராட்டப்பட வேண்டியவை
தோல்விகள் கவலைப்படவேண்டியவை அல்ல
கற்றுக்கொள்ளப்பட வேண்டியவை!
உண்மைகள் என்றும் உறங்க வேண்டியவை அல்ல
என்றாவது விழித்தெழ வேண்டியவை!
காதல்கள் மறைக்கப்பட வேண்டியவை அல்ல
வெளிக்காட்டப்படவேண்டியவை!

**எஸ். வீஸ்மன்**
**உயிரியல் பிரிவு 2007**

*With Best Compliments From*

# HASNA

Imports & wholesale dealers in
all kinds of Bags, Belts,
Brief cases, wallets,
Fancy Goods &
Melamine etc.



No. 139,
Prince Street,
Colombo-11
Tel: 2391821, 2325963
Fax: 2391821



*With*
*Best Compliments*
*From*

## Z.K.M. ZEESHAN KHAN
5J

*With Best Compliments From*

## HIWAY INFORMATICS (PVT) LTD

Global Education -India
It Education for
Career Development

No.23,
Wasala, Road,
Katahena,
Colombo-13
(Opp.
Good Shepard
Coment)


*With Best Compliments From*

## Youth Shoe Mart



No. 109,
Diagna Rajawarde,
Kandy.
Tel: 4717597

# S.L.TRAVELS




NO.118,
DEANSE ROAD,
MARADANA,
COLOMBO-10
TEL: 0112698018
MOBILE: 0776264577

*With*
*Best Compliments*
*From*



**M.A.M. IMRAN SHANFARI**
**(12COM T) &**
**M.A.M. INSAAF SHANFARI**
**(4H)**

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்


# Recognized Diplomas in Computer Education

100% ප්‍රායෝගික පුහුණුව සහ පරිගණක අධ්‍යාපනය සඳහා ජාත්‍යන්තරව පිලිගන්නා සහතිකයක් ලබා ගැනීමට සහ ඔබගේ රැකියා අවස්ථාවන් වැඩිදියුණු කර ගැනීමට හෝ ස්වයං රැකියාවක් ඇරඹීමට....

## DIPLOMA IN HARDWARE ENGINEERING

How computers work, Computer Assembling , Computer Maintanance, Repairs, Trouble-Shooting, Networking and many more.......

පරිගණක එකලස් කිරීම, පරිගණක නඩත්තු කිරීම දෝෂ හඳුනාගැනීම සහ පිළියම් යෙදීම, පරිගණක ජාලකරණය ඇතුළු විෂයයන් රැසක්....

(Course Fee Rs. 3,500/=)

## DIPLOMA IN NETWORK ADMINISTRATION

Windows 2000/XP/NT 4.0 Server and workstations.
This practical oriented course will guide you in Installations, Caballing, LAN/WAN TCP/IP, Backup network with unattended installation, Disk management, Internet information web server (DNS), DHCP, Proxy server, Setting up Active Directory services, E-mail server & Remote access server

(Course Fee Rs. 5000/=)

## DIPLOMA IN GRAPHIC DESIGNING

ග්‍රැෆික් නිර්මාණ ක්ෂේත්‍රයට නොබියව පියනගන්නට දැවැන්ත අත්වැලක්.....
Adobe Photoshop 7.0, Adobe IIlustrator 10, Adobe PageMaker 7.0, Adobe Indesign 2.0, Scanning, Colour Seperation & Type setting (English & Sinhala), Printing Methods & Photo Designing.

(Course Fee Rs. 6,000/=)

## ALSO AVAILABLE

**Diploma in Digital Animation • Diploma in Auto CAD**
**Diploma in Information Technology • Diploma in JAVA Programming**
**Diploma in Visual Basic • Diploma in Web Designing**
**Diploma in Red Hat Linux • Diploma in Macromedia Flash MX**
**Microsoft Certified Proffessianal (MCP)**

- සෑම සිසුවෙකු කෙරෙහිම පුද්ගලික අවධානය යොමුකරන අතර ජාත්‍යන්තර මට්ටමේ ඉහළ වැටුප් ලැබිය හැකි දේශීය/විදේශීය සහ ස්වයං රැකියා අවස්ථා
- සතියේ දින 07 පුරාම පංති පැවැත්වෙන අතර ඔබගේ අවශ්‍යතාවය පරිදි රාත්‍රී පංති ද පැවැත්වේ.
- පාඨමාලා අවසානයේ ජාත්‍යන්තරව පිළිගන්නා ඩිප්ලෝමා සහතිකය.

**City & Guilds (U.K)**
අනුමත පුහුණු ආයතනය

# RAYTRONICS COMPUTERS (PVT) LTD.

144/01 S.De.S Jayasinghe Mawatha, Nugegoda
Tel: 2815287, 2853445, 0777-727527 E-mail: raytronics@stmail.lk
**HOTLINE 0777-378956**

ශාඛා:

| | | | |
|---|---|---|---|
| 250, ගාලු පාර, මිලාගිරිය, කොළඹ 04. | Tel: 011-5515725 | 71/1, සිරිදේවමිත්ත මාවත, ගාල්ල. | Tel: 091-4380433 |
| 314, කොළඹ පාර, ගම්පහ. | Tel: 033-4673150 | 106, කොළඹ පාර, කුරුණෑගල. | Tel: 037-4691991 |
| 245, පේරාදෙණිය පාර, මහනුවර. | Tel: 081-4476220 | 5, සාලිදාස මාවත, මාතර. | Tel: 041-4390061 |

තෘතීයික හා වෘත්තීය අධ්‍යාපන සේවා කොමිසමේ පරිගණක පුහුණු ආයතනයක් ලෙස ලියාපදිංචි වී ඇත

# மனிதனாக வாழ்ந்திடவேண்டும்

கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் ஒழுக்கம். நல்லொழுக்கத்தைக் கடைப் பிடிப்பதன் மூலமே நல்ல மனிர்தர்களாகலாம். எதிர்வரும க.பொ.த (உயர்தரம்) பரீட்சை எழுதக் காத்திருக்கும் என்போன்ற மாணவர்களின் எதிர்காலம் பற்றிய எண்ணம் என்ன? மூன்று பாடங்களிலும் 'ஏ' மட்டத்தில் சித்திபெற்று பல்கலைக்கழகம் சென்று படித்துப்பாடம் பெறவேண்டும் என்பதாகும். இவ்வெண்ணத்தில் தவறில்லை. ஆனால் இன்று படித்துப் பாடம் பெற்ற எல்லோரும் அன்போடும், மனிதப் பண்போடும் மனிதனாக வாழ்க்கின்றார்களா? என்பதை வாசகர்களாகிய உங்களோடு சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பிரபல கிரேக்க சிந்தனையாளரும், தத்துவ ஞானியுமான சோக்கிரட்டீஸ் தனது சிஷ்யர்கள் எதிர்காலத்தில் எவ்வாறு வர விரும்புகிறார்கள் என்பதை அறிய முற்பட்டார். ஒரு சிஷ்யன் தான் ஒரு சட்டத்தரணியாக வரவரும்புவதாகக் கூறினான். அடுத்தவன் தான் ஒரு அரசியல்வாதியாக வரவிரும்புவதாகக் கூறினான். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கூறினார்கள். ஒரே ஒருவன் மட்டும்தான் மனிதனாக வரவிரும்புவதாகக் கூறினான். உண்மையில் மனிதன் மனிதனாக வாழ்வதே மிகவும் முக்கியமானதாகும்.

இன்றைய கல்விமுறை, கல்வி நிலை பற்றி பத்திரிகைகளில் பக்கம் பக்கமாகப் படித்த மேதைகளால் எழுதியவற்றை வாசித்தும், நேரில் பார்த்தும் அனுபவித்த உங்களுக்கு அதுபற்றி எழுதுவேண்டிய அவசியமில்லை. வாழ்க்கையைக் கட்டியெழுப்பக்கூடிய, மனிதனை உருவாக்கக்கூடிய, நற்பண்புகள் உருவாக் கக்கூடிய கல்விமுறைபற்றியே சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டிருந்தார்.

இன்று மக்களின் கல்வித்தரம் உயர்ந்துள்ளது என்பது உண்மை. ஆங்கிலத்தில் கதைப்புத்தகம் எழுதி வெளியிடக்கூடிய அளவிற்கு ஆண்டு மூன்று படிக்கும் மாணவனிடம் அறிவு, ஆற்றல் இருக்கிறதென்றால் கல்வியறிவு வளர்ச்சி பற்றி இதற்கு மேலும் எழுதுவதற்கு வார்த்தையேதுமில்லை.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்று திமூலர் பாடியுள்ளார். இங்கு தமிழ் என்ற சொல்லின் பொருள் அன்பென்பதாகும். தமிழ் என்பதற்கு இனிமை, நேர்மை என்ற பொருட்களு முண்டு. அன்புபற்றி ஏராளமாகப் படித்திருக்கிறோம். மேடைகளில் அறிஞர் பெரியோர்கள் பேசக் கேட்டிருக்கிறோம். ஆனால் அன்பு வழியில் நடந்து காட்டியவர்கள், காட்டிக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்?அன்பு வழியில் நடந்துகாட்டுவதே மிகவும் மேலானதாகும். இன்று வீட்டில், நாட்டில், உலகில் அதையில்லாத நிலையே காணப்படுகின்றது. குடும்பங்களுக்குள் கருத்து வேற்றுமைகள், சச்சரவுகள், நாட்டில் மதச்சண்டை, இனச்சண்டை, உலகில்

நாடுகளுக்கிடையே போர். இப்படியே வீடுமுதல் உலகம் வரை அன்பில்லாத, ஒருவரை ஒருவர் புரிந்துணராத நிலையே காணப்படுகிறது. மனித உணர்வுகளை நேர்உணர்வுகள், எதிர் உணர்வுகள் என இரு வகையாகப் பரிக்கலாம். அன்பு பாசம், கருணை, இரக்கம், பரிவு போன்றவை நேர் உணர்வுகள் என்றும்: கோபம், பொறாமை, ஆசை, பேரவா போன்றவை எதிருணர்வுகள் என்றும் கூறலாம். நேர் உணர்வுகள் மனிதனை மனிதனாக்கும். எதிர் உணர்வுகள் மனிதனோடு கூடியிருந்து மனிதனை குழியில் வீழ்த்தும்.

அன்றாட வாழ்க்கையில் நாம் எத்தனையோ படித்தவர்களுடன் பழகுகின்றோம். பணத்துக்கும் புகழுக்கும் அடிமையாகி மனிதப் பண்புகளற்ற சுயநலத்துடன் வாழ்பவர்களை நாம் அறிகின்றோம். இவர்கள் தங்களுக்காகவே வாழ்பவர்கள் என்று சொன்னால் தவறில்லை. படிப்பறிவில் அதியுயர் நிலை எப்படியும் மனிதப் பண்புகளற்று நிற்பவர்கள் பற்றி வள்ளுவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"அரம்போலும் கூர்மை ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லாதவர்"

வள்ளுவப் பெருந்தகை இவர்களை மரத்திற்கு ஒப்பானவர்களாக குறிப்பிடுகின்றார். மேலும் பட்டத்தைப் பதவியை உபயோகித்து பணத்தைக் குவித்துவைத்து இரந்து வருபவர்க்கு இரக்கம் காட்டாத ஒருவரையும், போதுமென்ற மனதோடு தேடிவரும் வறியவர்களின் பசிப்பிணியைப் போக்கும் மனப்பக்குவமுடைய ஒருவரையும் நோக்குங்கால் பின்கூறப்பட்டவரே மக்களால் விரும்பப்படுகிறார். பெரிய கடல் நீரையும், சிறிய கிணற்று நீரையும் ஒப்பிட்டுக் காட்டி எது சிறந்த தென்பதை ஔவைப்பாட்டி மிகவும் நுட்பமாகக் கூறியுள்ளார். அப்பாடல் இதுவாகும்.

"மடல் பெரிது தாழை மகிழ் இனிது கந்தம்
உடல் சிறியர் என்று இருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகிவிடும்"

கருத்துப் பொதிந்த இப்பாடல் இங்கு நோக்கற்பாலது. ஒருவர் தன் பெயருக்காகவும், புகழுக்காகவும் இலட்சக் கணக்கில் பணத்தைச் செவழிப்பதைக் காணலாம். பணம் படைத்த சிலரை ஏமாற்றும் நோக்கில் புகழ்ந்துரைத்து வேறு சிலர் பயன்பெறுவதை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. வில்லியம் ஷேக்ஸ்பியரின் 'கிங்லியர்' என்னும் கதையைப் படித்தவர்கள் இவ்வுண்மையை அறிவர். லியர் மன்னர் வயது முதிர்ச்சியடைந்த காலத்தில் தனது இராட்சியத்தைத் தனது மகள் மூவருக்கும் கொடுத்துவிட முடிவுசெய்தான். முதலாவதாக தனது மூத்த மகளை அழைத்து அவளின் பங்கைக் கெடுப்பதுற்கு முன், "மகளே, உன் தந்தை மீது நீ வைத்திருக்கும் கருத்தைக் கூறு" என்றான். "தந்தையே, நீங்கள் என் உயிர், உங்கள் மீது

நான் வைத்திருக்கும் அன்பு என்றும் மாறாது, உங்களுக்கு மேலாக நான் எதையும் கருதவில்லை" என்று கூறித் தந்தையைப் புகழின் உச்சியில் ஏற்றித் தனது பங்கைப் பெற்றுக்கொண்டாள். இதேபோல் இரண்டாவது மகளும் செய்தாள். மூத்த இரு புத்திரிகளின் பொய்மாலைகளால் மகிழ்ச்சிக் கடலில் நீந்திய லியர், மூன்றாவது மகளான கொடீலியாவை அழைத்தான். அதே கேள்வியை இவளிடமும் கேட்டான். கொடீலியா தனது மூத்த இரு சகோதரிகளும் கூறிய புழுகையும் ஏமாற்று வித்தையையும் நன்கு அறிந்திருந்ததால் அவள் அவ்வாற ஏமாற்ற விரும்பவில்லை. மாறாக உண்மையைக் கூறினாள். "தந்தையே நீங்கள் என்னை நன்கு கவனித்து வளர்த்தீர்கள், அதற்கு நான் என்றும் நன்றியுடையவளாவேன். அதற்காக நான் உங்கள் மகள் என்ற நிலையில் அன்பு காட்டுகின்றேன். மதிப்பளிக்கின்றேன். ஆனால் நான் எனது சகோதரிகள் கூறியதுபோல உங்கள் மீது எங்கிருக்கும் அன்பு ஒருபோதும் மாறாதென்று கூறுவில்லை. நான் திருமணமானதும் கணவனிடம் அன்பாக இருப்பேன். ஆகவே என்றும் நான் எனது முழு அன்பையும் உங்களுக்கே செலுத்துவேன் என்றில்லை என்றாள். இதைக் கேட்ட லியர் மன்னன் கொடீலியா மீது கடுங்கோபம் கொண்டான். உடனடியாக இராட்சியத்தைத் தனது மூத்த புதல்விகளுக்கே பகிர்ந்தளித்தான். பின்னர் அதே இரு புதல்விகளாலும் வெறுத்தொதுக்கப்பட்டார். இறுதியில் லியரைக் காப்பாற்ற கொடீலியாவே வந்தாள் என்று இக்கதை கூறுகிறது. போலிகள் நிறைந்த இவ்வுலகில் லியரின் கதை சிந்திக்கத்தக்கது. உண்மையாக அன்பு செலுத்துபவர்கள் யார்? பாசாங்கு பண்ணி ஏமாற்றபவர்கள் யார்? என்பதைக் கண்டறிதல் வேண்டும்.

நாம் எப்போதும் நல்லதையே சிந்திக்க வேண்டும். சிந்திப்பவற்றிற்கு செயல்வடிவம் கொடுக்கவேண்டும். இதிலேயே ஒருவரது திறமை வெளிக் கொரணப்படுகிறது. இதை மகாகவி பாரதியார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சல் வேண்டும்
தெளித்த நல்லறிவு வேண்டும்"

இலங்கையில் போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியை அடுத்து ஆங்கிலேயர் ஆட்சியிலே சைவமும் தமிழும் மாளும் நிலையை அடைந்தது. இவ்வாறு மாளும் நிலையிலிருந்த சைவத்தையும் தமிழையும் காப்பாற்றி வாழவைத்த பெரும ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலரையே சாரும். இப்பெரியார் சைவத் தமிழ்ப்பாடசலைகளை இலங்கையில் மாத்திரமல்லாது தென்னிந்தியாவிலும் நிறுவினார். ஏராளமான சைவத்தமிழ் நூல்களை எழுதி வெளியிட்டார். சமயப் பிரசங்கங்கள் செய்தார். இவையாவற்றையும் இலவசமாகவே செய்தார். இவரிடம் ஆழ்ந்த ஆங்கில அறிவும் இருந்தது. பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தார். கிறிஸ்தவ சமயத்திற்கு இவர் ஆற்றிய சேவையாக இதைக் கொள்ளலாம்.

ஆங்கிலேயர் ஆட்சியிலே அடிமைப்பட்டிருந்த பாரத தேசத்தை ஆயுதமேந்தாது அகிம்சை வழிநின்று விடுதலை பெற்றுக் கொடுத்தவர் அண்ணல் காந்தி அவர்கள். இவ்வரிசையிலே அன்னை திரேசாவையும் நாம் காண்கின்றோம். அன்பு வழியில் மக்கள் சேவையாற்றி இந்தியாவில் மட்டுமல்லாது உலகெங்கும் பிரபல்யமடைந்தார். இதன் மூலம் நோபல்பரிசையும் பெற்றக்கொண்டார். மக்கள் மீது அன்பு வைப்பதும், நாட்டின் நலனுக்காக உழைப்பதும், சுயநலமற்ற அன்பின் வெளிப்பாடாகும்.

இன்று விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பன வளர்ந்ததுபோல் மனிதநேயம் வளரவில்லை என்றே கூறும்நிலை காணப்படுகிறது. மனிதநேயம் சமயம், சமுதாயம், மொழி, இனம், நிறம் போன்ற வேறுபாடுகளைக் கடந்து நிற்பதாகும்.

இறைநம்பிக்கை, திரும்தியுள்ள மனம், மாசற்ற மனச்சாற்று, தன்னலமற்ற மனப்பண்பு, எதையும் தாங்கும் இதயம், மன்னிக்கும் மனப்பன்மை, நல்லொழுக்கம் என்பன மனிதனை மனிதனாக்கி உயர்வடையவைக்கும் காரணிகளாகும்.

நிறைவாக வள்ளுவப் பெருந்தகையின் பண்பு உடைமை பற்றி குறள் ஒன்றைப் பார்ப்போம்.

"பண்பு உடையார்ப் பட்டு உண்டு உலகம் இது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

இவ் வுலகு அன்புடைய, பண்புடையவர்களாலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. என்ற உட்கருத்தை அறிவோம். மனிதனாக மனிதப்பண்புகளோடு மக்கள் மனங்களில் என்றும் நிலைத்து நிற்கக்கூடிய முறையில் எமது வாழ்வை அமைத்துக்கொள்வோம். அதுவே அன்புவாழ்வு, பண்புவாழ்வு, மனிதவாழ்வு.

முற்றும்

**அருமைநாயகம் விசாகன்**
**கணிதப்பிரிவு - 2006**

# கல்லூரி மகுட வாசகம்

கொழும்பு றோயல் கல்லூரி 1835ம் ஆண்டு 'கொழும்பு அகடெமி (Colombo Academy) எனும் பெயரில் இலங்கை ஆளுனர் சேர். ரொபட் வில்மட் ஹோர்டன் (Sir Robert Wilmot Horton) (1831-1837) அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இதுவே பின்னர் றோயல் கல்லூரி என பெயர் மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் கல்லூரியின் மகுட வாசகம்

இலத்தினில்
"QUOD VULT VALDE VULT"

ஆங்கிலத்தில்
What is done do bravely, strongly and with all your mighty

தமிழில்
எதைச் செய்தாலும் அதனை துணிவுடனும் உறுதியுடனும் எம்மால் முடிந்தவரை செய்ய வேண்டும்.

பின்னர் 1893 இலிருந்து எமது மகுடவாசகம் பின்வருமாறு மாற்றப்பட்டது.

பிரேஞ்சில்
"DIEU ET MON DROIT"

ஆங்கிலத்தில்
GOD AND MY RIGHT

தமிழில்
கடவுளும் எனது உரிமையும்

தற்போது காணப்படும் எமது மகுட வாசகம்
1910 இல் மாற்றப்பட்டது

இலத்தீனில்
"DISCE AUT DISCEDE"

ஆங்கிலத்தில்
"LEARN OR DEPART"

தமிழில்
படி அல்லது வெளியேறு

மேற்குறித்த வாசகத்துக்கு இருபக்கமும் மேலும் இரு வாசகங்கள் உண்டு. அவை

இடப்பக்கம்

இலத்தீனில்
"LABOR OMNIA VINCIT"

ஆங்கிலத்தில்
"Work conquers all"

உழைப்பே அனைத்து வெற்றிகளையும் தரும்

வலப்பக்கம்
இலத்தீனில்
"PALMAM QUI MERUIT FERAT"

ஆங்கிலத்தில்
"Let him who deserve it, win prize"

தமிழில்
தகுதியுடையோர் பரிசுகளை வெல்ல இடமளியுங்கள்

இவ்வாசகங்களின் நோக்கம் றோயல் கல்லூரி மாணவர்கள் மட்டுமன்றி அனைவரும் வாசித்து விளங்கி செயல்பட வேண்டும் என்பதே ஆகும்.

நா. ஹிஸாம் முஹம்மத்
கணிதப் பிரிவு,
உயர்தரம் 2007

# அடிப்படைத் தேவையில் அவசர மாற்றம்

இலாபம் முதலாளிகளுக்கு...
நஷ்டம் அறிவாளிக்கு...!
கல்வி வணிகமானதால்!!

பிள்ளைகள் நாம் ஐந்திலேயே வளைகிறோம்!
புத்தக மூட்டை சுமப்பதால்,
ஆனால் ஐம்பதிலும் ஏனோ நிமிர முடியவில்லை!!

ஏழை மாணவர்களுக்கு
கல்வி வரம் கிடைக்காத அவலம்!
வரம் பெற்ற வர்த்தகத்தினரோ
அதை சாபமாக்கிடும் துயரம்!

வேலையில்லாத் திண்டாட்டம்
பட்டதாரிகள் பறக்கிறார்கள்!
நம்பிக்கை நூலறுந்து!!

கண்ணாடியாய் இருக்க வேண்டிய கல்வி!
கண் கட்டாய் ஆகிவிட்ட அகோரம்!!

சமிக்ஞை விளக்குகள் சரியில்லாததால்
கல்விச் சாலையில் ஏராளமான விபத்துக்கள்!

இப்போதெல்லாம் கல்விப் படகில் இடம்பிடிக்க - கடும் போட்டி!
போட்டியிட்டு இடம் பிடித்தவர்கள்
உடனே மறக்கின்றனர் - படகு செலுத்தும் பணியை!!

பயன்பாடு புரியாமல் பயில்கின்ற கல்வியால்
படித்தவர்களின் எண்ணிக்கை கூடியது!
அறிஞர்களின் எண்ணிக்கையோ குறைந்தது!

கல்வி
வேலை வாய்ப்பிற்கான கருவி
எனும் ஓரப் பார்வையில் தேவை அவசர மாற்றம்

உணவு, உடை, உறையுள், கல்வி என
அடிப்படைத் தேவைகளின் எண்ணிக்கை
நான்காக மாறட்டும்

படிப்பைப் பெறத் துடிக்கும் இளமையே!
இன்றைய சமூகம் ஒரு போர்க்களம்
அதில் அறிவுதான் நமது ஆயுதம்

பொறுப்பை உணர்ந்து போராடுவோம்!
உணராத தலைமுறைக்கு
பொழுதுகள் விடிய மாட்டாது!

எல்.ஏ.எம். றிஸ்வான்
12 வர்த்தப் பிரிவு

*With Best Compliments From*

**PROVISIX**

**PROVISIX INTERNATIONAL (PVT) LTD.**
(A BOI APPROVED COMPANY)
No. 6,1,B,C, Road,
Colombo-06
Mobile: +94 71 4528485
Fax : +94 11 2360039
E-mail: m.spmasundaram@provisix.com

**PROVISIX City**
LUXURY APARTMENTS

**WWW.PROVISIX.COM**



*With*
*Best Compliments*
*From*

# V.THUWARAGESH

# 4J

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With Best Compliments From*

# T.M. NAVEETH

9R

*With Best Compliments From*

- ஸ்சேட இந்திய சமையல் வல்லுனர்களால் சமைக்கப்படும் உணவுகள்
- சாட் வகைகள், பானிபூரி, பாவ்பஜ், சமோசா, தைபூரி
- இனிப்பு வகைகள், ஜாங்கிரி, மஸ்கட், கஜீரோல், பர்பி, பெங்காளி இனிப்பு வகைகள், மிக்சர், ஓம்பொடி.
- பு.:.வ்பே பகல், இரவு உணவு (வெள்ளி மற்றும் போயா தினங்களில்)
- வீட்டு விநியோக சேவை (கொழும்பு நகர எல்லைக்குள்)

வானக
தரிப்பிட
வசதியுண்டு

# Shanti Vihar

*Vegetarian Restaurant-indian Cuisine*

No.03,Havelock Colombo-05. Tel: 25800224, 5331515. Mob.: 0773038060

தமிழ் நயம்-2005
ரோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With Best Compliments From*

**New Terminus Hotel & Bakers**

149, Deans Road, Maradana,
Colombo-10



**New Terminus Bakers**

118, Piyadasa Sirisena Mawatha,
Maradana, Colombo-10
Tel: 0777 571207

*With Best Compliments From*

**6**

M.DUWARAGAN

8R

# தற்கால தமிழ் இலக்கியத்துறையில் புலம்பெயர் தமிழர்களினதும், ஈழத்தமிழர்களதும் நிலைப்பாடு

கடந்த இரு தசாப்தங்களாக எம் ஈழத்தாயின் அழகிய பூங்காவிலே கொடிய சுனாமி போல் தாண்டவமாடிய யுத்த அரக்கன் எம்மின மக்களிற்கு மீள முடியாத பல அழிவுகளையும் இழப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளான். சொந்த மண்ணில் உயிர் வாழ்வதற்கு அஞ்சி தம் உடமைகளை விட்டு உறவுகளை மறந்து உரிமைகளை இழந்து அவை மறுக்கப்பட்ட நிலையிலே பல ஐரோப்பிய, மற்றும் அமெரிக்க நாடுகளில் தஞ்சமடைந்து அங்கும் எமது கலாச்சார விழுமியங்களை பாதுகாத்து அவற்றைக் காத்து புது மெருகேற்றி அழகுப் பொலிவூட்டி பேணிப் பாதுகாத்து வருகின்றனர். இன்றைய காலத்தில் எம் ஈழத்திரு நாட்டிலேயே கலை கலாச்சாரங்கள் அழிவடைந்து வரும் நிலையில் புலம்பெயர் தமிழர்கள் புனையும் இலக்கியங்கள் தமிழ் இலக்கியத் துறையில் குறிப்பிடத்தக்களவு பங்கு வருகின்றன.

தவிர்க்கமுடியாத பல காரணங்களால் தம் சொந்தமண்ணை பிரிந்து சென்ற இவர்கள் சங்ககாலத்தில் தமிழ் வளர்த்த மன்னர்களிற்கு ஒப்பான அரும் பெரும் தமிழ்ப் பனிளையே செய்து வருகின்றனர். இன்று எம் நாட்டிலே குறிப்பிடத் தக்களவு தமிழ்ப்பகுதிகளை செய்வதில் கொழும்பு தமிழ்ச்சங்கம், கம்பன் கழகம் போன்றனவும் சமயம் சார் கலாசாரங்களை இளம் சிறார்கள் மத்தியில் புகட்டுவதற்கு கொழும்பு இராம கிருஷ்ணமிஷன் மற்றும் விவேகாநன்தர் சபை போன்றனவும் வடபகுதியில் ஆறுமுகநாவலர் தொண்டர்சபை போன்றனவும் கிழக்கிழங்கையிலும் மற்றும் தமிழ் செறிந்துவாழும் இப்பகுதிகளில் இந்து இளைஞர் பேரவையும் மற்றும் நாடுபூராவும் பரவலாக இலக்கியப் பணிகள் செய்வதில் திருமறைக் கலாமன்றமும் தம்மாலான பல பணிகளை செய்த வருகின்றன.

இவ்வளவு காலமும் ஏட்டிலும் புத்தகங்களிலும் மறைந்திருந்த எம் தமிழை இணையத்தில் ஏற்றி அதனை உலகறியச் செய்தோர் இந்தப் புலம்பெயர் தமிழர்களே என்று சொன்னர் அது மிகையாகாது. இன்றைய இலங்கைவாழ் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் தமிழ் பேசுவதை அவமானமாகக் கருதுகிறார்கள். தம் பிள்ளைகள் பலருடன் தமிழில் உரையாடுவதை சமூகத்தில் நமது அந்தஸ்துக்கு ஏற்பட்ட ஓர் பாரிய பின்னடைவாகக் கருதுகின்றனர். இந் நிலையானது ஈழத்தமிழ் வளர்ச்சிக்கு ஓர் பாரிய முட்டுக்கட்டையாக காண்படுகின்றது.

அதே நேரத்தில் புலம் பெயர் தமிழர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் தம் வருங்கால சந்ததியினர் தம் தாய்மொழியை மறக்கக்கூடாது என்பதற்காக அங்கேயே பல சங்கங்கள் அமைத்து வார விடுமுறை நாட்களிலே தமிழ் வகுப்புக்களை நடாத்தி ஓர் ஆரோக்கியமான தமிழ்ப்பனி செய்து வருகின்றனர். இவற்றை விட பல ஆய்வுகளை மேற்கொண்டு புதுமைகளையும் புனைந்து எம் இனிய மொழிக்கு புதுப் பொழிவூட்டி வருகின்றனர். இன்றைய ஈழத் தமிழரின் நிலையை கண்டு வருந்திய ஓர் ஈழத்தமிழர் தன் வரிகளிலே

"தமிழன் தாய்பெயரை மம்மி (Mammy)
அவன் தாய் பெயரே ஜிம்மி

இவன் நிலையை எண்ணி அழுகிறேன்
விம்மி விம்மி!" என குறிப்பிட்டுள்ளார்.

கல்தோன்றி மண்தோன்றா காலத்திற்கு முன்தோன்றிய எம் மூத்தமொழி இக் கம்பியூட்டர் காலத்திலே அழிவடையும் ஓர் ஆபத்தான நிலையை எதிர்நோக்கியுள்ளது என பல ஆயவாளர்க் கூறியுள்ளனர். என்றும் அத்தகைய கூற்றுக்களை உடைத்தெரியும் வண்ணம் இன்று பல நூல்கள் புலம்பெயர் தமிழர்களால் புனையப்பட்டுள்ளன. "தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்று பழந்தமிழன் கூறினான். என்றும் இன்று வெள்ளவத்தைப் பகுதியில் பல தமிழ் இளைஞர்கள் ஒழுங்கான தமிழ் கூடப் பேசத்தெரியாது ஏதோ தெரியாத பல வார்த்தைகளை சேர்த்து ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் சில சொற்களை அள்ளிவிட்டு அது நவீன தமிழ் என்றும் இதுதான் கொழும்புப் பாளி என்றும் அர்த்தமற்ற விதத்திலே பலவற்றை பிதற்றுகிறார்கள். இவ் இருசாராரையும் எடுத்து நோக்குகையில் சொந்தநாட்டில் வாழ்ந்து தம் தாய் மொழியை வளர்க்காவிடினும் அதனை ஒழுங்காக உச்சரிக்கத் தெரியாதவர்களுடன் ஒப்பிடுகையில் சொல்லிலடங்கா இன்னல்களை தாங்கி அகதிகளாக்கப்பட்டு தாம் பிறந்த மண்ணிலே உயிர்வாழ்வதற்கு உத்தரவாமற்று பிற நாடுகளில் தஞ்சமடைந்திருக்கும் எமது புலம் பெயர் தமிழ்மக்கள் தேனிலும் இனிய எம் மொழிக்கு ஆற்றும் சேவை நிச்சமயாக வரவேற்கத்தக்க விடயமாகும்.

இலங்கைவாழ் தமிழ்க்கலைஞர்களை எடுத்துக்கொண்டார் அவர்கள் பொருளாதார ரீதியிலே மிகவும் பின்தள்ளப்பட்டுக் காணப்படுகின்றனர். இந்நிலை ஏன் ஏற்பட்டது என நோக்கினால் அவர்களது இலக்கியப்பணி பிறரால் கண்டு கொள்ளப்படாத நிலையில் தாமே தமமாலியன்ற பொருளாதார வளங்களை செலவழித்து பத்தகங்களை வெளிவிடுகின்றனர். என்றும் அவர்களது இம் முயற்சியும் போதிய விளம்பரங்கள் இன்மையாலும் தகுந்த ஊக்குவிப்பாளர்கள் இல்லாவிடத்தும் தோல்வியிலேயே முடிகின்றது. இதனால் அவர்களிற்கு எஞ்சப்போவது "தேவையில்லா வேலை செய்பவன்" என்ற பெயரும் வறுமையும் மட்டுமேயாகும். பல களியாட்ட நிகழ்வுகளிலும் பொழுது போக்கு அம்சங்களிலும் முதலீடு செய்யும் முதலீட்டாளர்கள். அவர்கள் முதலீடு செய்யும் தொகையில் ஒரு சொற்ப அளவையேனும் இத் தமிழ் இலக்கியத் துறையே வழங்கியிருந்தால் ஈழத்தமிழ் இலக்கியம் தற்போது குறிப்பிடத் தக்களவு வளர்ச்சி கண்டிருக்கும் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

எமது இலக்கிய வளர்ச்சிக்கு ஓர் பாரிய பாதிப்பை ஏற்படுத்துவது திரைப்படங்கள் ஆகும். இன்று ஓரிடத்திலே இலக்கிய நாடகமும், இன்னோரிடத்தில் "அந்நியன்" திரைப்படமும் அரங்கேற்றப்பட்டால் இலக்கிய நாடகத்திற்கு வரும் பார்வையாளர்களின் அளவு மிகக் குறைவாகவே இருக்கும். இந்நிலை எம் இலக்கிய வளர்ச்சியை கேள்விக்குறியாக்கிவிட்டது.

எனவே இலங்கை மண்ணில் வாழும் தமிழ் பேசும் மக்களாகிய நாம் எம் தாய் மொழியை மதித்து இலக்கியத்துறையிலே புதுமை புனைந்து புலம்பெயர் தமிழ் இலக்கியங்களை வாழத்தி எம் தமிழ்க் கலைஞர்களை போற்றி எம் மொழிக்கு பெருமை சேர்ப்போம். நன்றி.

**இரா.மால்மருகன் 12 - உயிரியல்**

கலைவிழா 2005 ல் மேடையேறும்

நாடகம்

# எரிந்து போன கனவுகள்

(ஒரு மாணவனின் கதை)

**மேடையேற்றம்: மாணவர்கள் உயர்தரம் 2007**

- மு.இ.மு. இன்பாஸ்
- மு.சி.அ.மு. சினாஸ் அலீம்
- மு. மபாஸ்
- மு.அ.மு. இம்ரான் சன்பாரி
- அ.க.யா. அரபாத்
- மு.றா.மு. றயீஸ்
- மோதீஸ்
- சு. நந்தகோபன்
- கோபிசங்கர்
- மு. றிஸ்வான்
- ரஜீவன்
- தேசிகன்
- அ.ந.மு. ரஸா
- சபேஷன்
- பிரமேஷ்

**இவர்களுடன்: ஜே. நிரோஜன்**

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With Best Compliments From*

# LOTEX

Wholesale & Retail Dealers in Lace,
Zippers, Buttons, Thread, Labels, Hangers Etc.

38/1, Pamunuwa Road,
Maharagama,
Tel: 4301024

223/8, 2nd Cross Street,
Colombo-11,
2391989

*With Best Compliments From*

# MAINLAND

7 1/8, Orchard Complex,
Galle Road,
Colombo-06

Phone: +94 11 2597097
Mobile: +94 777 760247
Fax : +94 11 2597098

E-mail : info@mainland.com
webside: www.mainlandpd.com

# அதிரஷ்டத்தை அள்ளித் தந்த லொத்தர் சீட்டிழுப்பு

தந்தையை சிறு வயதிலேயே இழைந்த குமாரும் மூன்று பெண் சகோதரிகளும் தனது தாயின் சிறு உழைப்பிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வறுமை காரணமாக குமாருக்கோ, சகோதரிகளுக்கோ உயர் கல்வியைத் தொடர வாய்ப்பு கிடைக்கவில்லை. குமார் ஒரு நாள் தனது கையில் இருந்த பத்து ரூபா பணத்திற்கு தேசிய லொத்தர் சீட்டொன்றை வாங்கினான்.

ஆனால் அவனோ அதைப் பெரிதுபடுத்தவில்லை. அவன் அதை தன் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான். தன் வறுமை காரணமாக வேலை தேடி ஒவ்வொரு கடையிலும் ஏறி இறங்கினான். ஆனால் அவனுக்கு இன்னமும் யாரும் வேலை கொடுக்கவில்லை. அவன் தன் சகோதரிகளின் எதிர்காலத்தைப் பற்றியே யோசித்துக் கொண்டு இருந்தான்.

குமாரின் கடைசித் தங்கையான ப்ரியா இப்போது O/L எடுத்து A/L க்குச் சித்தியடைந்துள்ளான். ஆனால் அவனுக்கோ உயர் கல்வியைத் தொடர வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ப்ரியா தன் அண்ணனின் உடைகளை கழுவுவதற்கு ஆயத்தமானாள். அப்போது அவள் சட்டைப் பைக்குள் இருந்த லொத்தர் சீட்டுத் துண்டை கண்டாள். அதை நகத்தால் சுரண்டிப் பார்த்தால். அதில் 53 20 14 72 என் எண்கள் காணப்பட்டன.

அதைக் கொண்டு போய் அலுமாரியில் வைத்துவிட்டு, தன் வேலையில் ஈடுபட்டாள். குமாரின் மற்றொரு சகோதரியான சாந்தி ஏதோ ஒரு தேவைக்காக தன் தாயை விட்டு பத்திரிகை ஒன்றை வாங்கி வரச் சொன்னாள். பத்திரிகையை அரையும் குறையுமாக பார்த்த சாந்தி, அதை மேசையின் மீது வைத்து விட்டு வேறு வேலையில் ஈடுபட்டாள். அப்பதிரிகையை வாசிக்க ஆயத்தமான ப்ரியா, அவளுடைய கண்கள் தன்னை அறியாமலேயே அதைக் கண்டு விட்டன. “நான் இந்த நம்பரை எங்கோயோ பார்த்த மாதிரி இருக்கிறது” என்று முனுமுனுத்தவாறு யோசித்தான். அப்போதுதான் அவளுக்கு அது சட்டென ஞாபகத்துக்கு வந்தது. ஓடிப்போய் அலுமாரியைத் திறந்து லொத்தர் சீட்டுத் துண்டை எடுத்துப் பார்த்தான். அவளர் அதை நம்ப முடியவில்லை. இது கனவா? நனவா? என அவளுக்கே சந்தேகமாய் இருந்தது.

உடனே அவள் இறைவனுக்கு நன்றி செலுத்திவிட்டு தன் தாயிடமும், சகோதரிகளிடமும் அதைக் கூறினாள். அவர்களாலும் அதை நம்பமுடிய வில்லை. இப்போது வீட்டிலோ ஒரு நாளும இல்லாத சந்தோஷம்.

குமார் அப்போதுதான் வீட்டுக்கு வந்தான். சந்தோஷமான விஷயத்தை அனுக்குச் சொல்ல அதை அவன் நம்ப மறுத்தான். பத்திரிகை மூலம் மேலதிக விபரங்களைப் பெற்ற குமார், தாங்கள் போக வேண்டிய நாளையும் அறிந்து கொண்டான். அந்நாளும் வந்தது. அவர்கள் எல்லோரும் மிகவும் மகிழ்ச்சியுடன் அவ்விடத்தை அடைந்தனர். அவர்கள் தங்களுக்குரிய முதலாவது பரிசுத் தொகையாக 4,000,000 ரூபாவுடன் மேலதிக பரிசுகளும் வழங்கப்பட்டன. ஆனால் இவர்களை இடைமறிக்க ஒரு கூட்டம் பாதையில் காத்திருந்ததை இவர்கள் யாவரும் அறியவில்லை.

அவர்கள் வாடகைக்கு ஓட்டிச் சென்ற வேன் சனநடமாட்டம் குறைந்த அவ்வீதியில் சீரான வேகத்துடன் வந்து கொண்டிருந்த போதுதான்.

அந்தக் கொள்ளைக் கூட்டம் வேனை வழி மறைத்து குமாருடைய கையில் இருந்த பணப்பையை எடுக்க சண்டையிட்ட போது, ப்ரியா தன் கையில் இருந்த புகைப்படக் கருவியால் அந்தக் கூட்டத்துக்குத் தெரியாமல் அவர்களை புகைப்படமெடுத்தாள். பணத்தை திருடிக்கொண்டு ஓடி விட்டனர் அந்தக் கூட்டம்.

இவர்கள் உடனே போய் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததோடு தாங்கள் படித்த புகைப்படக் கருவியையும் அவர்களிடம் ஒப்படைத்தனர். நாட்கள் உருண்டோடி மாதங்களாகின. ஆனால் பொலிஸாரிடம் இருந்து எத்தகவல்களும் வரவில்லை. இ நான்கு மாதங்களின் பின்பு இவர்களை அவசரமாக பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு தகவல் வந்தது. குமாருடைய குடும்பம் பொலிஸ் நிலையத்தை அடைந்தனர். பொலிஸ் அதிகாரி "ஒரு நல்ல விடயமொன்றைச் சொல்ல உங்களை இங்கு அழைத்தேன்.

உங்களுடைய பணம் கிடைத்து மட்டுமில்லாமல் இவ்வளவு காலம் எங்கள் நாட்டில் இருந்த கொள்ளைக் கூட்டம் நீங்கள் பிடித்த புகைப்படத்தின் மூலம் கண்டுபிடித்துள்ளோம். அவர்களை பிடிக்க உதவிய உங்களுக்கே எங்களுடைய நன்றிகளும், வாழ்த்துக்களும்" என்றார்.

அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் வீடு நோக்கினர். இவ்வளவு காலம் கஷ்டத்துடன் வாழ்ந்த அவர்கள் இப்போது மிகவம் சந்தோஷத்துடன்ட வாழ்க்கை வாழ ஆயத்தமாயினர்.

இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காக ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அநாதை இல்லங்களுக்கு உணவு கொடுக்க ஆயத்தமானார்கள்.

**சினாஸ் அலீம்**
**வர்த்தகப்பிரிவு 2007**

# வாராயோ!

இவ்வுலகத்தின் நியதிகள்
வரையறை போட்ட
முட்கம்பிகளைக் கடந்து
வகையான நட்பை நினைத்து
நெஞ்சத்தை திறந்த
அற்பப்பிறவியொன்று
அடிபட்டுப் போனதம்மா!

கண்ணீர் வரவில்லை
இக்காயம்
இதயத்தை கீறியதால்
செந்நீராய்ச் சொட்டுதம்மா

இதயமும் இதயமும்
பேசிக்கொள்ள
ஆயிரம் தடைகளா?
வா! என் சகியே
நாம் உயிரே செல்வோம்
மனிதச் சஞ்சாரமற்ற
வான வெளியில்
நாம் பறப்போம்
இருளுக்குள் தனித்திருப்போம்

நேற்றைய நினைவுகளையும்
நாளையையும் நாம் மறப்போம்
நீயும் நானும்தான் வாழ்க்கை
நீயும் நானும் தான் உலகம்

ஞானத்தோர் உன் மனமே
அதன் கடிவாளமாகிய
என்னை பூட்டுவதும்
பூட்டாமல் விடுவதும்
உன் விருப்பம்

உன் ஆத்மாவின்
அகம் பூராவும்
உன் நினைவுகள் மட்டுமே
நிறைந்திருக்கட்டும்

பீ. அரவிந்த்

*With Best Compliments From*

SUPERIOR PALAYAKAT Pvt Ltd.
PROPERTY DEVELOPERS

# Superior Palayakat [Pvt] Ltd.

05, Milagiriya Avenue, Colombo-04
35, Torrington Avenue, Colombo-07
Tel: 4517674.
Fax: 2554534
www.palayakat.com


*With Best Compliments From*

I.C.I.S

# *Institute of Computing & Information System*

8B, Arthurs Place,
Bambalapity,
Colombo-04
Tel: +94 11 2590975
Mobile: 0777 199317
E-mail: info@icisystem.net.

http://www.icisystem.net



# அபாரப் பலி

மாலை நேரம் மங்கிக்கொண்டு வருகிறது. சூரியன் தன் கடமையை முடித்து விட்டு தன் இடம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். பறைவகள் எல்லாம் கூட்டம் கூட்டாமாக தம் இருப்பிடங்களுக்கு சென்று கொண்டிருக்கின்றன. உழைப்பாளிகள் எல்லாம் தாம் உழைத்த திருப்தியில் மிகவும் சந்தோஷமாக வீர நடையுடன் தம் வீடுகளை நோக்கி விரைகின்றனர்.

ஆனர் இவளின்ட மனதில் தான் எப்போதும் துக்கம்,கவலை. அவள் சற்று தம் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை நினைத்துக்கொண்டு தன் கணவரின் ஆத்ம ஷாந்திக்காக விளக்கேற்றிவிட்டு தெய்வத்திடம் பிரார்த்தித்துக் கொண்டான். அவன் தினம் நினைக்கும் நிகழ்வுகளை இன்றும் நினைத்துப் பார்க்கிறாள்.

ஆம்! அவன் பெயர் தான் ஆனந்தன். வங்கியில் கணக்காளராக வேலை செய்பவன். அவன் எச்சந்தர்ப்பத்திலும் நேர்மை தவறாதவன். தன் சேவையை தெய்வத்துக்காகவே செய்கிறேன் என்று தன் மனசில் தினந்தோறும் நினைத்துக் கொள்வாள்.

அவன் தன்னுன் வேலை செய்பவர்களுடன் மிகவும் அன்பாகவும், மரியாதையுடன் பழகுவான். அவர்களும் இவனுடன் அப்படித்தான் பழகினார்கள். ஆனால் அவனோ தன் பின்னால் போலி அன்பைக் காட்டிக் கொண்டு தனக்கு எதிராகச் சிலர் செயற்படுகின்றனர் என்பதை அறியாதிருந்தான்.

ஆனால் அவனுக்கு எதிராகச் செயல்பட்ட அந்நால்வரும் வங்கி உரிமையாளருக்கு மிகவும் நம்பிக்கையும் விசுவாசமுமுடையவர்களாக இருந்தனர். அவர்கள் நால்வரும் ஆனந்தனைப்போல் பெரிய பதவியிலிருக்க வில்லை. ஒருவன் வங்கியை துப்பரவு செய்பவன். மற்ற ஒருவன் அடிக்கடி தேநீர் பங்கிட வருபவன். மற்றைய இரண்டு பேரும் வங்கிக் காவாலர்களாக விருந்தனர். இப்படி இருக்கையில் ஒருநாள் உரிமையாளர் சாப்பிடச் சென்ற நேரம் பார்த்து, காரியாலயத்தை துப்பரவு செய்பவன் போல் காரியாலயத் துக்குள் நுழைந்தான். அங்கு ஒருவரும் இருக்கவிலலையாதலால் அலுமாரியைத் திறந்து பத்தாயிரம் காசுக் கட்டொன்றை எடுத்து தன் சட்டைப் பைக்குள் வைத்து (கொண்டு) விட்டு வெளியே வந்து விட்டான்.

ஆனந்தன் தன் பகல் சாப்பாட்டை முடித்துக் கொண்டு காரியாலத்துக்குச் சென்று தன்வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான். உரிமையாளரும் வந்து சேர்ந்து விட்டார். "ஐயையோ நான் மறந்து போய் அலுமாரியில் கையை வைத்து விட்டு வெளியே போனான். இப்படி மறதியாளராக இருந்தால் எப்படி கம்பனியை முன்னேற்றிச் செல்வது" என்று தனக்குள்ளே புலம்பியவாறு அலுமாரியைத் திறந்தான்.

என்ன ஆச்சரியம்! உள்ளே வைத்த பணத்தைக் காணவில்லை. "இக் காரியாலயத்துக்குள் எவரும் என்னை அறியாமல் வரமாட்டார்களே ஆனந்தன் மட்டும் தான் வருவான். ஒரு வேளை அவன் எடுத்திருப்பான்" என்று எண்ணிக் கொண்டு அவனருகே வந்தான்.

"என் ன ஆனந்தன் அலுமாரியில் வைத்த பணக்கட்டைக் காணோம். உன்னைத் தவிர யாரும் இதுக்குள்ள வாரல்ல. எனவே நீதான் பணத்தைக் களவாடியிருக்கிறாய்" பணத்தை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் சொல்... சொல் இல்லாவிட்டால் உன்னை பொலீஸிடம் ஒப்படைத்து விடுவேன்" என்று கத்தினார். பொலிஸிடமும் ஒப்படைத்தான்.

பொலிஸ் நிலையத்தில் வைத்தும் அவனை அடிக்கு மேல் அடித்தார்கள் உண்மையை வரைவழைப்பதற்காக, ஆனால் நான் எடுக்கவில்லை என்ற ஒரே சொல்லையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தான். பின்பு அவனை விடுதலையாக்கி விட்டனான். திரும்பவும் அவனை வேலையில் சேர்த்து கொண்டான்.

மீண்டும் ஒருநாள் அவன் அவசரத் தேவைக்காக வெளியே போய்விட்டு காரியாலயத்துக்குள் நுழைந்த போதுதான் அவன் அதைக் கூறினான். உரிமையாளருக்கு இப்போதுதான் புரிந்தது இங்கு எடுபிடி வேலை செய்பவர்கள் பணம் திருடுபவர்கள் என்று. அன்றிலிருந்து அவர்களை வேலையிலிருந்து விலக்கி விட்டாள். மறுநாள் வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் தன்னைக் காட்டிக் கொடுத்ததற்காக அந்நாலவரும் துப்பாக்கியால் ஆனந்தனைச் சுட்டுக் கொண்டுபோட்டார்கள். இன்று அவருடைய முதலாவது நினைவு தினம்.

"அம்மா எனக்குப் பள்ளிக்கூடப் பாடத்தைச் சொல்லித் தாங்கோ!" என்று தன் மகளின் குரலைக் கேட்டு சுயநினைவுக்கு வந்தவளாக வாசலை நோக்கி நடந்தாள்.

மு.ரஸா
வர்த்தகப்பிரிவு 2007

## நிஜமே..

அழும் குழந்தைக்கு பால் கொடுக்க ஆசை...
பசியென்ற கணவருக்கு பரிவோடு பரிமாறிட ஆசை...
மாமி மாமாவோடு மனந் திறக்க ஆசை...
குழந்தையின் பிறந்த நாளில் அனாதை இல்லங்களுக்குச் சென்று
அள்ளிக் கொடுக்க ஆசை...
முதியோர் இல்லங்களுக்குச் சென்று
முதியோரிடம் ஆசி பெற ஆசை...
யாவும் கனவாகிப் போனது முதிர் கண்ணிக்கு!

## அடடே...

எதிரே விதவை - சகுனம்
சரியில்லை என்று கூறி
தாமதமாகச் சென்றான்
நீதி மன்றத்துக்கு...
விவாகரத்து கேட்க...!

## ரசனை

இல்லாததில் இருக்கும் மனசு!
இருப்பதில் இருப்பதில்லை எப்போதும்!
போதும் என்ற மனது பொழுது
போனதும் தான் வருகிறது...!
உழைப்போடு உணர்வு கலந்து பருகும் போது
இளநீராய் இனிக்கிறது இந்த வாழ்க்கை...!

## ஹைக்கூ

குடி குடியைக் கெடுக்கும்
சொல்லிக் கொண்டான்...
குடிக்க பணம் இல்லை...!

## அன்பு

அன்பு
என்ற தலைப்பில்
மிகச்சிறிய
கவிதை கேட்டார்கள்...

அம்மா
என்றேன் உடனே!

கேட்டது
அம்மாவாக இருந்தால்
இன்னும் சின்னதாய்
நீ... என்று!

## யார் குருடு?

என்ன புண்ணியமோ...
வாசலில் கையேந்தும்
குருடனைக் கூத்து போய்
நோயின் உண்டியலில்
போடும் பணத்தால்!

## பக்தி

நவகிரங்களை வழிபடுகையில்
சுற்றுக்களை எண்ணவதிலேயே
எதை வேண்டி
எதைப் பெறுவது?

## வலியின் ஒலி

வாழ்ந்து கெட்டவனின்
பரம்பரை வீட்டை
விலை முடிக்கும் போது
உற்றக் கேள்
கொல்லையில்
சன்னமாக எழும்
பெண்களின் விசும்பலை

## வலி

விழுங்கிய மீன்
தொண்டையில் குத்துகையில்
உணர்கிறேன்
தூண்டிலின் ரணம்.

## தண்ணீர்

குடிப்பதற்கு இல்லை
தண்ணீர்...
ஆதலால் மக்கள் கண்ணில்
கண்ணீர்!
ஊருனுள் புகுந்தது
தண்ணீர்...
மறுபடியும் மக்கள் கண்ணில்
கண்ணீர்!

## சுனாமி

எழுந்து நின்றன
வானுயர கட்டிடங்கள்
சரிந்து விழுந்தன
கண்ணிமைக்கும் நேரத்தில்
காரணம் ஏனோ
நானறியேன் சுனாமி!

## மழை


வருவாய் வருவாய்
எனக் காத்திருந்தேன்...
வந்தாய் நீ உள்ளே
சென்றேன் நான் வெளியே!

**எம். நிரோஷன்**
**கணிதப்பிரிவு 2007**

*With Best Compliments From*

# ARADHANA GOLD HOUSE

Dealers in 22kt Solid Gold
Jewellery



No.53, Main Street,
Pelmadulla,
Tel: 0773108626

No. 05, Ratnapura, Road,
Agalawatta.

*With Best Compliments From*

**Study in**

UK
Australia
Malaysia
Cyprus
Switzerland
Japan
Italy
USA
Canada
Singapore

# METROPOLITAN SCHOOL

562/9, Lower Bagattalle Road, Colombo-03
Tel: 011 2505954 Fax: 011 4520976
E-mail: info@mbssl.net
Web: www.mbssl.net

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With Best Compliments From*

# ZAIRAZ INDUSTRIES

**MANUFACTURE ELECTRONICS GOODS & HARDWARE**

No. 75, Diggala Road,
Henamulla,
Panadura.

Telephone: 038 2298802
Mobile : 0777 709792
E-mail : sidiki@slt.lk

*With Best Compliments From*

# CITY CABS

**24 HOUR SERVICE**

City Cabs

# 2552222

**HEAD OFFICE:**
422, Galle Road,
Colombo-06.
Tel: 94 11 2552222-4
94 11 2559292
94 11 2507171
Fax:94 11 2362256

**BRANCH:**
No.186,
Jayantha Weerasekara Mw.,
Colombo-10
Tel: 94 11 5333812
Fax: 94 11 2362256

webside: www.citycabsbooking.com
E-mail: citycabs@sltnet.lk / info@citycabsbooking.com

# ROYAL COLLEGE
# TAMIL LITERARY ASSOCIATION

## PAST CHAIRMAN AND SECRETARIES

| Year | Chairman | Secretary |
|---|---|---|
| 1974 | T.Premkumar | S.jayendran |
| 1975 | S.Manoharan | A.Dayananda |
| 1976 | S.Jayabalasingam | S.Ramachandra |
| 1977 | S.Ramachandra | S.Vasanthakumar |
| 1978 | S.Vasanthakumar | A.H.M Dulip Nawaz |
| 1979 | S.Arulanthan | V.R Nadeswaran |
| 1980 | C.V Parthipan | S.Venkadeshan |
| 1981 | K.Vasikaran | M.Varagunam |
| 1982 | S.Sivapriyan | A.S Subaratham, V. Ananden |
| 1983 | V.Anandan | M. Sridaran, S. Sutharshan |
| 1984 | T.Paraneetharan | P.Selvarajh |
| 1985 | N.Ratnasiva | S.Sivakumaran |
| 1986 | W.Siwaharan | R.Niranjanan |
| 1987 | S.S Mohan | D. Richard, A.Anuraj |
| 1988 | S.Prabahar | K.Thayaparan |
| 1989 | T.Soumyrajah | A.Suwaminathan |
| 1990 | W.Udayashankar | M.Manivannan |
| 1991 | P.Gritharan | J.Devashankar, G.Amuthan |
| 1992 | N.Kumarakulasingham | E.G.J. Vethanayagam |
| 1993 | E.G.J. Vethanayagam | Y.Muhunthan |
| 1994 | Y.Manoharan | K.Nareshkumar |
| 1995 | S.Nilucksha̅n | Y.Arunan |
| 1996 | K.Ramanaharan | L.Jayanthan |
| 1997 | G.S. Sethukavalar | P.Thiruvarangan, S.Sutharshan |
| 1998 | S.Bawa | B.Yamunaharan |
| 1999 | T.Saravana | R.Rathisan,S.S Kirubananthan |
| 2000 | S.Mayuran | N.Sangeethkanna, T. Yogendran |
| 2001 | S.Karthick | M.Nesajeevan, S. Nimalshan |
| 2002 | U.L.M Resha | S.Sidharth, M.Amsrajh |
| 2003 | K.Partheeban | S.Vithushan, M.Aslam |
| 2004 | N.Neshanthanan | T.Sanjeevan, S.Samson |

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With Best Compliments From*

**Best choice for life**

# ROYAL GOOD HEART

**100% PURE PREMIUM QUALITY**

## Vegetable Oil


**20**
**LITRES**
**18KG**

**Ingredients:**
**Refined bleached and deodorised fractionated palm olein**

**Distributed By:**
**MEDICEYLON (PVT) LTD**
**No. 32, Wolfendhal Street,**
**Colombo-13**
**Tel: 2432935**

**MADE IN MALAYSIA**

*With Best Compliments From*



# S.R.Jewels Marrt

***Dealers in 22Kt.Gold Jewellery, Silver and Gems***

**6/S, SEA STREET, JUNCTION,**
**COLOMBO-11**
**TEL: 2332641**

# ROYAL COLLEGE
# TAMIL LITERARY ASSOCIATION

## Past Editors

| | |
|---|---|
| 1976 | S.Sivakumaran, S.Chandreshan |
| 1977 | N.Navaneethan |
| 1978 | A.H.M Dulip Nawaz, R.Loganthan |
| 1979 | T.Shrivijayan, M.Gopiraj |
| 1980 | P.Jegatheasan, T.Shrikumaran |
| 1981 | S.Sivapriyan, A.S. Sabarathnam |
| 1987 | S.Suresh Kumar, S.Pirabahar |
| 1990 | Y.Aravindh, S.Senthilkumar |
| 1991 | V.Sukathiswaran |
| 1992 | Nareshkumar, Satheeshkumar |
| 1994 | S.Aravinthan |
| 1995 | M.Ziharaniz |
| 1996 | C.I Azziyan |
| 1997 | Vaseekaran |
| 1998 | M.Rumy |
| 1999 | R.Baramavinayagan |
| 2000 | P.S Senthuran |
| 2001 | S.Geerthan |
| 2002 | S.Dinesh |
| 2003 | Azeem A.Makeen |
| 2004 | P.Suntharkumar,M.Nishath,J.Nitharshan |

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

# Food & Co-Sponcerd By

# M.A.M. IMRAN SHANFARI

&

# M.A.M. INSAAF SHANFARI

# இலக்கு + நேரம் + முயற்சி - முதலிடம்

சிறகில்லாத பறவையால் பறக்க முடியாது
இலக்கில்லாத மனிதனால் வெற்றி பெற முடியாது...

வாழ்க்கைப் பந்தயத்தில் முதலிடத்தை: இல்லாவிட்டால் ஆறுதற் பரிசையாவது பெற ஹோமேசேபியன் சேபியன் ஆகிய எமக்கு ஒரு இலக்கு நிச்சயம் அவசியம்.

முகவரி இல்லாக் கடிதம் ஊர்போய்ச் சேராது. எந்த இடத்திற்கு போக வேண்டும் என்று விவரமாகக் கேட்டால் அந்த இடத்திற்கு போய்ச்சேரலாம். இதே போல் எமக்கென்று ஒரு இலக்கை அமைத்துக் கொண்டாற்தான் நாம் சரியான ஒரு இடத்தை சமூகத்திலடையலாம்.

நானொரு பொருள் வாங்க 138 பஸ் எடுத்து புறக்கோட்டை செல்கிறேன். செல்லும் வழியில் கூட பயணிப்பவரொருவர் (நண்பன், பெற்றோர், உறவினர்) அப்பொருள் புறக்கோட்டையை விட பொரளையில் தரமானது ஆகவும் இலாபகரமாகவும் கிடைக்குமென்கிறார். நான் உடனேயே புறக்கோட்டையில் இறங்கி அங்கு அப்பொருளைப் பற்றி விசாரிக்காது எனது நோக்கை மாற்றை 103ல் ஏறி பொரளை சென்று அதே பொருளை அதிக விலையில் வாங்குகிறேன். இவ்வாறேதான் பலபேர் வாழ்க்கையில் என்ன செய்வது, எப்படி முடிவெடுப்பது என்பது தெரியாமலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். முதலில் நாம் ஒரு SMART ஆன இலக்கை நிர்ணயிக்க வேண்டும்.

S pecific
M easurable
A chievable
R ealistic
T ime Bound

பின் அந்த Smart ஆன இலக்கை Main ஆகக்கொண்டு மற்றையவற்றை (விட்டுவிடுங்கள் என்று கூறுவில்லை) Part time ஆக்கிவிடுங்கள். இவ்வாறு ஒரு சிறந்த அடையக்கூடிய இலக்கைத்தீர்மானித்த பின்னர் என்ன செய்ய வேண்டும்.

உங்கள் இலக்கை, செயற்பாட்டைப்பற்றி எதிர்மறையாகப்பேசி உங்களைப் பலவீனப்படுத்தும் யாராக இருந்தாலும் வெட்டுங்கள். (அவர்களுடன் பேசுவதை வெட்டிவிடுங்கள்) நீங்களும் உங்கள் இலக்கும் மட்டும் சுதந்திரமாக வாழுங்கள். இப்போது உங்களிற்கும் உங்கள் இலக்கிற்கு மிடையில் யாருமில்லை ஆனால் நீண்ட இடைவெளி... இனி அந்த இலக்கை எப்படி துரத்திப்பிடிப்பது?

மிக முக்கியமாக நாம் நேரத்தை நேரம் கிடைக்காதவாறு பயன்படுத்த வேண்டும்.

பேசிய வார்த்தை
தொடுத்த அம்பு
தவறவிட்ட வாய்ப்பு
கடந்துவிட்ட நேரம்

என்பவை போனால் கிடைக்காதவை ஆனால் கிடைக்கும் போது சரியாகப் பயன்படுத்தினால் கிடைக்காதது இல்லை.

இவற்றுள் நேரம் மிக முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. இந்நேரம் எனக்கு, உங்களுக்கு, புஷ்இற்கு, பின்லேடனுக்கு, பில்கேஸ்ற்றிற்கு, யாராக இருந்தாலும் ஒரு நாளைக்கு 24 மணி நேரத்தையே வழங்குகிறது. இப் பாரபட்சம் பாராத நேரத்தை நாம் சரியாகப் பயன்படுத்தாது நேரத்தைக் குறை கூறல். கடற்காற்றை சரியாகப் பயன்படுத்தாது, சாதகமாக செல்ல வேண்டிய திசையில் காற்று வீசும் பாய்மரத்தை விரிக்காது ஒரே இடத்தில் தேங்கி நிற்கும் கப்பல்களாகிய எமது குற்றமா இல்லை காற்றாகிய நேரத்தின் குற்றமா? இந் நேரத்தை மிகச் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டிய காலம் இளமைக் காலம். இக்கால கட்டத்தில் எம்மைப் பொறுத்தவரை சாதிக்க முடியாதது எதுவுமில்லை.

Henry Ford தனது இளமைக்கால முயற்சியால் Ford கார் உற்பத்தி நிலையத்தை ஆரம்பித்தவர். அவரது 75வது வயதில் அவரை ஒரு பத்திரிகையாளர் பேட்டி கண்டார். "நீங்கள் சேர்ந்து வைத்திருக்கும் பணத்தை யெல்லாம் எனக்குத் தருவீர்களா?" என்றார் நிருபர். என்னிடமுள்ள பணம் முழுவதையும் தருகிறேன். ஆனால் நீ உன் இளமையைக்கொடு அது இருந்தால் என்னால் இதை விட பலமடங்கு பணம் உழைத்து சம்பாதிக்க முடியும் என்றார். Henry தனது இளமையிலும், உழைப்பிலும் வைத்திருந்த நம்பிக்கை எமக்கும் இருக்க வேண்டும்.

'கனிகள் விழவில்லையானாலும்
கல்லெறிவதை நிறுத்தாதே' என்ற வாலியின் வரிகளிற்கேற்ப நாம் வாழ்வின் வெற்றிக் கனியைப் பறிக்க இப்பொழுதே கல்லெறியத் தொடங்க வேண்டும். உங்கள் இலக்கெனும் கனியைப் பறிக்க தினமும் ஒரு மணி நேரம் அதிகமாக இனிமேல் கல்லெறியுங்கள். அதுவே ஒரு வருடத்திற்கு 360 மணி நேரங்கள் இது உங்களை வாழ்வில் உங்கள் இலக்கை நோக்கி முன் தள்ளுகிறது. எனவே கடின உழைப்பால் நீங்கள் உங்கள் வாழ்வின் இலக்கை எதிர்பார்த்ததை விட விரைவாக அடைய வாழி வகுக்கிறீர்கள்.

நேற்று உடைந்துபோன பானை
நாளை மதில் மேல் பூனை
இன்று கையில் வீணை

என எண்ணி இன்றைய நாளை இயன்ற வரை இலக்கிற்காகப் பயன்படுத்தி வாழ்வில் ஆறுதற் பரிசில்ல முதற் பரிசையே பெறுவோம்.

எஸ். விஸ்வா

# நவில்கின்றோம் நன்றிகள் பலகோடி

எமது அழைப்புதனை மனமுவர்ந்து ஏற்று பற்பல சிரமங்களுக்கு மத்தியிலும்கூட எம்விழாவிற்கு பிரதம விருந்திரனாய் வருகை தந்து சிறப்பித்த திரு. தை தனராஜா ஐயா அவர்களே, திருமதி தனராஜா அம்மணி அவர்களே....

எமது மன்றச் செயற்பாடுகள் முதல் அனைத்து புறக்கீர்த்திய நடவடிக்கைகளுக்கும் துணையாய் நிற்கும் எமது பாடசாலை அதிபர் திரு. உபாலி குணசேகர ஐயா அவர்களே....
மறைந்திருக்கும் எம்மவர் திறன்களை வெளிக்கொணர அரும்பாடுபட்டுவரும் பிரதியதிபர் திரு. மா. கணபதிப்பிள்ளை அவர்களே...

மன்றம் மேன்மையுற உறுதுணையாய் நிற்கும் பொறுப்பாசிரியர் திரு. இராஜசூரியர் அவர்களே! உதவி பொறுப்பாசிரியர்கள் திருமதி ர. பிரேம்நாத், திருமதி. பிரபாகரன், திருமதி. சு. கோபால கிருஷ்ணன், திரு. அ. சரவணன் திருமதி. உதயக்குமார் ஆசிரியர் அவர்களே, ஏனைய ஆசிரியர் அவர்களே....

பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் நடுவர்களாகப் பங்குபற்றிய நடுவர்களே....

காலநிலைச் சீர்கேடு, தவணைப்பரீட்சைகள் எனப் பல தடைகளையும் தாண்டி எமது அழைப்பிற்காய் வருகைதந்து பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் பங்குபற்றிய வெளிப்பாடசாலை ஆசிரியர்களே மாணவர்களே....

விளம்பரங்கள் தந்த விளம்பரதாரர்களே....

இரவு பகலென்று வேறுபாடின்றி உழைத்து சுவரொட்டி, அழைப்பிதழ், தமிழ்நயம் 2005 அச்சிட்டுத்தந்த ஏ. ஜே. அச்சகத்தினரே, துள்ளியமான ஒளி, ஒலி வழங்கிய நிலாம்தீன் எலக்ரோனிக்ஸ் நிறுவனத்தினரே.....

எமது கணனி வடிவமை சிறப்புற அமைத்துத்தர ஒத்தாசைபுரிந்த பழைய மாணவர் எஸ். கோகுலவர்தன் அவர்களே என்றென்றும் உடன்நின்று உழைக்கும் உடன்பிறவா உறவுகளே எமதருமை வேத்தியர்களே....

கலைவிழாத்தன்னை கரகோஷங்களால் அலங்கரித்த ரசிகப்பெருமக்களே குறிப்பிட மறந்த குறிப்பிடவேண்டிய அனைத்து நெஞ்சங்களே....

உங்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் பலகோடி....

**செயற்குழு 2005/2006**
**தமிழ் இலக்கிய மன்றம்.**

தமிழ் நயம்-2005
றோயல் கல்லூரி
தமிழ்
இலக்கிய
மன்றம்

*With Best Compliments From*

# SUKNDRAN
# SUMAN
# VALLUVAN

*With Best Compliments From*



# HAMEED FOODS



Take Away All Items



223, Haveloke Road,
Wellawatte, Colombo-06

Tel: 0112590293
Mobile: 077591101

# விடைபெறுகின்றோம்
# நீங்காத நினைவுகளுடன்



**இதழாசிரியர்கள்**

(05)


நயம் படைத்து
தடம் பதித்து.......


சோதனைகள் கடந்து
சாதனைகள் அடைந்து
நிறைவாய் விடை பெறுகின்றோம்.

இதழாசிரியர்கள்"
தமிழ் நயம் 2005

மு.சினாஸ் அலீம்

மு.இன்பாஸ்


With
Best Compliments
From:
Yoganathan
Laharinyon



Best Wishes From
A'CROSS
DESTINATE YOUR DESIRES
EXOTIC HOLIDAYS
PILGRIMAGES
STAR CRUISE
VISA SUPPORT
A'CROSS PRIVATE LIMITED
410B, Galle Road, Colombo-06, Srilanka
TeL :+94-774-528877
Fax :+94-112-360813
Email : info@a-crosstravels.com
www.a-crosstravels.com